"குடி அரசு" பதிப்பக வெளியீடு 2.

இராமாயண : :
: : ஆராய்ச்சி.

(முதற் பாகம்.)

பால காண்டம்.

மூன்றாம் பதிப்பு 1000.

1936

"KUDI ARASU" PUBLISHING HOUSE,
— ERODE —

விலை] [அணா 4.

"குடி அரசு" பதிப்பக வெளியீடு 2.

இராமாயண ஆராய்ச்சி.

(முதற்பாகம்)

பாலகாண்டம்.

மூன்றாம் பதிப்பு 1000.

"குடி அரசி"ல் சந்திரசேகரப் பாவலர் என்பவரால் 'இதிகாசங்கள்' என்னும் தலைப்பின் கீழ் வெளிவந்த இராமாயண ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தொகுத்து

ஈரோடு

"குடி அரசு" பதிப்பகத்தாரால்

வெளியிடப்பட்டது.

1936

விலை அணா 0-4-0

(Rights Reserved by the Publisher.)

முதற்பதிப்பு	2000
இரண்டாம் பதிப்பு	2000
மூன்றாம் பதிப்பு	1000
ஆக பதிப்பு 3-க்கு	5000

உண்மை விளக்கம் பிரஸ்,

ஈரோடு.

நான்முகம்.

இதிகாசங்கள் என்ற சொல்லுக்குப் பொருள் பழைய கதைகள் என்பது. பழைய கதைகளெல்லாம் இப்போதுத் தலைப்பின்கண் வருமோ என்றால் அவை வாரா. இராமாயணம், பாரதம் என்ற இரண்டுமே இதிகாசங்களெனப் பெயர் பெறுவன. இவைகளை நன்றாக ஆராய்ந்து படிப்பதால் பழைய காலத்திலிருந்த ஆரியர்களது பழக்க வழக்கங்களும், நீதி முறைகளும், இன்னும் அவர்களைப்பற்றிய ஒழுக்க முறைகளும் நன்கு புலனாகும். ஆதலின் ஈண்டு தலைப்பிட்டு அவ்விரண்டு நூல்களையும் ஆராயத்தொடங்குகின்றோம். இவ்வாராய்ச்சியைப் படிப்போர் இதனை ஆராய்ச்சிக்கண் கொண்டு நோக்கவேண்டுகின்றோம். முதற்கண் இராமாயணத்தை எடுத்துக்கொள்வோம்.

இராமாயணம்.

இராமாயணம் என்பது இராமன் என்ற ஆரிய மன்னவனின் வரலாறு. தற்காலம் இவ்வரலாற்றை அறியாதவர் இலர். இது அவ்வளவு தூரம் ஆரியர்களால் தமிழ் நாட்டில் பரப்பப்பெற்றுள்ளது. நம் தமிழ் மக்களில் பெரும்பாலார் இவ்விராம சரித்திரம் நம்மவர்களைச் சேர்ந்த சரித்திரமென்றும், இராமபிரான் திருமாலின் அவதாரமென்றும், அது நம் தெய்வமென்றும் நினைத்துப் பாராட்டும்படி ஆரியர் செய்துவிட்டனர். இப்போது இச்சரித்திரம் பல ஊர்களில் வித்வான்கள் படிக்க, பலர் கூடிப் பத்தி சிரத்தையோடும் கேட்கப்பெறுகின்றது. அவ்வாறு படிக்கும் வித்வான்களும் கேட்கும் அறிஞர்களும் இக்கதையின் உண்மையை அறிய வேண்டிக்கொள்ளுகின்றோம். அவர்கள் தயவு செய்து கீழே வரும் ஆராய்ச்சிக் கட்டுரையை கவனித்துப் படிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். அவர்கள் படிப்பதெல்லாம் தமிழ் மகனாகிய பெரும் புலவர் கம்பர் பாடிய இராமாயணக் கதையே. கம்பர்

தாம் பாடியுள்ள இராமாயணக் கதையைப் படிப்போர் அது முழுதும் உண்மைதானா என்பதை அறிந்துகொள்வதற்காக வட மொழியிலுள்ள இராமாயணத்தையும் படிக்க வேண்டு மென்று அதன் பெருமையை முதலில் எடுத்தோதுகிறார். ஏனென்றால் கம்பர் தாம் பாடியுள்ள பாடல்களில் சிற்சில இடங்களில் தம் கதையை மாற்றி எழுதியிருக்கிறார். புலவர் களில் மிகச்சிறந்தவரி லொருவராகிய கம்பர் இக்கதையைப் பாடிய பின்னரே இது தமிழ் மக்கள் பெரும்பாலரால் படிக் கப் பெற்றது. கம்பர் சிறப்புப் பாயிரத்துட் பாடியுள்ள கீழே வரும் கவிகள் கவனிக்கற்பாலன.

"வைய மென்னை யிகழவு மாசெனக்
கெய்த வும்மிதி யம்புவ தியாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே."

"தேவ பாடையி னிக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி னாருரை யின்படி நான் றமிழ்ப்
பாவி னாலிது ணர்த்திய பண்பரோ."

தமிழ்ப்பெரு மக்கள் வரலாறுகள் பல மலிந்து கிடப்பவும் அவைகளைப் பாடாது அந்நியராகிய ஆரிய வரலாற்றைப் பாடியதால் தம்மை வையம் பிற்காலத்தில் இக ழும் எனவும், தனக்கு மாசு வந்தெய்துமெனவும் தெய்வப் புல வராகிய அவர் அறிந்திருந்தனர் போலும். வால்மீகி முனிவ ருடைய இராமாயணக் கதையைப் பாடத்தொடங்கிய கம்பர் பல இடங்களில் சில செய்திகளை மறைத்தும் சில செய்தி களைமாறு படுத்தியும் பாடியிருக்கிறார். அவைகளை அங் கங்கே வரும்போது எடுத்துக்காட்டுவோம். இங்கே நாம் வால்மீகி சென்ற வழியே வழியாகக் கதையைப் பின்பற்றி ஆராய்வோம்.

பால காண்டம்.

முதல் அத்தியாயம்.

இராமாயணம் ஏழு காண்டங்களாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. அவையாவன: பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தர காண்டம். இவைகளில் முதலாவதான பாலகாண்டத்தை முதலில் ஆராய்வோம்.

இராவணேசுவரனால் துன்பமடைந்த தேவர்கள் யாவரும் இந்திரனோடும் நான்முகனுலகடைந்து தங்கள் குறையைத் தெரிவித்துக்கொண்டிருந்தனர். அப்போது திருமாலும் அங்கே வந்து சேர்ந்தார். உடனே நான்முகனும் தேவர்களும் அவரை பூமியில் மனிதனாகப் பிறந்து இராவணனைக் கொன்று வரவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அவ் வேண்டுதலுக்குத் தாமும் இசைந்து அவர்களை நோக்கித் திருமால், ''தசரத மன்னருக்கு மகனாகப் பிறந்து இராவணனைக் கொன்று பதினோராயிரம் ஆண்டு வாழ்ந்து பின்னர் இங்கே வருவேன்'' என்று கூறினார். அவ்வாறே தசரதனுக்கு மகனாகப் பிறந்தார். இவ்வாறு பிறப்பதற்கு ஆதாரமான மற்ற காரணங்களையும் ஆராய்வோம். அவை:—

(1) ஓர்கால் திருமால் பிருகு முனிவருடைய மனைவியைக் கொன்று விட்டார். அதனால் அம்முனிவர் திருமாலை நோக்கி மனிதனாகப் பிறந்து மனைவியை இழந்து வருந்தும்படி சபித்துவிட்டார். இது முதற் காரணம். இது வால்மீகி ராமாயணம் உத்தரகாண்டம் ஐம்பத்தோராம் சருக்கத்திலுள்ளது. அங்கே விவரமாக ஆராய்வோம். இதே செய்தி மகா ஸ்காந்த புராணம் உபதேச காண்டம் அறுபத்து நாலாம் அத்தியாயத்திலும் கூறப்பெற்றுள்ளது.

(2) சலந்தராசுரனுக்கு மனைவியாகிய பிருந்தையைச் சேரவேண்டும் என்னும் காதல் மிகக் கொண்ட திருமால் அவ்வசுரன் இறந்தமை கண்டு அவனுடலில் நுழைந்துகொண்டு அவளின்ப நுகர்ந்து கொண்டிருந்தார். சில நாட்களில் அவரை அக்கற்பரசி இன்னாரென அறிந்துகொண்டு, "மாயையினால் என்னோடு கூடி, அதனால் பிறர் மனையாளைப் புணரலென்னும் குற்றத்திற்குள்ளாகிய ஏ திருமாலே! உன் மனைவியைப் பகைவன் வஞ்சனையாலெடுத்துப் போகக் கடவன். என் கணவன் உடம்பினைக் குரங்குகளால் நீ கொண்டு வந்ததனாலே நீயும் குரங்குகளோடு சேர்ந்து காட்டில் அலையக்கடவாய்" என்று சபித்தாள். பின் உடனே அவள் தீக்குளித்து கெட்ட தன் உடலைச் சாம்பலாக்கினாள். இச்செய்தி மகா ஸ்காந்த புராணம் தக்க காண்டம் இருபத்து மூன்றாம் அத்தியாயத்திலுள்ளது. பின் திருமால் அவள் சாம்பலிற்கிடந்து புரண்டனர். அதன் பின் அச்சாம்பலில் முளைத்த துளசியை யணிந்து மயக்கந் தீர்ந்தனர் என்ப. இது இரண்டாவது காரணம்.

(3) ஒரு பிரதோஷ வேளையிலே திருமால் மனித உடம்போடு திருமகளைப் புணர்ந்துகொண்டிருந்தார். அப்போது சோதனைக்குச் சென்ற அற்புதாக்கன் என்னும் சிவகணத் தலைவன் அவரை நோக்கி "நீ யாரடா?" என்று கேட்டான். அதற்குக் கொஞ்சமும் வெட்கமின்றி விலகாமல் திருமால் அவள்மேலிருந்தவண்ணமாகவே "கேட்பது யாரடா?" என்றனர். இவ்வெறுக்கத் தகுந்த செயலைக்கண்டு மீண்டு அத்தலைவன் இச்செய்தியை நந்திபிரானிடம் தெரிவித்தான். உடனே நந்திதேவர் அத்திருமாலை பூமியில் இராமனாய்ப் பிறந்து மனைவியைப் பிரிந்து வருந்துமாறு சபித்தனர். இது செய்தி சிவரகசியத்து மூன்றாம் அம்சத்து இரண்டாம் காண்டம் நாற்பத்துமூன்றாம் சருக்கத்தில் காண்க. அச் செய்யுள் வருமாறு:—

"அவனைநீ யாவனடா வென்று கேட்டே
னம்புயப் பெண் ணைத்தழுவ னீங்ககில்லா

னெவனமா துடன்கூடி யிலச்சை யின்றி
யென்னைநீ யாவனடா வென்று கேட்டான்
கவனமுறு மிவன்தூர்த்த னென்று கண்டேன்
கருத்தி லவன்றனைத் தள்ள வல்லே னெம்மான்
சிவனருள்சே ருனதானை குறித்து மீண்டேன்
தேவரி லீதொரு புதுமை யவன்பாற் கண்டேன்''

''மன்னவன் றன் மைந்தனா மிராமனாகி
வந்து பிறந்திடக்கடவ னாகுமன்றே''

இது மூன்றாவது காரணம்.

இதுபோன்றதொரு செய்தி சிவ ரகசியம் 3ம் அமிசம் 2ம் காண்டம் 4ம் சருக்கத்திலும் காணப்படுகின்றது. அதாவது வைகுண்டத்தில் திருமால் பிரதோஷ வேளையாகிய மாலைக்காலத்திலே திருமகளைப் புணர்ந்துகொண்டிருக்க, அங்கே பிருகு முனிவர் அவரைக்காணச் சென்றனர். அப்போது தடுத்த கருடனைச்சாம்பலாக்கி அம்முனிவர் உள்ளே நுழைந்தார். அவர் வருவதைக்கண்ட திருமால் நீங்காமல் புணர்ச்சியிலிருந்தபடியே அவரை வராது நிற்கும்படி கைகாட்டித் தடுத்தனர். உடனே பிருகு முனிவர்,

''எங்காளு மினியவந் திவேளை தன்னி
லேந்திழையைப் புணர்வரோ வுனக்குப் புத்தி
சொன்னாரா ருன்மத்தமுண்டோ வென்று
தூயமா தவன்றான்மா தவனை நோக்கிப்
பன்னாளும் பிரதோடந் தனிலுன் னாமம்
பகர்ந்துளோர் தரிசித்தோர் பரவல் செய்தோர்
துன்னாத நிரயத்திற் புகுவாரென்று
சூழ்கோபத் தாற்சாபஞ் சொல்லிப்போனான்.''

மேலேகண்ட சாபங்கள் பலிக்குங் காலம்வர, திருமால் தேவர்களின் வேண்டுகோளின்படி பூமியில் மனிதனாகப்பிறந்தார்.

இரண்டாம் அத்தியாயம்.

அயோத்தியா புரியிலே சூரியகுல மன்னனாகிய தசரதன் அரசுபுரிந்து வந்தான். அவன் வசிஷ்ட முனிவரின் நல்லு ரையாலும், அமைச்சனாகிய சுமந்திரனுடைய நன் மந்திரத் தாலும் செம்மையாக அறுபதினாயிரம் ஆண்டுகள் அரசு புரிந்தான். இவனுக்கு கௌசலை, கைகேயி, சுமத்திரை என்ற பட்டப்பெண்கள் மூவரும், வேறு அறுபதினாயிரம் பெண்களும் மனைவியர். இவர்கள் ஒருவருக்காவது குழந்தை உண்டாகவில்லை. அதனால் மிகவும் கவலையடைந்த தசர தன் தனது குல குருவோடும் மந்திரிகளோடும் ஒருநாள் பல வாறு சிந்தித்துப் பிள்ளைப் பேறுக்காக அசுவமேத யாகம் செய்வதாகத் தீர்மானித்தனன். குலகுருக்களின் அனுமதி பெற்ற அரசன் தனது மந்திரிகளை நோக்கி குருக்களின் ஆணைப்படி வேண்டும் பொருள்களைத் தயாரிக்கும்படி கட் டளையிட்டனன். அச்செய்தி கேட்ட அவன் மனைவியர் மகிழ்ந்தனர்.

அப்போது சுமந்திரன் அரசனை ஏகாந்தத்தில் பார்த்துப் பின் வருமாறு சொல்லலுற்றான்.

"முன்னர் முக்கால ஞானியாகிய சநத்குமாரர் சொன்ன வைகளைச் சொல்லுகிறேன். காசியப முனிக்கு விபண்டக ரென்ற மகனிருக்கிறார். அவருக்கு ருசியசிருங்கரென்ற ஒரு மகன் பிறப்பான். அந்தக்காலத்தில் அங்க தேசத்திலே ரோம பாதரென்னும் அரசர் தோன்றுவார். அவர் நாட்டில் தீராத பஞ்சமுண்டாக, அதனை நீக்குவதற்காக அம்மன்னர் ஆலோ சித்து தாசிகளால் அம்முனி மகனை அழைத்து வந்து தமது மகள் சாந்தையை மணஞ்செய்து கொடுப்பார். அம்முனி மகன் வந்தால் மழை பெய்து பஞ்சம் நீங்கும். அவரை அழைத்துவந்து தசரதர் யாகஞ்செய்து மகப்பேறடைவார். இவ்விதமாக அம்முனிவர் சொல்லியிருக்கிறபடியால் ருசிய சிருங்கரை அழைத்து வந்து தாங்கள் அந்த யாகத்தைச் செய்யவேண்டும்"

இவ்வாறு சுமந்திரன் சொன்ன மொழியைக்கேட்ட தசரதன் ருசிய சிருங்கரை ரோமபாத மன்னர் எவ்வாறு தமது நாட்டுக்கு அழைத்து வந்தார் என்று கேட்டனன். அந்த வரலாற்றை சுமந்திரன் கூறினான். (அவ்வரலாறு வால்மீகி ராமாயணத்தில் ஒன்பதாவது பத்தாவது சருக்கங்களில் உள்ளது)

(இவ்வாராய்ச்சியில் நாம் குறிப்பனவெல்லாம் நமது சொந்த மொழிகளென எண்ணுதல் கூடாது. வால்மீகி முனிவர் இராமாயணத்தைத் தமிழில் பண்டித நடேச சாஸ்திரியாரும், பண்டித அனந்தாசாரியாரும் மொழி பெயர்த்து அச்சிட்டிருக்கின்றனர். பண்டித தத்தர் என்பவர் ஆங்கில மொழி பெயர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களுடைய சொற்களின் போக்கையே நாம்எடுத்தாளுவோம். இவ்வாராய்ச்சியினால் வால்மீகி ராமாயணம் படியாதவர் மயக்கம் ஒருவாறு நீங்குமென்பது எமது நம்பிக்கை.)

ருசிய சிருங்கர் வரலாற்றை ஆராய்வோம்.

உரோமபாதரென்னும் அங்க மன்னர் சில புரோகிதர்களை யழைத்து ருசியசிருங்கரை யழைத்து வருமாறு ஏவினர். ஆனால் அவர்கள் மன்னரை நோக்கி "யாங்கள் போகமாட்டோம். பாலியராகிய அவரை எங்களால் வசப்படுத்த முடியாது. மாந்தர் மனதைக் கவரச் செய்யும் இனிய சிற்றின்பங்களால் அவரை மயக்கி வசப்படுத்த வேண்டும். நல்ல அழகுள்ள தாசிகளை நல்ல அலங்காரங்களைச் செய்துகொண்டு அவரிடம் அனுப்பி பலவித உபாயங்களைக் கொண்டு அவரை அன்பு கூரச் செய்து வசப்படுத்தி அழைத்துவரச் செய்யவேண்டும்" என்றனர். அதன்படி பல அழகு மிக்க தாசிகள் அனுப்பப் பெற்றனர். அத்தாசிகள் ருசிய சிருங்கரைக் கண்டனர். அம்முனி மகன் தான் ஆசைப்படும்படியான அழகுடையவர்களாக அம்மாதர்கள் இருப்பதைக் கண்டு அவர்களிடம் அன்பு கொண்டனன். அப்பெண்கள் அவனை நன்றாக ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு மகிழ்ச்சியோடு அவனுக்குக் கொழுக்

கட்டை முதலிய பலகாரங்களை ஊட்டினர். அம்முனி வனுடைய ஆச்சிரமத்தில் இவ்வாறு ஆலிங்கனம் செய்து அவரை மயக்கிவிட்டு அவர்கள் தாங்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றனர்கள். அவர்கள் பிரிந்ததும் அவன் மனங் கலங்கி ஓரிடத்திலுமிராமல் மயங்கித் திரிந்து கொண்டிருந்தான். மறுநாள், அவர்களிடம் சென்ற மன தைத் திருப்ப முடியாதவனாய் அவன் மனமருட்டும் அம் மங்கையரிருந்த இடத்திற்குச் சென்றனன். அவர்களும் அவனைப் பலவாறு மயக்கி "நீர் எங்களோடு வந்தால் உமக்கு இதைப்போல இன்பம் அதிகமாகக் கிடைக்கும்" என்றனர். உடனே அவன் தனது தந்தைக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை யெல்லாம் மறந்து அவரிடம் சொல்லாமல் அப்பெண்களோடு புறப்பட்டுச் சென்றான். பின் அங்க தேசத்தை அடைந்து அம்முனி மகன் அரசன் மகள் சாந்தையை மணந்து காம இன்பம் நுகர்ந்துகொண்டு அரண்மனையிலேயே இனிதிருந்தான். உடனே மழை பொழிந்து நாடு செழித்தது.

இவ்வரலாற்றைக் கவனித்துப் பார்த்தால், தனது தந்தைக்குச் செய்யும் பணிவிடையை மறந்து அவரிடம் சொல்லாமல் காம வசப்பட்டு தாசிகளோடு காட்டிலிருந்து ஓடி வந்து நாடுபுகுந்து ஓர் பெண்ணைக் கலியாணஞ் செய்து கொண்ட ஒருவன் கால்வைத்த புண்ணியத்தால் மழை பெய்வது என்றால் அத்தெய்வத்தின் தெய்வத்தன்மைதா னென்னே! தந்தைக்குச் செய்யவேண்டிய கடமையினும் வேசையர் காம வசப்பட்டிருந்ததலே மேன்மையான புண்ணி யம் போலும்! இத்தகைய மகாநுபாவரையே பிள்ளைப் பேறு கருதி யாகம் செய்யத் தொடங்கும் தசரதன் யாக கர்த்தாவாக அழைத்து வருகின்றனன். ருசிய சிருங்கர் வரவைக் கண்டு மழை பொழிந்தவன் இந்திரன். இவ்விந் திரனின் மகிமைகளைப் பின்னர் ஆராய்வோம். பரதார கமனப் பிரியனாகிய இந்திரன் வேசையர் லோலனாகிய ருசிய சிருங்கனைக் கண்டு மகிழாமல் வேறு யாது செய் திருப்பன்?

இந்த ருசியசிருங்கன் வரலாற்றை கம்பர் எவ்வாறு கூறுகிறாரென்று கவனிப்போம். தசரதன் வசிட்ட முனிவரிடம் தன் பிள்ளையில்லாக் குறையைச் சொன்னதாகவும், அம்முனிவர் திருமால் அவனுக்குப் பிள்ளையாகப் பிறக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறதாகவும், அதனால் கலைக்கோட்டு முனிவரை (ருசியசிருங்கரை) அழைத்து வந்து அசுவமேத யாகஞ் செய்தால் திருமால் வந்து பிறப்பார் என்றும் சொன்னதாக எழுதுகிறார். இது வால்மீகி வரலாற்றுக்கு மாறுபட்டது. தசரதனுக்குத் தன்னிடம் திருமால் வந்து பிறக்கப்போவதாகத் தெரியாது அவனிடம் ஒருவரும் சொல்லவில்லை. சுமந்திரன் கூட இதை உணர்ந்தவனுமல்லன். தசரதனிடம் சொன்னவனுமல்லன். கம்பரே உண்மையை மாற்றி வசிட்டர் திருமால் பிறப்பைத் தசரதனிடம் சொன்னதாக எழுதுகிறார்.

மேலும் கம்பர் தமது நூலில், ரோமபாத மன்னன் புரோகிதரை நோக்கி கலைக்கோட்டு முனிவரை அழைத்து வரவேண்டியது என்றதும் அவர்கள் தம்மாலாகாது, மனிதருடைய மனதைக் கவரும் இனிய சிற்றின்பத்தால்தான் அவரை மயக்கி அழைத்து வரவேண்டும் என்று கூறியதும் ஆகிய வரலாற்றைக் கூறாது மறைத்துவிட்டார் அப்பெண்களை "சோதி நுதற் கருநெடுங்கட் டுவரிதழ்வாய்த்தரளநகைத் துணைமென்கொங்கை மாதர்" என்றும், "பனிப்பிறையைப்பழித்தநுதற் பணைத்தவேய்த் தோள் எங்குமிடை தடித்த முலை இருண்ட குழல் மருண்ட விழி இலவச் செவ்வாய்ப் பூங்கொடியீர்" என்றும் வருணித்த கம்பர் அவர்கள் வனஞ்சென்று தவசிகளைப்போல இருந்தார்கள் என்றார். இதுவும் வால்மீகர் கூறாதது. பின் அவர்கள் கலைக்கோட்டு முனியை ஆலிங்கனம் செய்ததையும் கம்பர் மறைத்தார்.

"அம் மாதர்கள் அந்த ருசியசிருங்கர் ஆசைப்படும்படியான அழகுடையவர்களாய்" (வால்மீகி ராமாயணம் பத்தாவது சருக்கம்) என வருவதையும் மற்றும் நாம் மேலே வால்மீகி கூறியதாக எடுத்துக் காட்டியுள்ள வரலாற்றையும்

மறைத்து கம்பர் ருசியசிருங்கரை மிகவும் உத்தமராகக் காட்டுகிறார்.

பின் சுமந்திரனுரைத்த மொழிப்படி தசரதன் "புத்திரருண்டாகச்செய்ய வல்லவராகிய சாந்தையின் கணவரான ருசியசிருங்கரை" அழைத்துவரும் பொருட்டு தானே அங்க நாடு சென்றான் அங்கே ரோமபாத மன்னரால் உபசரிக்கப்பட்டு சின்னாளிருந்து பின் கலைக்கோட்டு முனிவனைச் சாந்தையோடும் அழைத்துக்கொண்டு அயோத்தியை வந்தடைந்தான். அதன் பின் தசரத மன்னன் பிள்ளைப் பேற்றுக்காக அசுவமேத யாகஞ் செய்யத்தொடங்கினான்.

மூன்றாவது அத்தியாயம்.

தாசிப் பெண்களால் மயக்கி நாட்டுக்கு அழைத்துவரப்பெற்ற கலைக்கோட்டு முனிவனை அயோத்திக்கு அழைத்து வந்த தசரதன் அசுவமேத யாகம் செய்யத் தொடங்கினான். யாகக் குதிரை நாடு சுற்ற அனுப்பப்பெற்றது. அரசர்களெல்லோரும் வந்து சேர்ந்தனர். அயோத்தியை யடுத்துள்ள சரயு நதியின் வடகரையில் யாகம் தொடங்கப் பெற்றது.

குதிரையை விட்டு ஓராண்டு நிரம்ப அக் குதிரையும் வந்து சேர்ந்தது. கலைக்கோட்டு முனிவன் தலைமை பூண்டு வேள்வியை நடத்தினான். யாகத்திற்கு நாற்புறத்தும் பிராமணர்கள் உட்கார்ந்துகொண்டு நன்றாய்ச் செழித்திருந்த சோமமென்னும் கொடியைக் கல்லெடுத்து நெருக்கி யாகம் செய்ய வேண்டி அதிலிருந்து ரசத்தை நன்றாகப் பிழிந்தெடுத்தார்கள்.

இருபத்தொரு யூபஸ்தம்பங்கள் நாட்டப்பட்டன. அவைகள் மிகவும் அலங்காரம் செய்யப்பெற்றன. அந்த யூபஸ்தம்பங்களில் அவ்வவ் வானவர்களைக் கருதிப் பசுக்களும் பாம்புகளும் பறவைகளும் நூல் தவறாது கொண்டுவந்து கட்டப்பட்டன. அசுவமேதம் என்னும் அச் சிறந்த யாகத்தில்

விதிப்படி பசு ஹிம்சை செய்யவேண்டிய சமயம் வருகையில் குதிரையும், ஆமை முதலிய நீர் வாழ்வனவும், மற்றும் யாகத்திற்கு வேண்டிய பசுக்களும் ஆகிய இவையெல்லாம் விதிப்படி கொண்டுவந்து கட்டப்பெற்றன. அந்த யாகத்தில் யூபஸ்தம்பங்களில் முந்நூறு பசுக்களும் சிறந்த ஒரு குதிரையும் கட்டப்பட்டிருந்தன.

அரசன் முதல் மனைவியான கௌசலையென்பாள் அக் குதிரையைச் சுற்றிவந்து அக் குதிரையை மூன்று வெட்டாக வெட்டிக் கொன்றாள். பின் அவள் தரும காரியத்தில் விருப்பமுடையவளாய் கலங்கா நெஞ்சுடன் அவ்விரவு முழுதும் கட்டித் தழுவி அந்தக் குதிரையோடு கூடியிருந்தாள்.

பின் கௌசலை, கைகேசி, சுமித்திரை முதலிய இராஜஸ்திரீகளை அத்வர்யு, ஹோதா முதலிய முக்கியமான இருத்துவிக்குகளுக்குத் தட்சணையாகத் தசரதர் கொடுத்துவிட்டார். இருத்துவிக்குகள் இராஜபத்தினிகளைக் கைப்பற்றிக்கொண்டு சிலநேரந் திரிந்தனர். பின்பு அவர்களுக்கீடாக திரவியங்களைப் பெற்று அவர்களை அவ்வரசனுக்கேகொடுத்துவிட்டார்கள். இந்த அசுவமேத யாகம் நடந்த அன்றே கௌசலையும், கைகேசியும், சுமித்திரையும் கருத்தரிக்கின்றனர்.

இந்த யாக விவரமெல்லாம் வால்மீகி ராமாயணம் பதினான்காவது சருக்கத்தில் காணப்படுகிறது. இதனை மொழிபெயர்த்துள்ள பண்டித அனந்தாசாரியார் இந்த இடங்களைப் பின்வருமாறு மொழிபெயர்க்கின்றார். "கௌசல்யை அக் குதிரையை மூன்று கத்திகளால் கொன்றாள். கௌசல்யை ஓர் இரவு முழுதும் அக் குதிரையோடு கூடியிருந்தாள். ருத்விக்குகள் ராஜஸ்திரீகளை மன்னவர் தக்ஷணையாகக் கொடுத்ததனால் கைப்பற்றினர்".

பண்டித நடேச சாஸ்திரியார் பின்வருமாறு மொழி பெயர்த்து எழுதுகின்றார்:— "கௌசல்யை அக் குதிரையை வாளால் சில துண்டுகளாக வெட்டிவீழ்த்தினாள். அன்றியும் ஸ்திர சித்தத்துடன் அவள் புத்திரபாக்கியம் அடையும்

விருப்பத்தால் சாஸ்திர விதிப்படி அன்றிரவு முழுதும் அவ் அசுவத்தின் அருகே இருந்தாள். ஹோதா, அத்வர்யு உத்காதா முதலிய யாக கர்த்தாக்கள் உரிய தக்ஷணைகளைப் பெற்று ராஜ பாரிஸைகளுடன் இருந்து சடங்கு நடத்தினார்கள்''.

பண்டித மன்மத நாதகத்தர் பின்வருமாறு மொழிபெயர்த்து எழுதுகிறார்:—Kausalya with three strokes slew that horse, experiencing great glee. Kausalya with an undisturbed heart passed one nighat with that horse. The Hotas, Adhwaryus and the Ugatas joined the king's wives.

இதன் பொருள் வருமாறு:—கோசலை மூன்று வெட்டில் அக் குதிரையை மிக உற்சாகத்தோடு கொன்றாள். அவள் கலக்கமில்லாத நெஞ்சோடு ஓர் நாளிரவை அக் குதிரையோடு கழித்தாள். ஹோதா, அத்வர்யு முதலிய ரித்விக்குகள் இராஜ பாரிபைகளைப் புணர்ந்தார்கள்.

(பண்டித வில்சன் துரை மகனார்) வேதகால இந்து மதம் (Vedic Hinduisn) என்ற நூலில் பின்வருமாறு எழுதுகிறதாகக் குறிக்கப்பட்டுள்ளது. Kausala is directed to be all night in closest contact wiuh the dead horse In the morning, when the queen is releasedfrom this disgusting and in fact, impossible contiguity a dialogue, is given in the yajush and in the Ashvamedha section of the Sathapatha Brahmna and as explained in the Sutras, as taking plase between the queen and the females accompanying or attending upon her and the principal priests which in brief is in the highest degree both silly and obscene

இதன் பொருள் வருமாறு:—கௌசலை ஓர் இரவு முழுதும் செத்த குதிரையை நன்றாகத் தழுவிப் படுத்திருக்கச் செய்யப்பட்டாள். காலையில் இந்த அருவருப்பானதும்

உண்மையாகவே அசாத்தியமானதுமான அக் குதிரையின் தேக சம்பந்தத்தினின்றும் நீங்கின உடனே யசுர் வேத சதபத பிராமண அசுவமேத அத்தியாயத்திலும் சூத்திரங்களிலும் விவரித்துள்ளபடி இராச பத்தினிகளுக்கும், அவர்களைச் சூழ்ந்துள்ள பெண்களுக்கும், ருத்விக்குகளுக்கும் ஓர் சம்பாஷணை நடைபெற்றது. அது சுருக்கமானதாக இருந்த போதிலும் சொல்லுவதற்கு மிகவும் அசங்கிதமாகவும் அருவருப்பை உண்டாக்குவதாயும் இருக்கிறது.

தெலுங்கில் வால்மீகி ராமாயணத்தை மொழிபெயர்த்துள்ள பண்டித லட்சுமணாசார்லு தமது மொழிபெயர்ப்பில் பக்கம் 181ல் யாகம் முடிந்தவுடன் நடத்துபவன் தனது மனைவியரை குருக்களிடம் தட்சணையாக ஒப்புவிக்க வேண்டுமென்பதும் பின் பணம் பெற்றுக்கொண்டு அப்பெண்களைச் சொந்தக்காரனிடம் ஒப்புவிக்க வேண்டுமென்பதும் சாஸ்திர விதி என்றெழுதுகிறார்.

மேலே கண்ட செய்கைகளைப் பார்க்குமிடத்து ஆரியர்களது அருவருப்பான செய்கைகள் நன்கு புலனாகின்றன. பலசாலியான ஒரு வீரன்கூட மூன்றுவெட்டில் ஒரு பெரிய குதிரையை வெட்டி வீழ்த்துவது சிரமம். அப்படியிருக்க ஓர் பெண், அதிலும் அரசனுடைய முதல் மனைவி பெருங் கூட்டமாக பல தேச வேந்தரும்பிறரும் கூடியிருக்குமிடத்தில் அவர்கள் காண ஓர் குதிரையை மூன்று வீச்சில் மிகவும் உற்சாகத்துடன் வெட்டி வீழ்த்துகிறாள் என்பது மனத்தினாலும் எண்ண முடியாதபடி அருவருக்கத் தக்க செய்கையாக உள்ளது. அப்படியானால், அப் பெண்ணின் மனோபாவங்கள் எப்படியிருந்திருக்க வேண்டும். மேலும் அவ்வாறு வெட்டிக் கொன்ற குதிரையோடு ஓர்நாளிரவு முழுதும் கலங்கா நெஞ்சோடும் கட்டித் தழுவிக் கூடியிருந்தாளென்பதும் சாதாரணப் பெண்களால் செய்யக்கூடாத செயலாகவேயிருக்கின்றது. மனிதர்கள் செயலுக்கு அப்பாற்பட்டதாய் உள்ளது. இவ்வாறு கூடியிருந்ததும் தனியாகவுமல்ல; பல நாட்டு முடி வேந்தர் நடுவில் அமைத்திருந்த பந்தலிலேயே. இதற்குமேல் ஆராயத் தகுந்தது, தசரதன் ராஜபத்தினிகளை ருத்விக்கு

களிடம் ஒப்புவித்ததும் அவர்கள் அப் பெண்களைக் கூடிச் சடங்கு நடத்தியதுமே. அதன் பின்னர் அப்பெண்கள் அரசனிடம் ஒப்புவிக்கப்பெறுகின்றனர்.

இதனால் ஆரியர் தங்கள் குடும்ப விருத்திக்காக இந்த யாகத்தை வைத்திருக்கின்றனரென்பது தெளிவாகிறது. "புத்திருண்டாகச் செய்ய வல்லவரான ருசியசிருங்கன்" முதலியோர் சேர்க்கை பிரசாதத்தால் அப்பெண்கள் பிள்ளைகளை அடைகிறார்கள். இதன்மேல் நிகழ்ந்ததை ஆராய்வோம்.

அத்வர்யு அந்தச் செத்தக் குதிரையின் வபையை இழுத்து எடுத்து அக்கினியில் நன்றாகப் பாகம் பண்ணினான். தசரதன் அவ்வாறு பாகம் பண்ணப்பட்டபோது கிளம்பிய அவ்வபைப் புகையை மோந்து பார்த்து நின்றான். பின் அக்குதிரையின் பிற அவயவங்களெல்லாம் தீயில் பாகம் செய்யப்பெற்றன. பின் தானத்தோடு யாகம் முடிவடைகிறது.

இதனால் ஆரியர்கள் கணக்கிறந்த மிருகங்களையும், பாம்புகளையும், பறவைகளையும், ஆமை முதலிய நீர் வாழ்பவைகளையும் கொண்டுவந்து கட்டி வெட்டித் தீயில் நன்றாகப் பாகம் பண்ணி உண்டுவந்தது தெளிவாகிறது. குதிரை முதலிய மிருகங்களை உண்டதோடு நில்லாது பாம்பு ஆமை முதலியவைகளையும் வதக்கி உண்டனரென்பதே மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது.

மேலே கண்ட வேள்விச் செயல்களெல்லாம் தமிழ் மக்களால் மிகவும் அருவருத்துத் தள்ளப்பெற்றவை. இராம கதையைத் தமிழில் பாடிவந்த கம்பர் தமிழ் மகனாகையால் இவைகளைக் கண்டு வெறுப்படைந்து திகைத்து வருந்தி கேவலமான "இவ்வரலாற்றைப் பாடுவதால் தம்மைத் தமிழுலகத்தார் உண்மை தெரிந்தபோது இகழ்வர்; மாசும் வந்தடையும்" என்றும் புலம்பியுள்ளார். அதனால் அவர் என்ன செய்தார்? இவ்விழிவான யாக வரலாற்றை

முழுவதும் மறைத்துவிட்டார். அவர் பாடல்கள் பின் வருவன:—

(கலைக்கோட்டு முனிவன் தசாதனை நோக்கி)

"என்றனை பற்பல இனிமை கூறிநற்
குன்றுறழ் வரிசிலை குலவு தோளினாய்
நன்றிகொள் அரிமக நடத்த எண்ணியே
இன்றெனை அழைத்ததின் கியம்புவாய்" என்றான்.

"உலப்பில் பல்லாண்டெலாம் உறுகண் இன்றியே
தலப்பொறை ஆற்றினென் தயர் வந்திலர்
அலப்புநீர் உடுத்தபார் அளிக்கு மைந்தரை
நலப் புகழ்பெற இனிநல்கல் வேண்டுமால்"

"என்றலும் அரசநீ இரங்கல் இவ்வுல
கொன்றுமோ உலகமீ ரேழு மோம்பிடும்
வன்றியன் மைந்தரை அளிக்கு மாமகம்
இன்றுநீ இயற்றுதற் கெழுகாண் டென்றான்."

(பின் யாகசாலையிற் புகுந்து கலைக்கோட்டு மாமுனி தீ வளர்த்து ஆகுதி வழங்கினான். உடனே பூதமொன்று தீயினின்றெழுந்தது.)

இவ்வாறு கம்பர் கூறும் வரலாறு வால்மீகி ராமாயணத்தில் பதினைந்தாவது சருக்கத்தில் கூறப்படுகிறது. ஆதலின் பெருங்கவி கம்பர் வால்மீகிமுனிவர் கூறும் அசுவமேத வரலாற்றை அறிந்திலரா எனின், அவர் கூறுவது முதலில் அவ்வாறு நினைக்கும்படிதான் உள்ளது. முதலில் அசுவமேதம் செய்ய என்னை அழைத்தாயாவென்று தசாதனிடம் கலைக்கோட்டுமுனி கேட்டதாகவும், அவன் அவ்வாறே கூறியதாகவும், உடனே கலைக்கோட்டு முனி புத்திரகாமேட்டி யாகம் செய்ததாகவும், பூதம் தோன்றியதாகவுமே கம்பர் கூறுகிறார். இதனால் கம்பர் தமது நூலில் அசுவ

மேதத்தைப் புத்திரகாமேட்டியென மயங்கி எழுதியிருக்கவேண்டும். அல்லது அசுவமேதம் தமிழ் மக்களுக்கு மிகவும் அருவருப்பாக இருக்குமென்று அதனைஎழுதாது மறைத்திருக்க வேண்டும்.

பூதம் தோன்றித் தந்த பாயசத்தை தசரதன் தன் மனைவியர் மூவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தானென்று கூறிய பின்னர் கம்பர்,

"வாம்பரி வேள்வியும் மகவை நல்குவ
தாம்பரை ஆகுதி பிறவும் அந்தணன்
ஓம்பிட முடித்தபின் உலகு காவலன்
எம்பலொ டெழுந்தனன் யாரு மேத்தவே."

என்று கூறுகிறார். இதனால் அசுவமேத யாகம் செய்த பின் புத்திரகாமேட்டியும் செய்தனன் தசரதன் என்பதையும் அசுவமேதம் வேறு, புத்திரகாமேட்டி வேறு என்பதையும் கம்பர் நன்றாக உணர்ந்தவர் என்பது புலனாகிறது. ஆதலான் கம்பர் பரிவேள்வியின் ஆபாசங்களைத் தமிழர் உணர்ந்தால் தமது கதையை மதியார் என்பதை உணர்ந்தே அதை முற்றிலும் கூறாது விடுத்தார் என்றுதான் கொள்ளவேண்டியிருக்கிறது. இவருக்கு வால்மீகி ராமாயணத்தை மொழிபெயர்த்துரைத்தோர் இவ்வசுவமேத யாக வரலாற்றைக்கூறாது விடுத்தனரோ என்று ஐயுறவும் இடமில்லை. ஏனெனில் அக்சோக்க முடையோர் பரிவேள்வி செய்தான் என்ற அளவில் கூட பரிவேள்விப் பெயரையே கூறியிருக்க மாட்டார்கள்.

இராமாயணக் கதையைப் படிப்போர் இதனை நன்கு கவனிக்க வேண்டும். பலன் கருதி இக்கதையைப் படிப்போர் வால்மீகி முனிவர் கூறும் உண்மைக் கதையை மறைத்து வேறு விதமாகக் கதையை மாற்றி எழுதும் கம்ப ராமாயணத்தைப் படிப்பதால் அவர்கள் விரும்பும் பலன் விளையாதென்பதை உணர்வாராக. அதோடு உண்மைக்கு மாறான வரலாற்றைப்படித்துக் கேட்பதால் வரும் பாவத்துக்கும் ஆளாவதுண்மை. ஆதலின் கம்ப ராமாயணத்தை அவர்கள் படியாமல் உண்

மை வரலாறாகிய வால்மீகி ராமாயணத்தை படிக்கக் கடவர். இச்சொல் ஆரியருள் கம்பராமாயணத்தைப் படிப்போருக்கே. தமிழரோ பிற்காலத்தில் உண்மையறியும்போது தம்மை இகழ்வரென உணர்ந்த கம்பர் தம்மவர் சிறந்த வரலாறு பல மலிந்து கிடப்பவும் அவைகளைப் பாடாமல் அந்நியராகிய ஆரியர் வரலாற்றைப் பாடியதோடு உண்மையை உரைக்காமல் சிலவற்றை மறைத்தும் மாற்றியும் எழுதியிருப்பதனால் வால்மீகி ராமாயணத்தையும் படித்து உண்மையறியக்கடவர்.

ஆனால் கம்பர் ஒரு வகையில் தமது கடமையையும் மறந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் ஆரியர் ஆதிக்கம் மிகுந்திருந்தது போலும்! அதனாலேயே அவர்களால் வற்புறுத்தப்பட்டு அவர்கள் அதிகாரத்துக்கும் செல்வாக்குக்கும் அஞ்சியோ, அல்லது அவர்களிடையும் புகழ்பெறும் அவாவினாலோ இதனை அவர் பாடியிருக்கவேண்டும். கம்பர் பரிவேள்வியையும் மகப்பேற்று வேள்வியையும் தசரதன் செய்ததாகக் குறித்துவிட்டு பரிவேள்வியின் விவரத்தை எழுதாதிருப்பதினால் அதைப்படிப்போர்க்கு அதன் விவரத்தை அறிய ஆவல் எழும். உடன் அவர்கள் வால்மீகியைப் பார்த்துத்தெரிந்து கொள்வார்கள் என்று எண்ணியே அவர் பரிவேள்வியும் செய்யப் பெற்றது என எழுதுகிறார். தமிழ் மகனாகிய அவருக்குத் தாம் பாடும் நூலில் இவ்வசுவமேத ஆபாசங்கள் இடம்பெற வேண்டாமென்று ஒரு வேளை அவைகளை அவர் எழுதாது விட்டிருக்கலாம்.

நான்காம் அத்தியாயம்.

மேலே அயோத்தியாபுரியிலே தசரத மன்னவனுடைய முயற்சியினாலே செய்யப்பெற்ற அசுவமேத யாகத்திலே யாவரும் கூடி சோமக் கொடியின் சாறாகிய கள்ளைக்குடித்து குதிரை, பாம்பு, ஆமை முதலியவைகளை வேள்வியிலே பாகம் செய்து உண்டு மகிழ்ந்தனர். யாகமும் நிறைவேறிற்று.

பின் பிள்ளைப்பேற்று வேள்வி செய்யப்பெறுகிறது. தீயினின்றும் ஒரு பூதம் தோன்றிப் பாயசம் தருகிறது. அதை தசரதன் மனைவியருக்குப் பகிர்ந்து தருகிறான். திருமால் தம்மை நான்கு கூறாக்கிக் கொண்டு தம்மில் பாதியாகிய ஒரு கூறுகோசலை வயிற்றிலும், தம்மில் கால்பாகமாகிய ஒரு கூறு கைகேயி வயிற்றிலும், தம்மில் மீந்த பாகமாகிய இரண்டுகூறுகள் சுமத்திரை வயிற்றிலுமாகப் புகவே கருப்நிறைவுற்று, பின் கோசலை இராமனையும், கைகேயி பரதனையும், சுமத்திரை இலக்குமணனையும், சத்துருக்கனையும் பெற்றனர். இவர்கள் நால்வருமே திருமாலின் தோற்றமானவர். உலகினர் கருதுமாறு இராமன் மட்டுமே திருமாலின் பிறப்பெனக் கொள்வது தவறு.

அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆண்டபின்னரே தசரதன் இவ்வேள்வியை இயற்றினன். கம்பரும் இதனையே பாலகாண்டம் திருவவதாரப் படலத்தில் தசரதன் கூற்றாக,

"அறுபதினாயிர மாண்டு மாண்டுற
உறுபகை யொடுக்கியிவ் வுலகை யோம்பினேன்"

என்று கூறுகின்றனர். இதனால் அப்போது தசரதனுக்கு அறுபதினாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே வயதிருக்க வேண்டும். அதன் பின்னரே இராமன் முதலிய நால்வரும் பிறந்திருக்க வேண்டும். இது நம்புந்தரமானதாக இல்லை. இந்த தசரதன் இவ்வளவு காலம் உலகில் வாழ்வதற்கு என்ன தவம் செய்தனனோ? யாரிடம் வரம் பெற்றனனோ? தெரியவில்லை. இவனுடைய மனைவியராகிய கோசலை, கைகேயி, சுமித்திரை முதலியவருக்கும் குறைந்தது அறுபதினாயிரம் வயதாவது இருக்க வேண்டும். பதினாயிரம் ஆண்டுகள் ஆண்ட பின்னர் இவர்களைத் தசரதன் மணந்துகொண்டானென்று கொண்டாலும் இவர்களுக்குக் குறைந்தது ஐம்பதினாயிரம் வயதாவது ஆகியிருக்க வேண்டும். இப்பெண்மணிகள் இவ்வளவு காலம் உயிர்வாழ என்ன தவம் செய்து எவரிடம் என்ன வரம்பெற்றனரோ? தெரியவில்லை. இவ்வளவு வயதான கிழவிகள் எவ்வாறு கருத்தரித்தனரோ? இதுவும் விந்தையே!

தற்காலத்தில் பெண்கள் ஐம்பது வயது வரையில் பிள்ளை பெறுகின்றனர். அதன்மேல் அவர்களுக்குக் கருத் தரிக்கும் தன்மை அற்றுப்போகின்றது. இந்த இராம கதை நிகழ்ந்த காலத்தில் பெண்கள் ஐந்நூறு அல்லது ஐயாயிரம் வயதுவரை கருத்தரித்தனர் என்று சொன்னாலும் ஒருவாறு பொருந்தும் பொய்யாகும். ஆனால் இந்தக் கௌசலை முதலிய பெண்களோ ஐம்பதினாயிரம் வயது சென்ற பின் னர் கருத்தரித்தனர் என்று சொல்வது பொய்யுலகமும் ஒப்ப முடியாததாக இருக்கின்றது. இருந்தாலும் அறுபதினாயிர மாண்டு கடந்த இப்பெண்கள் இராமன் முதலிய நால்வரைப் பெற்றனரெனவே வால்மீகி முனிவரும் கம்பரும் கூறுகின்ற னர். இவ்வாரியப் புரளியை என்னென்பது!

தான் வெட்டிக்கொன்ற குதிரையை ஓர் நாள் இரவு முழுவதும் கட்டித் தழுவியிருந்த கோசலையும் ஏனைக் கைகேசி சுமித்திரையும் பிள்ளையை உண்டாக்கவல்ல கலைக் கோட்டு முனி முதலிய ரித்விக்குகளின் சேர்க்கையில் கருவுற் றனர். அதை மறைத்தற்காகவே பாயச வேள்வியும் செய் யப்பட்டது போலும். உண்மையிவ்வாறிருப்பவும் கம்பர் பாயசத்தை உண்டதினாலேயே கௌசலை யாதியர் கரு வுற்றனர் என்று குறித்திருக்கிறார். உயரிய அறிவினராம் கம்பர் இயற்கைக்கு மாறாக யிவ்வாறு குறித்ததேன்? இயற் கைக்கு மாறும் செய்தியைக் கம்பர் குறித்ததால் இதன் உண்மைதானென்னே என்று நுண்மாண் புலனுடையார் துருவிச் சென்று வால்மீகியைப் படித்து உண்மை தெரிந்து கொள்ளட்டும் என்று கருதிப்போலும் இவ்வாறு குறித்த னர்.

தசரதனுக்கு பட்ட மனைவியர் மூவரைத் தவிர வேறு அறுபதினாயிரம் மனைவியருமுண்டு, இவர்களை தசரதன் தன்னைக்கொல்ல வந்தபரசுராமனிடமிருந்து தப்பும்பொருட்டு மணந்தனனெனக் கூறுவர். இது எம்மட்டுமுண்மை என்ப தைப் பின்னர் ஆராய்வோம். காரணம் எதுவாயிருந்தாலும் தசாதனுக்கு அறுபதினாயிர மனைவியரிருந்தன ரென்பது கதையின்படி உண்மையே.

அரசனே இவ்வாறு அறுபதினாயிரம் காமக்கிழத்தியரைக் கொண்டிருந்தானென்றால் அவன் நாட்டிலிருந்த குடிமக்களின் ஒழுக்கநிலை எவ்வாறிருந்திருக்குமோ? அண்ணாவின்றுகொண்டிருந்தால் பிள்ளைகள் ஓடிக்கொண்டன்றோ நீர் கழிப்பார். தசரதன் தான் ஒருவன் வாழவேண்டிப் பேடித்தனமாக அறுபதினாயிரம் பெண் மக்களின் நல்வாழ்வைக் கெடுத்தானே; ஐயோ! பெருங்கொடும் பாவம். உலகினர் இரண்டு பெண்டாட்டிக்காரனுக்கு கொண்டை யென்னத்திற் கடி கொண்டை என்பர். ஒரு மனைவியைக்கொண்டு காலங் கழிப்பது மிகவும் கடினமாக இருக்கிறதனால் அறிவுடைய நன் மக்கள் இரண்டாமுறை மணக்கவேண்டுமென்று கனவினும் மறந்தும் நினையார். இரண்டு பெண்டாட்டியால் உண்டாம் திண்டாட்டமே மிகக் கொடியது. ஒருவன் அறுபதினாயிரத்து மூன்று மனைவியரை வைத்திருந்தானென்பது கேட்கக்கூட மிகவும் அச்சத்தையும் அருவருப்பையும் தருகின்றதன்றோ? அந்தோ பரிதாபம்! அறுபதினாயிரத்து மூவருக்கு ஒருவன் கணவனென்றால் அவர்கள் ஒவ்வொருவரையும் கவனிக்குமிடத்து அவன் இருந்தும் இறந்தவனேயாவனல்லவா? அவர்கள் என்ன தாசி என்னப்பட்டவரோ? பாவம்! பாவம்!! நிற்க, கோசலையாதியருக்குப் பிறந்த நான்கு பிள்ளைகளும் நன்றாக வளர்ந்து வருவாராயினர். அவர்களில் இராமனுக்குத் துணையாக இலக்குவனும், பரதனுக்குத் துணையாகச் சத்துருக்கனும் இணைபிரியாதிருந்து வந்தனர். இவர்கள் கல்வி பயின்று பதினாறாட்டைப் பிராயத்தராயினர். அதுகண்ட தசரதன் அவர்களுக்குத் திருமணத்தைச்சிந்தித்தான்.

அமைச்சரோடும் திருமணஞ் சிந்தித்திருந்த தசரதனை காதி மகனான விசுவாமித்திர முனிவன் வந்து கண்டான். அவன் மன்னனை நோக்கி இராமனைத் தன்னுடன் பத்து நாளைக்கு அனுப்பி தான் செய்யும் வேள்வியைக் காக்கவேண்டுமென வேண்டினன். உடனே மன்னவன் நினைவிழந்து "ஓ முனிவரே! யான் பிறந்து அறுபதினாயிரம் ஆண்டுகள் சென்று இந்த இராமனை அருமையாகப் பெற்றேன்; எனது

பிள்ளைகள் காவருள்ளும் இராமனிடத்தில் எனக்குப் பேராசை பெருகிவிட்டது. ஆதலால் அவனை அழைத்துக் கொண்டு போகவேண்டாம். உம்மை வருத்தும் அரக்கர் யாவர்'' எனப் புகன்றனன். உடனே விசுவாமித்திரன் "புலத்திய மாமுனி குலத்தினனான இராவணனென்று ஓர் அரக்கனிருக்கிறான். அவன் மாரீசன் சுபாகு என்ற இரண்டு அரக்கரையனுப்பி வேள்விகளைக் கெடுக்கிறான்'' என்று கூறினன். அது கேட்ட மன்னன் "அந்த இராவணன் முன் நின்று போசர் செய்ய யான் வல்லவனல்லேன். தேவர்கள், கந்தர்வர்கள், இயக்கர்கள் முதலியோரும் கூட இராவணனோடு போர் செய்ய வல்லமையில்லாதிருக்க மானிடர்கள் எவ்வளவு? அவனோ மிக்க வல்லமை பெற்றவர்களின் வல்லமையையும் போர்தன்னில் அடக்கிவிடுகிறான். அவனோடாவது அவனுடைய படைகளோடாவது போர் செய்ய என்னால் முடியாது. யான் எனது படைகளைக் கூட்டிவந்தாலும் முடியாது. எனது மக்களோடு கூடி வந்தாலும் முடியாது. ஆதலின் சிறு குழந்தையான இராமனை நீர் என்ன பாடு பட்டாலும் கொடுக்கவேமாட்டேன். உமது யாகத்தை அழிக்க வந்துள்ள சுபாகு மாரீசரோ மிக வல்லமை பெற்றவர்கள். ஆதலால் வேண்டுமானால் நான் அவர்களுள் ஒருவனோடு போர் செய்ய வருகிறேன்'' என்று கெஞ்சினான்.

அப்போது முனிவர் சினமிகக் கொண்டார். இதுவரை நிகழ்ச்சி வால்மீகி இராமாயணம் பாலகாண்டம் இருபதாவது சருக்கத்திலுள்ளது. அதனாலே கேடு விளையுமென அறிந்த வசிட்டமுனி மன்னனுக்குத் தேறுதல் சொல்லி இராமனை அனுப்புமாறு ஏவினன். அதுகேட்ட மன்னனும் இராமனை முனிவனுடனனுப்ப இசைந்தனன்.

விசுவாமித்திர முனிவன் முன்னாலே செல்ல பின்னால் இராமனும் இலக்குவனும் அவனைத் தொடர்ந்து காடு நோக்கிச் சென்றனர். அவர்கள் சரயு நதிக்கரையை யடைந்த போது முனிவன் அவர்களுக்கு பலை, அதிபலை என்ற வித்தைகளைக் கற்றுக்கொடுக்கின்றனன். அன்றிரவு அக்குழந்

தைகள் சிறகுகளாலாகிய படுக்கையில் துயின்றனர். அவர்களை விடிந்ததும் முனிவன் விடிந்து விட்டது; எழுந்திருங்கள் என்று சத்தமிட்டழைத்து எழுப்பினன்.

ஐந்தாம் அத்தியாயம்.

விசுவாமித்திர முனிவனும் அரசகுமாரரும் வழிநடந்து கங்கைக் கரையையடைந்து அங்கிருந்த முனிவர்களால் நல்வரவேற்கப்பெற்று அவர்களோடு ஓரிரவைக் கழித்து, தோணியேறி ஆற்றைக் கடந்து தென் கரையைச் சேர்ந்து மெல்ல மெல்ல நடந்துபோனார்கள். அங்கே மனித வாழ்வற்ற ஓர் கொடிய காடு குறுக்கிட்டது. அதுகண்டு இராமன் அக்காடு ஏன் அவ்வாறிருந்ததென முனிவனைக் கேட்டான். அதற்கு மறுமொழியாக விசுவாமித்திரன் "விருத்திராசுரனைக் கொன்றதால் இந்திரனுக்கு நேர்ந்த பெரும்பழியை இவ்விடம் நீக்கியதால் மிகவும் செழிப்பான நாடாக இருந்தது. தாடகை என்னும் இயக்கப் பெண் இவ்விடத்தில் வந்து இங்கு வாழ்பவர்களை யெல்லாம் துன்புறுத்துகிறாள். அதனாலேயே இவ்விடம் இவ்வாறு பாழாயிற்று. அவள் இங்கேதான் வாழ்கின்றாள். அவள் புத்திமானான சுந்தனுக்கு மனைவியானாள். அவன் நினைத்தபடியே ரூபங்கொள்ள வல்லவளும் ஆயிர யானைப் பலமுள்ளவளுமாய்ப் பிறந்தாள். அவளுக்கு மாரீசன் என்னும் இராக்கதப்பிள்ளை பிறந்தான். மாரீசன் இந்திரனை நிகர்த்த வலியுள்ளவன். அவனும் மனிதர்களைத் துன்பப்படுத்துகிறான்" என்று கூறினன். தாடகையின் வரலாற்றை விபரமாகக் கூறும்படி இராமன் கேட்க மறுபடியும் முனிவன் "சுகேது என்ற பெயருடைய ஒரு பெரிய இயக்கன் இருந்தான். அவன் நல்லொழுக்கமுள்ளவன். அவனுக்குக் குழந்தையில்லாமல் பெருந்தவம் புரிந்து நான்முகனுடைய வரத்தால் இப்பெண் தாடகை பிறந்தனள்.

அவளைச் சுந்தனென்பவன் மணந்தான். அவர்களுக்கு மாரீசன் பிறந்தான். சுந்தன் அகத்திய முனிவரால் சபிக்கப்பெற்றிறந்தான். அவரைக் கொல்லுவதற்காகத் தாடகை மாரீசனை யழைத்துக்கொண்டு வந்தாள். அவள் ஓடி வருவது கண்டு அகத்தியர் மிகச் சினந்து அவள் மனிதனைத் தின்பவளாய் விகார ரூபமுடையவளாய் இந்த உரு ஒழிந்து அகோரமான உருவுடையவளாக வேண்டும் என்று வெவ்வுரை கூறினார். உடனே அவள் அவ்வாறே ஆகி இந்தக் காட்டைப் பாழ் செய்கிறாள். இயக்கர்களுக்கு இயல்பில் பலமில்லையானாலும் வரத்தால் பலம் பெற்ற இக்கொடியவளாகிய தாடகையை நீயே கொல்லவேண்டும். பெண்ணைக் கொல்லவேண்டுமென்று நீ அருவருப்புக் கொள்ளவேண்டாம். முன்பொரு காலம் விரோசனனென்பவனுடைய மகளாகிய மந்தரை கெட்டவளாயிருந்ததால் அவளை இந்திரன் கொன்றான். மற்றொரு காலத்தில் பிருகுவுக்கு மனைவியும் சுக்கிரனுக்குத் தாயுமான ஒரு பெண்ணை, அவள் உலகில் இந்திரனை இல்லாமற் செய்துவிட வேண்டுமென்று எண்ணினதால் திருமாலே கொன்றார். இப்படியே நல்லோரநேகர் தீநெறி யொழுகும் பெண்களைக் கொன்றிருக்கின்றனர். ஆதலின் நீ இவளைக் கட்டாயம் கொன்றுவிடவேண்டும்'' என்று கூறினார். இராமனும் அக்கொலையைச் செய்ய உடன்பட்டனன் உடனே அவன் வில்லை நாணேற்றி ஆரவாரஞ் செய்தனன். அவ்வாரவாரத்தைக் கேட்ட தாடகை அங்கே வந்தனள். இராமன் தம்பியைப் பார்த்து "இலக்குவ! இவளைப் பார்த்தாயா? இவளைக் கண்டு அஞ்சா நெஞ்சினரும் கலங்குவர். வெல்ல முடியாதவளாயுள்ள இவளை இப்போது காதையும் நுனி மூக்கையும் அறுத்துத் தூக்கிவிடுகிறேன் பார். இவள் பெண்ணாயிருப்பதால் இவளைக் கொல்ல எனக்கு மனம் வரவில்லை. ஆதலால் இவளைக் கைகால்களை முறித்து பலமில்லாமற் செய்ய நினைக்கிறேன்'' என்றனன். தாடகை கல்லெறிந்து சண்டை செய்தாள். இராமன் அவள் கைகளை அறுத்துத் தள்ளினன். அப்போது இலக்குவன் அவளது காதுகளையும் மூக்கு நுனியையும் அறுத்துவிட்டனன். பின் இராமன் ஓர் அம்பெய்து அவளைக் கொன்ற

னன். (இவ்வரலாறு வால்மீகி—பாலகாண்டம் இருபத்தாறாம் சருக்கத்திலுள்ளது.)

அன்றிரவு அவர்கள் அங்கே தங்கி மறுநாள் அங்கிருந்து புறப்பட்டு விசுவாமித்திரனுடைய ஆச்சிரமத்தை அடைந்தனர். அங்கே போனவுடன் இராமன் அவ்வாசிரம வரலாற்றை வினவ விசுவாமித்திரன் கூறுகிறான். "திருமால் இவ்விடத்தில் தவம் செய்துகொண்டிருந்தார். அப்போது விரோசனனுடைய மகன் பலி என்னும் அரசன் இந்திரனை வென்று மூவுலகங்களும் போற்ற ஆண்டனன். அச்சக்கிரவர்த்தி ஒரு பெரிய யாகம் செய்யதொடங்கினன். தன்னிடம் வந்து யாசிக்கிறவர்களுக்கெல்லாம் அவரவர்கள் கேட்டது கேட்டபடி கொடுத்தான். இச்செய்தியை தேவர்களோடு இந்திரன் திருமாலிடம் கூறி மகாபலியைக் கொல்ல வேண்டினன். திருமால் அதற்கிசைந்து தாம் பிறக்கும்படி தம்மிடம் வரம்பெற்றிருந்த காசிபமுனிவனுக்கும் அதிதிக்கும் பிள்ளையாகப் பிறந்து குள்ள உருவத்தோடு பலியிடம் சென்று மானத்தைவிட்டு மூவடியிரந்து பெற்றுக் கொண்டு பலிச் சக்கிரவர்த்தியை யடக்கினர். அவ்வாமனர் தங்கிய ஆச்சிரமம் இது. இதில் நான் வாழ்கிறேன்" என்றனன். (இவ்வரலாறு வால்மீகி—பாலகாண்டம் இருபத்தொன்பதாவது சருக்கத்திலுள்ளது.)

கோசிகமுனி யாகம் தொடங்கினன். ஐந்து நாட்கள் சென்றன. ஆறாம் நாள் சுபாகுவும் மாரீசனும் யாகத்தைக் கெடுக்க வந்தனர். அவர்களில் மாரீசனை ஓர் கணையால் கடலிலே தள்ளும்படி செய்தான் இராமன். மற்றொரு கணையால் சுபாகு மாண்டனன். யாகம் இனிது நிறைவேறிற்று. பின் முனிவன் இராமலக்ஷ்வணரை யழைத்துக்கொண்டு மிதிலையை நோக்கி நடந்தனன்,

மேலே காணப்படும் வரலாற்றை சிறிது ஆராய்வோம். தாடகை ஓர் பெண். இவளுடைய மகனே மாரீசன். அவன் இராவணனுக்கு மாமன் முறை. இராவணன் பிறந்து வரம் பெற்று இலங்கையில் அரசாளத் தொடங்கியபோது கிழவ

னாகிய மாரீசன் அவனை அழைத்து அவனுடைய ஆதரவைப் பெற்று முனிவர்கள் செய்த யாகங்களை சுபாகு என்பவனோடு கூடி அழித்து வந்தான், ஆதலின் இராவணன் வயதளவாவது அவனுக்கு ஆகியிருக்க வேண்டும். இராவணன் முக்கோடி ஆண்டு வாழ்நாள் வரம பெற்றவன். அவன் தாடகைபிறந்த பதினான்காவது ஆண்டில் இறக்கிறானெனத் தெரிவதால் அப்போது இராவணன் பிறந்து கிட்டத்தட்ட மூன்று கோடி ஆண்டுகள் ஆகின. ஆதலின் மாரீசனுக்கும் அப்போது மூன்று கோடி ஆண்டுகளுக்கு அதிகமாகவே ஆகியிருக்கவேண்டும். அவனுடைய தாயாகிய தாடகையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

இராவணன் தான் பெற்ற வரத்தின் மகிமையால் அவ்வளவு காலம் வாழ்ந்து வந்தனன். மாரீசன் யாரிடம் இவ்வளவு காலம் வாழ வரம்பெற்றானோ தெரியவில்லை. இதற்கும் மேலாக அவன் தாய் தாடகை யாரிடம் நீண்ட வாழ்நாள் பெற்றனளோ? மாரீசனும் தாடகையும் இவ்வளவு காலம் வாழ வரம் பெற்ற வரலாறொன்றும் காணப்படவில்லை. ஆதலின் இவர்களுடைய இவ்வாழ்க்கையும் அழிவும் அறிவுக்கு உடன்படுமாறில்லை. இருந்தாலும் இவை புலவர்களால் எழுதிவைக்கப் பெற்றுள்ளன. இதன் காரணத்தைப் பின்னர் ஆராய்வோம்.

தாடகையின் தந்தையாகிய சுகேது மிகவும் நல்லவன் என்று வால்மீகி முனிவர் கூறுகிறார். கம்பரும் அவ்வாறே "சுகேது வென்றுளனோர் தூய்மையான்" என்று கூறுகிறார். இவன் தவங்கிடந்து பெற்ற பெண்ணே தாடகை. இவளை புத்திமானான சுந்தனுக்கு வாழ்க்கைத்துணைவியாக சுகேது தருகிறான். சுந்தன் ஒரு இயக்கர் தலைவன். இயக்கர்கள் பொதுவாக பலமற்றவர்கள், சுந்தனைச்சிறந்த அறிவாளியென வால்மீகி கூறுகிறார் இவன் அகத்திய முனிவர் சாபத்தால் இறக்கிறானென்பதால் அவருடைய சாபம் பெறுவதற்கு அவருக்கு அவன் பெருந்தீங்கு செய்திருக்கவேண்டும், ஆனால் வால்மீகி அதுபற்றி ஒன்றும்

கூறுகின்றிலர். அவர் சபித்தார் இவன் இறந்தான் என்று மட்டுமே கூறுகிறார்.

சுந்தன் சிறந்த புத்திமானானதால் முனிவர் சாபத்தைப் பெறுமாறு அவருக்கு அவன் என்ன கெடுதியைச் செய்திருக்கக்கூடும். மேலும் அவனோ இயற்கையில் பலமில்லாதவன். நல்லொழுக்கமுடையவனாகிய சுகேதுவின் மாப்பிள்ளை. கம்பரோ சுந்தனுடைய குணத்தை மாற்றி அவனைக் "காய்சினத்தரக்கன்" என்கிறார். மேலும் இவன் அகத்தியரால் இறப்பதற்கு ஓர் காரணமும் கூறுகிறார். அதாவது சுந்தன் அகத்தியர் வாழ்விடமடைந்து அங்கிருந்த மரங்களையெல்லாம் பறித்து வீசினான். அதனால் சினமிகக்கொண்டு முனிவர் "தழலெழ விழித்தனர் சாம்பராயினன்" என்பதே. இவ்வரலாற்றால் அகத்தியர் அற்ப குணமுடையவராகக் காட்டப்படுகிறார். புத்திமானான சுந்தன் என்று முதலில் கூறிய வால்மீகி அதற்கு மாறாக அவனை அறிவில்லாதவனாகக் கூறாமல் காட்டுகிறார். ஓர் காரணமும் கூறாது அவனை அகத்தியர் கொல்வதாகக் கூறி அகத்தியருக்கு ஓர் பெருங் குணக்கேட்டை யேற்றுகிறார். அகத்தியரோ தமிழ் முனிவர் இவரே தமிழுக்கு சிவபெருமான் திருவருளைப்பெற்று முதன் முதல் இலக்கணமியற்றியவர். ஒல்காப்பெரும் புகழ் தொல்காப்பியர் முதலிய சிறந்த தமிழ்ப்புலவர்களுக்கு ஆசிரியர். இந்தத் தமிழ் முனியைக் குணக்கேடராக அறிவுடையவருக்குக் காட்டவே ஆரியராகிய வால்மீகி இவ்வாறு எழுதினார்போலும். கம்பர் வால்மீகி கூறாத காரணத்தைக் கூறுகிறார். அதுவும் வியப்பாகவே இருக்கிறது. மரங்களை முறித்தெறிந்ததற்காக ஒருவனை விழித்துச் சாம்பராக்குவதென்றால் அவர் தம் பெருந்தன்மையும் பெருந்தவமும் இருந்தவாறென்னே! ஈதெல்லாம் பெருந் தமிழ்ப் புலவராகிய அகத்தியனார்பாலிருந்த அழுக்காற்றால் ஆரியர் கட்டிய கதையென்றே தள்ளுதல் வேண்டும்.

தாடகைக்கு ஓரே மகன், அவன் மாரீசன். சுபாகு என்பவன் வேறொரு அரக்கன். அவன் மாரீசனோடு கூடி இராவணன் ஆணையால் வேள்விகளைக் கெடுத்து வந்தான். இவ

னைக் கம்பர் தாடகையின் மகன் என்றார். இது வால்மீகி கூற்றுக்கு முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. சுந்தன் இறந்தது தெரிந்து தாடகை ஓடி வருகிறாள். அகத்தியரைக் கொல்ல மாரீசனும் உடன் வருகிறான். அதுகண்டு அகத்தியர் இயல்பில் பலமில்லா இயக்கனாகிய அவனை மிகுந்த பலமுள்ள அரக்கனாகுமாறு சபிக்கிறார். அவ்வாறே இயல்பில் ஆயிர யானைப் பலமுடைய தாடகையை மிகுந்த பலமுள்ள அரக்கியாகுமாறு சபிக்கிறார். எதிரிக்குப் பலமழியுமாறு சபிப்பதே அறிவுடையார் செய்கை. மிகு பலம் வாய்க்குமாறு அகத்தியர் சபித்தாரென்பது அறிவுடையார் ஒப்புமாறில்லை. இது வேண்டுமென்றே அவர் மீது அறியாமையேற்றச் செய்ததாகும். மேலும் மரங்களை முறித்தெறிந்த ஒருவனைச் சாம்பலாக்கிக் கொன்ற முனிவர் தம்மையே கொல்ல வந்தவர்களைக் கொல்லாது விடுகின்றார் என்பதும் வியப்பே. அகத்தியர் சாபத்தால் மிக்க பலம்பெற்ற தாடகை, அகத்தியர் வாழ்ந்த வனத்தில் அது முதல் வாழ்ந்து அதனைப் பாழாக்கி வந்தாளென வால்மீகி கூறுகிறார். இதனால் தம் தலையில் தாமே மண்ணை வாரிப்போட்டுக் கொண்ட அகத்தியர் அவ்விடம் விட்டு வேறிடம் புகுந்தவராதல் வேண்டும். என்னே ஆரியக் கூத்து! "இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்" என்ற சீரிய கொள்கையுடைய தமிழ் மக்களிற்றலை சிறந்த முனிவராகிய அகத்தியனாரா இவ்வாறு நடந்திருப்பார்? பெரும் புளுகே இது. நிற்க,

மூன்று கோடி ஆண்டுகளுக்கு மேலாகவே வாழ்ந்திருந்த மிக்க கிழவியாகிய தாடகையைப் பதினாறு வயது வாலிபனாகிய இராமன் கொன்றான். முதலில் கைகளை இராமன் வெட்டினனென்றும், இலக்குவன் அவளுடைய காதுகளையும் மூக்கையும் வெட்டினனென்றும் பின்னர் இராமன் அவளைக் கொன்றனனென்றும் கூறுகின்றனர் வால்மீகி. இவ்விரு வீரரின் வீரந்தான் யாதோ? என்ன விந்தை! மிகவும் பழுத்த கிழவியாகிய தாடகையை இரண்டு வாலிபர் கூடிக் கொல்வது மிகப் பெரிய வீரமன்றோ? அதினும் அவள் பெண்பால். இதனாலேயே பெரும்புலவராகிய கம்பரும் தமது

அபிப்பிராயத்தைக் கூனி வாக்காக அயோத்திபா காண்டத்திலே பின் வருமாறு கூறுகின்றார்.

"ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத், தாடகையெனும் பெயர்த் தையலாள் படக்,கோடிய வரிசிலை இராமன்"

இலக்குவனது இழிந்த செயலைக் கம்பர் கூறுகின்றிலர். மேலும் விசுவாமித்திர முனிவன் இராமனை நோக்கிப் "பெண்ணாயிற்றென்று பாராதே, முன்னர் இந்திரனொரு பெண்ணைக் கொன்றான், திருமால் ஒரு பெண்ணைக் கொன்றார் ஆதலின் நீயும் இவளைக் கொல்" எனக் கூறியதைத் தாடகை தோன்றுவதன் முன் கூறுகிறார். ஆனால் கம்பரோ இச்செய்தியைக் குமாரனாகிய இராமனுக்கும் கிழவியாகிய தாடகைக்கும் நடந்த போர் நடுவில் கூறியதாகக் கூறுகிறார். பெண்ணைக் கொல்ல ஏவும் விசுவாமித்திரன் இழிந்த அறிவு தானென்னே?

விசுவாமித்திரன் வேள்வி தொடங்கியபோது சுபாகு, மாரீசர் பல அரக்கரோடு வந்து தடுத்தனர். தாடகையும் வேள்வியை முனிவர் செய்யும்போது தடுத்து வந்தனளெனத் தெரிகிறது. ஆரியர் மிலேச்சரென்கிறது நிகண்டு. ஆதியில் ஆரியர் குதிரை, கழுதை, நாய் முதலிய மிருகங்களை அடித்துத் தின்று வந்தனர். பின்னர் அவர்கள் தம் தெய்வத்துக்குப் பிரீதி என்று சொல்லி வேள்வி என்ற பெயரை வைத்துக் கொண்டு ஆடுமாடுகளைத் தின்று வந்தனர். இந்த இராம கதையிலும் கூட தசரதன் செய்த பரி வேள்வியில் பல பசுக்களையும், குதிரையையும், பாம்பு, ஆமை முதலிய அற்பமான உயிர்ப்பிராணிகளையும் தின்றனரென்றும் சோமாசமாகிய கள்ளைப் பருகினரென்றும் தெளிவாக அறிகின்றோம்.

தமிழ் மக்களோ கொல்லாவிரதமே குவலயமெல்லாம் ஓங்கவேண்டுமென்னும் சீலமிக வுடையோர். தம்முயிர் நீப்பினும் தாம் பிறி தின்னுயிர் நீக்கும் வினைபுரியார். பசுக்கொலை புரிந்து ஆயிரம் வேள்வியைச் செய்தலினும் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று எனக் கொல்லா நோன்பாற்

றுபவர். நன்னயஞ் செய்தலையே தமக்குத் தீமைசெய்தோரை ஒறுக்கும் வழியாகக் கொண்டொழுகுபவர். ஆதலின் இவர்களுக்கு ஆரியர் செய்துவந்த பசுக்கொலை வேள்வி எவ்வாறு உடன்பாடாகும்? தமிழ் மக்கள் ஆரியர் வேள்வி செய்த இடந்தோறும் சென்று தடுத்தனர். கொலை வேள்விகளைத் தடுப்பதில் தம்முயிர் போயினும் பெரிதென மதியாது தமிழ் மக்கள் கொலையைத் தடுத்து வந்தனர். மற்ற வேளைகளில் ஆரியருக்கு அவர்கள் யாதொரு கெடுதியும் புரியார். விசுவாமித்திர முனிவன் செய்த வேள்வியிலும் மாரீசன் சாதாரணக்கிரியைகள் நிகழ்ந்த ஐந்து நாளும்வராமல் கொலை புரிந்து அவிசொரியும் ஆறாம் நாளே வந்து கொலையைத் தடுக்கின்றான். இதனாலேயே மாரீசன், இராவணன், தாடகை முதலியோரை ஆரியர் கேவலமாகக் கூறிவந்தனர். அதனை வால்மீகியும் எழுதினர். இதனை இராவணனைப்பற்றி வரும் போது விவரமாக ஆராய்வோம்.

தாடகை என்ற பெயருடைய ஒரு உத்தமி தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்ததாகக் கூறப்படுகின்றனள்; அவ்வம்மை மிகவும் அன்பு பூண்டு கடவுளை வழிபட்டு வந்தனள். அவ்விடம் இப்போது திருப்பனந்தாள் என்று கூறப்படுகிறது. ஒரு நாள் இவ்வம்மை சுவாமிக்குச் சாத்துவதற்காகப் பூமாலையை இரண்டு கைகளிலும் தாங்கிப் போடப்போகும் போது உடை சற்று நெகிழ, மானங்காத்தற்காக ஆடையை இரண்டு கைகளினாலேயும் இறுக்கினள்; அப்போது பெருமான் தலை குனிந்து அம்மையின் கையிலிருந்த மாலை தமது கழுத்தில் விழும்படிச் சாய்ந்தனர் என்றால் இவ்வம்மையின் பெருமைதானென்னே! இத்தாடகைப் பிராட்டியாரையே இழிகுணமுடையவராகக் காட்டினர் வால்மீகி முனிவர். ஆரியர் இழிசெயல்தானென்னே!

ஒரு கிழப்பெண்ணைக் கொல்லுமாறு ஏவின ஆரிய முனிவன் விசுவாமித்திரனின் பெருந்தன்மைதானென்னே! ஆரியர் தாய்க்கொலை சால்புடைத்தென்பர் போலும்! நாய் வாலைக் களவாடித் தின்று உலகமெல்லாம் இகழப்பட்டவ

னன்றோ இக்கோசிகன்? நிற்க, மகாபலிச் சக்கிரவர்த்தி வரலாற்றை ஆராய்வோம்.

மகாபலிச் சக்கிரவர்த்தி மிகவும் உத்தமன். இந்திரன் முதலிய தேவர்களை யெல்லாம் வென்று மூவுலகங்களையும் ஆண்டு வந்தான். யார் யார் எதை எதைக் கேட்ட போதி லும் இல்லை என்று சொல்லாமல் கொடுத்துவரும் சிறந்த அறத்தைப் புரிந்து வந்தான். அவனுடைய பெருமையால் அழுக்காறுற்ற தேவர்கள் பலியின் தங்கையைக் கொன்ற பெண் கொலைப் பாவியாகிய இந்திரனோடு திருமாலை யடைந்து பின்வருமாறு கூறினதாக வால்மீகி முனிவர் கூறு கிறார்.

"ஓ திருமாலே! விரோசனனுடைய பிள்ளையான பலிச் சக்கிரவர்த்தி ஓர் யாகம் செய்கிறான். அதில் தன்னிடம் வந்து யாசிக்கிறவர்களுக்கெல்லாம் அவரவர்கள் கேட்டது கேட்டபடி தானங்கொடுக்கிறான். ஆதலின் அவனைக் கொல்ல வேண்டும்" (பாலகாண்டம் இருபத்தொன்பதாவது சருக்கம்) அவ்வாறே திருமால் வாமனனாகி அவனிடம் மூனறடி மண் இரந்து அவனைக் கொல்கின்றனர். இவ்விழி ந்த செயலை உண்மையில் இழிந்ததெனக் கண்ட வால்மீகி முனிவர் "திருமால் மானத்தை விட்டு மூவடி இரந்தனர்" என்கின்றனர். மகாபலி செய்த குற்றமாவது யாசிப்பவர்கள் எதை எதைக்கேட்டாலும் இல்லையென்னாமல் கொடுத்த வள்ளற்றன்மையே. இதற்காக அவன் திருமாலால் கொல்லப் பட்டனனெனில் ஆரியர் தமது தெய்வமாகிய திருமாலிடம் எவ்வளவு பெருந்தன்மையை ஏற்றுகின்றனர் என்பது புல னாகும். அவர்களின் தெய்வத்தைப்பற்றிய அறிவுதா னென்னே!

கம்பரோ இம்மகாபலி வரலாற்றை இன்னும் கொஞ்சம் விரிவாகக் கூறுகின்றார். அவர் உண்மையான அன்பனாகிய மகாபலியின் குணத்தைக்கண்டு மிகவும் வியப்புடையவராகி இவ்விடத்து மிகவும் பாராட்டத் தகுந்த பாடல்களைப் பாடி யிருக்கிறார். பின்வருவது கம்பர் வரலாறு. திருமால் வாம

னனாகி மகாபலியிடம் அடைந்தபோது அவனுடைய குருவாகிய சுக்கிராச்சாரியார் "இவன் வஞ்சத்திருமால். ஆதலின் மூன்றடி மண் தந்து ஏமாறாதே, உன் உயிர் போய்விடும்." என்று தடுத்தனர். அதனைக் கேட்ட மகாபலி,

"வெள்ளிமை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ வென்சில இன்னுயி ரேனும்
கொள்ளுதல்தீது கொடுப்பது நன்றால்

மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீய்ந்தவ ரென்பவர் வீய்ந்தவ ரேனும்
ஈய்ந்தவ ரல்ல திருந்தவர் யாரே

எடுத்தொரு வருக்கொருவ ரீவதனின் முன்னே
தடுப்பது நினக்கி தழகோ தகவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றி விடுகின்றாய்"

எனக்கூறிச் சினந்து மூவடிமண் தருகின்றான். வஞ்சகத் தன்மையரான திருமால் அவ்வுத்தமோத்தமனைக்கொன்றார். இவர்முன் சுக்கிரனுடைய தாயையும் கொன்று பெண்பழிபூண்டார். பெண் கொலைபுரிந்தொழுகும் பொறாமையனான இந்திரனுக்காகப் பெண் கொலை புரிந்தொழுகும் வஞ்சகரான திருமால் மகாபலியைக் கொன்றது வியப்பாகாது. என்னே ஆரியர் தம் தெய்வங்களுக்கேற்றும் இழிகுணம்! பொறாமை, கொலை வஞ்சகம் இவைகளை அவர்கள் தீக்குணமென உணர்ந்திலர் போலும். நிற்க, இனி மேற் செல்லுதும்.

மிதிலையை நோக்கிச்சென்ற கோசிக முனிவனும் அரசகுமாரரும் சோனா நதிக்கரையை யடைந்தனர். இராமன் அந்த தேசம் யாருடையதெனக் கேட்டனன். முனிவன் கூறுவன். "நான்முகன் மகன் குசன், வைதர்பி என்ற தனது

மனைவியிடம் குசாம்பன், குசநாபன், ஆதூர்த்தாஜஸ், வசு என்னும் நான்கு பிள்ளைகளைப் பெற்றான். இவர்களில் வசு என்பவனுடையது இத்தேசம். வசுவின் அண்ணனாகிய குசநாபன் நூறு பெண்மணிகளைப் பெற்றான். பேரழகு பெற்ற அப்பெண்களை ஓர் நாள் வாயு பகவான் கண்டு மோகித்து 'நீங்கள் என்னைக் கலியாணம் செய்துகொள்ளுங்கள். நீங்கள் மானிடரை விரும்பாது என்னை விரும்பினால் உங்களுக்கு யௌவனமும் ஆயுளும் நீடித்து நிற்கும்' என்றனன்.

அப்பெண்கள் அச்சொல்லைக் கேட்டுச் சிரித்து'நீர் தேவரிற் சிறந்தவர். நீர் ஏன் எங்களை அவமானப்படுத்துகிறீர்? உம்மை அதிகாரத்திலிருந்து நீக்குவிக்க யாங்கள் வல்லவர்கள்; ஆனால் எங்களுடைய தவத்தைக்காக்க விரும்பி உம்மை அவ்வாறு செய்யாதிருக்கின்றோம். புத்திகெட்டவரே எங்கள் தகப்பனார் உமக்கு மிருத்தியுவாகவேண்டும். சத்திய வாதியாயுள்ள அவரை அவமதியாதேயும். எங்கள் தந்தை எங்களை யாருக்குக் கொடுக்கிறாரோ அவரே எங்கள் கணவராவார்' என்று கூறினர்.

அது கேட்ட வாயு பகவான் கோபங்கொண்டு அவர்கள் உடலெங்கும் புகுந்து முறித்து முடமாக்கிவிட்டான். கண்ணுங்கண்ணீருமாக வந்த அப்பெண்களிடத்தில் நடந்ததை உணர்ந்த குசநாபன் அயோக்கியத்தனமாக நடந்த வாயுபகவானின் செயலால் சினமடையாது,'பெண்களே! உங்கள் பொறுமையைப் பாராட்டுகிறேன். எல்லோரும் பெருந்தன்மையாக நடந்து எனது குலத்தைப் பெருமை படுத்தினீர்கள்' எனப் பொறுமையோடு புகன்றான். சோமதை என்ற கந்தருவப் பெண் சூலி முனியை அடைந்து தன்னைக் கலந்து ஓர் பிள்ளையைத் தனக்குத் தர வேண்டப் பிறந்த பிரமதத்தன் என்பவனை அந்த நூறு பெண்களும் மணந்தனர். அவன் அவர்களைத் தொட்டவுடன் அவர்கள் முடம் நீங்கிற்று. இத்திருமணத்தின் பின் குசநாபருக்குக் காதி என்ற மகன் பிறந்தனன். அந்தக் காதியின் மக்களே நானும் கௌசிகி என்ற பெண்ணும். கௌசிகி நதியாயினள். அக்கௌசிகிக் கரையி

லேயே நான் வாழ்வேன். இந்த யாகம் செய்யவே சித்தாச்சிரமம் வந்தேன்'' என்று கூறினன். விடியற்காலமானபோது முனிவன் 'இராமா! எழுந்திரு விடியற்காலமாய்விட்டது' என்று எழுப்பினன். யாவரும் வழி நடந்து நண்பகலில் கங்கைக்கரையை அடைந்தனர்.

மேலே கண்ட வரலாற்றில் வாயுபகவான் செய்த அக்கிரமத்தைப் பாருங்கள். இவனை ஒரு தேவனென்று எவ்வாறு கூறுவது? யாதொரு பாவமுமறியாத கன்னிகைகளைக் கற்பழிக்கத் துணிந்து முயல்கின்றனன். அப்பெண்கள் உத்தமிகளாதலால் அவனுடைய கூடா ஒழுக்கத்திற்கு இசைந்திலர். அதற்காக அவன் அவர்களுடைய உடலிற் புகுந்து ஊனமுண்டாக்கினனென்றால் அவ்வாயு பகவானின் அற்ப குணமும் மிகவும் கேவலமான ஒழுக்கமும் இருந்தவாறென்னே! இத்தகைய இழிகுணர்களையே ஆரியர்கள் தங்கள் தெய்வங்களாகக் கொண்டுளர். திருமால் பெண் கொலை துணிந்து புரிகின்றனன். திருமகளைப் பகல் வேளையிலேயே புணர்கின்றனன். புணர்ச்சி வேளையில் யாரர்வது வந்தால் இலச்சை இன்றி விலக்குதலுமில்லாமல் பேசுகின்றனன். ஒருவன் மாள, அவனுடலிற் புகுந்து அவன் மனைவியைக் கூடிக் கூடாவொழுக்கம் புரிகின்றனன். அவள் உண்மை தெரிந்து தீயிற் குதித்தால் அச்சாம்பலிற் கிடந்து அறிவிலார் போல் புரண்டு புலம்புகின்றனன். இந்திரனோ பெண் கொலை புரிய அஞ்சுகின்றிலன். அவனுடைய கூடாவொழுக்கமும் கொலைத் தொழிலும் பின்னர் வருமிடங்களில் விளங்கும். வாயு தேவனோ கூடாவொழுக்கத்தில் முயன்று தோற்று தீத் தொழில் புரிகின்றனன். என்னே இவ்வாரியர் தம் தெய்வங்களின் வெறுக்கத் தகுந்த செயல்கள்!

இவ்வரலாற்றைக் கம்பர் இவ்விடத்திற் கூறுகின்றிலர். முனிவன் வேள்வி செய்யத் தொடங்குமுன்னரே கூறுகின்றார். அங்கும் மெல்ல வால்மீகி பால காண்டத்தில் 32, 33, 34-ஆம் சருக்கங்களில் 75-சுலோகங்களில் விவரமாகக் கூறிய வரலாற்றை வேள்விப் படலத்தில் ஒரு பகுதி பாகியபத்துப் பாடல்

களில் அவர் சுருக்கமாகக் கூறுகிறார். அதிலும்வாயு செய்தகூடாவொழுக்க வரலாற்றை முப்பத்திரண்டு முப்பத்து மூன்றாவது சருக்கங்களிலே 52 சுலோகங்களில் விவரமாக வால்மீகி கூறுகின்றார். அதனைக் கம்பர் நான்கு பாடல் களிற் சுருக்கிக் கூறுகின்றார். தமிழ்மகனாதலின் இவ்வெ ழுக்கத் தகுந்த வரலாற்றை அவர் சுருங்க உரைத்தனர்போ லும். ஆனால் அவர் இவ்வரலாற்றைக் கூறவேண்டிய இடத் தை விடுத்து வேறோர் இடத்திற் கூறினர்.

நூறு பெண்கள் ஒருவனை மணந்தனரெனத்தெரிய வரு வதால் ஒருவன் பலரை மணஞ் செய்வது ஆரியர் வழக்கம் போலும். பாரதத்தில் திரௌபதை, தருமர் முதலிய ஐவ ரை மணந்தனளெனத்தெரியவருவதால் ஆரியப் பெண்ணொ ருத்தி பல ஆடவரை மணந்துவந்த வழக்கமும் புலனாகிறது. இதனால் ஒருவன் பல பெண்களையும், ஒருத்தி பல ஆடவர் களையும் மணத்தல் ஆரியர் வழக்கமென்பது அங்கையின் நெல்லிக்கனிபோல் விளங்குகிறது.

கோசிக முனிவன் விடிந்தவுடன் இராமனையும் அவன் தம்பியையும் தட்டி எழுப்புகிறான். இதுபோலவே அவன் எழுப்பும் வரை அப்பிள்ளைகள் தூங்கிய செய்தி முன்னோரி டத்திலும்கேட்கப் பெற்றது. இதனால் அப்பிள்ளைகள் அரச குமாரரானதால் அதிகாலையில் எழுந்திருக்கும் வழக்கத் தைக் கொண்டில்லாதவராய்ப் பிறர் எழுப்பிய பின்னரே எழுந் திருக்கும் வழக்கமுடையவர்போலும். மேலும் காடுமேடுகளில் அலைந்த அலுப்பும் அவர்களைப் பற்றியிருக்குமல்லவா? நிற்க, கங்கைக்கரையையடைந்தபின் நிகழ்ந்த நிகழ்ச்சியை இனிக் காண்போம்.

ஆறாம் அத்தியாயம்.

விஸ்வாமித்திரன் இராமனை நோக்கி கங்கையின் வர லாற்றைச் சொல்லத்தொடங்கினான். “இமயமலை அரச னுக்கு கங்கையென்றும் உமையென்றும் இரண்டு பெண்கள்

பிறந்தனர். ஒரு நாள் தேவர்கள் வந்து மலையரசனிடம் உம்முடைய மூத்த பெண் கங்கை மூவுலகங்களிலும் ஓடும் ஆறாகவேண்டுமென்று வேண்ட அவனும் இசைந்தான். தேவர்கள்பின் கங்கை விண் சென்று ஆகாய கங்கையெனப்பெயர் பெற்றது. சிவபெருமான் உமையைக் கலியாணம் செய்து கொண்டு ஆவலோடு சம்போகிக்கத் தொடங்கினார். அவ்வாறு அவர் நூறு தேவ ஆண்டு சம்போகித்தும் அவருக்கு அந்தப்பார்வதியினிடத்தில் பிள்ளையுண்டாகவில்லை. பிறகு பிர்ம்மா முதலான தேவர்கள் இந்தப் பார்வதியினிடத்தில் ஒரு பிள்ளை பிறந்தால் அந்தப் பிள்ளையை எவன் பொறுப்பான் என்று பயந்தவர்களாய் சிவபெருமானைக்கும்பிட்டு 'தேவாதி தேவா! உமது வீரியத்திலுண்டாகும் பிள்ளையை உலகங்கள் தாங்கமாட்டா. ஆகையால் இதைவிட்டு நீர் உமது மனைவியோடும் தவம் செய்யவேண்டும். மூவுலகங்கட்கும் நன்மையுண்டாகவேண்டி நீர் உமது வீரியத்தை உமதொளிபொருந்திய உடம்பிலேயே தரிக்கவேண்டும்'' என்று பிரார்த்தித்தனர். அதற்கு சிவபெருமான் ''அவ்வாறே ஆகட்டும்; இப்போது வெளியான வீரியத்தை எவன் தரிப்பான்?'' என்று கேட்டனர். அவர்கள் ''பூமி தரிப்பாள்'' என்று கூற அவர் பூமியில் விட்டனர். அந்த வீரியத்தால் மலைகளும் காடுகளுமாகிய பூமியெல்லாம் நிரம்பிவிட்டது. அதைக்கண்ட தேவர்கள் அக்கினி பகவானைப்பார்த்து ''நீர் வாயுபகவானோடு சிவபெருமானுடைய வலிய வீரியத்தினுட் புகுதல்வேண்டும்'' என்று சொல்லினர். அந்த வீரியமானது அக்கினியினால் வியாபிக்கப்பட்டு வெள்ளி மலையாகவும் நாணற் காடாகவும் ஆயிற்று. அந்த நாணற்காட்டிற்றான் அக்கினி தேவனுக்கும் கார்த்திகைப் பெண்களுக்கும் மகனாய் ஆறுமுகக் கடவுள் தோன்றினார். பின்பு பார்வதி தேவி தேவர்களைப் பார்த்து ''பிள்ளையுண்டாகக்கோரி நான் செய்துகொண்டிருந்த சம்போகத்திற்கு நீங்கள் இடையூறு செய்ததனால் உங்கள்மனைவியரிடம் நீங்கள் பிள்ளையைப்பெறமாட்டீர்கள்'' என்று வெஞ்சொல்லுரைத்து பூமியைப் பார்த்து ''புத்திகெட்ட பூமியே! எனக்குப் பிள்ளையுண்டாவதைக் கோராததனாலும் கோபத்தை விளைவித்ததனாலும் நீ அநேக ரூபமுடையவளும் பல

ருக்கு மனைவியுமாயிருந்து, பிள்ளையுண்டாவதானால் வரும் மகிழ்ச்சியையும் நீ அடையாதிருக்க'' என்று சபித்துவிட்டாள். வானவர் வேந்தராகிய சிவபெருமானானவர் அவ்வாறு பார்வதியினிடத்து சாபம் பெற்று வெட்கங்கொண்டு நிற்கும் தேவர்களைப்பார்த்து கவலைப்பட்டு, வருணன் பாதுகாக்கும் மேற்றிசையை அடைந்து தமது மனைவியோடு இமையமலையின் வடபாகத்தில் தவம் செய்துகொண்டிருந்தார். இனி கங்கையின் வரலாற்றைக்கேள்'' என்று கூறி பின்னரும் கோசிக முனிவர் இராமனை நோக்கிக் கூறுவாராயினார். (இது வரை கதை வால்மீகி பாலகாண்டம் முப்பத்தாறாம் சருக்கம்)

''இராமா! சிவபெருமான் இவ்வாறு தவஞ் செய்துகொண்டிருக்கையில் வானவர் தமக்கொரு படைமன்னர் உண்டாகக் கருதினர். அக்கினி, இந்திரனோடும் தேவரோடும் கூடி நான்முகனையடைந்து ''நமது படைமன்னர் உமாதேவியிடம் கூடித் தவஞ் செய்வதால் வேறு படைமன்னரைப் பெறத் தந்திரம் சொல்லும்'' என்றனர். நான்முகன் ''உங்களுக்கு உங்கள் மனைவியரிடம் பிள்ளையுண்டாகாதென உமை சொன்ன சொல் வீணாகாது; இது உண்மை; ஐயமில்லை. அக்கினி பகவான் படைமன்னனை இக்கங்கையினிடம் உண்டுபண்ணுவான். கங்கையும் பிள்ளையுண்டாக உடன்படுவாள். அது பார்வதிக்கும் சம்மதமாயிருக்கும்'' என்றனன். தேவர்களனைவரும் கைலாய மலையை அடைந்து அக்கினி பகவானைப் பார்த்து ''சுவாமி! முன்னே நீர் தரித்துக்கொண்டிருக்கும் சிவபிரானது வீரியத்தை கங்கையினிடத்தில் விடவேண்டும்'' என்று தூண்டினர். அதுகேட்ட அக்கினியும் கங்கையினிடம் வந்து ''கங்காதேவி! சிவபெருமானது இவ்வீரியத்தை வாங்கிக் கொண்டு நீ கர்ப்பக் தரிக்கவேண்டும்'' என்றனன். கங்கை பெண்ணுருத் தாங்கினாள். அக்கினி பகவானும் தமது எல்லா சரீரத்தினின்றும் சிவபெருமானது வீரியத்தை அவளிடத்தில் நிரம்பப் பொழிந்தான். கங்கை அத்தீயினால் வெதுப்பப் பெற்று மனதில் மிக வருத்தம் கொண்டு தீயைப் பார்த்து ''நீர் மேலும் மேலும் விடும் இச்சிவ வீரியத்தை நான் தரிக்க

வல்லவளல்லேன்'' எனலும் நீ ''அப்படியாயின் இக்கருவை இமையமலையின் இச்சிறிய குன்றில் விடு'' என்றனன். உடனே கங்கை அந்தக்கருவை வெள்ளத்தினின்று எடுத்து வெளியில் விட்டுவிட்டாள். அந்த வீரியத்திலிருந்து பொன், வெள்ளி முதலிய லோகங்களெல்லாம் உண்டாயின. கங்கையின் கர்ப்பத்திலிருந்து சுப்பிரமணியசாமி உண்டாகவே வானவர் கார்த்திகைப் பெண்களை நோக்கி அப்பிள்ளையை வளர்க்கச்சொல்லினர். அப்பெண்கள் நழுவிய கர்ப்பத்திலுண்டாகி விளங்கும் அக்குழந்தையைக் குளிப்பாட்டினார்கள். நழுவிய கர்ப்பத்திலுண்டானதால் ஸ்கந்தர் என்றும், கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பெற்றதால் கார்த்திகேயர் என்றும் தேவர்கள் அப்பிள்ளையை அழைத்தார்கள். அப்பெண்கள் அறுவரின் முலைப்பாலையும் அப்பிள்ளை ஆறுமுகமுடையவராய்க்குடித்தார். பிறகு வானவர் அப்பிள்ளையைத் தமக்குச் சேனைத்தலைவராக்கிக்கொண்டனர். பின்னரும் விஸ்வாமித்திர முனிவர் அக்கங்கையின் வரலாற்றைக் கூறத்தொடங்கினார். (இதுவரை கூறினது முப்பத்தேழாவது சருக்கம்.)

மேலே கண்ட வரலாற்றை ஆராய்வோம். இவ்வரலாறு கேட்பதற்கு மிகவும் வெறுப்பைத் தருவதாக உள்ளது. தேவர்களுக்கெல்லாம் தலைவராகிய சிவபெருமான் உமையோடு நூறு ஆண்டுகள் புணர்ந்தும் இந்திரியம் வெளிப்படவில்லையென்றும் அப்புணர்ச்சியூடே பிரமன் முதலிய தேவர்கள் அவர்களைக்கண்டு புணர்ச்சியிலிருந்து நீங்கவேண்டினரெனவும் அவ்வேண்டுகோளுக்குச் சிவபெருமான் இசைந்தனரெனவும் ஆனால் பார்வதி மட்டும் சினங்கொண்டு தேவர்களைச் சபித்ததோடு நில்லாமல் ஒரு பாவமுமறியாத பூமியையும் சபித்தனளெனவும் கதை வருகிறது. இது வியப்பாகவே இருக்கிறது. இந்நூல் வைணவ நூலாதலின் சைவத்துக்கு இழுக்குக் கூற இவ்வரலாற்றைக் கூறியிருக்கவேண்டும். இல்லையாயின் ஆரியர் கொள்கைகளே இவ்வாறு ஆபாசமாக இருந்திருக்கவேண்டும். இதனை முன்னரே கண்டோம். இவ்வித ஆபாசமான வரலாறுகளை எழுதுவதற்கு அவர்கள்

மனம் துணிந்துள்ளதாதலின் இதனால் அவர்களுடைய இழிந்த ஒழுக்கம் புலனாகிறது.

மேலும் நூறாண்டு புணர்ந்தும் சிவபெருமானுக்கு வெளிப்படாத வீரியம் தேவர்கள் வந்து தடுத்ததும் வெளிப்பட்டதாகவும் அதை அவர் விண்ணவர் கூறியபடி பூமியில் விட்டதாகவும் பின்பு அதில் அக்கினி தேவனும், வாயு தேவனும் கூடி உட்புகுத்து நமது உடலில் ஆக்கிக்கொண்டனரென்றும் தெரிகிறது. இதுவும் வியப்பாகவேயிருக்கிறது. தீயும் காற்றும் கூடி யாது செய்தனர் என்பது தெரியவில்லை. வீரியத்துட் புகுதலாவதென்ன? ஒரு வேளை அதையவர்கள் உண்டு தம்முடலில் சேர்த்துக்கொண்டனர் போலும்!

தீக் கடவுள் நாணற்காட்டில் கார்த்திகைப் பெண்கள் அறுவரோடும் கூடி ஆறுமுகக் கடவுளைப் பெற்றான் என்று 36-ம் சருக்கமும், அவன் கங்கையோடு கூடி தான் வைத்திருந்த சிவபெருமானுடைய வீரியத்தை அவளிடம் பெய்து ஆறுமுகனைப் பெற்றான் என 37-ம் சருக்கமும் கூறுகின்றன. இவை ஒன்றுக்கொன்று மாறுபட்ட செய்திகளே. 37-ம் சருக்கம் கார்த்திகைப் பெண்கள் முருகனை வளர்த்தனரென்றும் கூறுகிறது. மேலும் சிவபிரானுடைய வீரியத்தை தீக் கடவுளும் வாயு பகவானும் கூடி உண்டிருக்க தீக்கடவுள் அவ் வீரியத்தை வெளியிட்ட செய்திமட்டும் கேட்கப்படுகிறது. வாயு கொண்ட வீரியம் என்னவாயிற்றோ தெரியவில்லை. அதைப்பற்றிய வரலாறு ஒன்றும் நூலில் இல்லை. இன்னும் கங்கைகொண்ட கருநழுவி விழுந்துவிட்டதாகவும் அதிலிருந்துதான் முருகன் தோன்றினரென்றும் கதை போகிறது. இவைகளையெல்லாம் சிந்தித்துப்பார்த்தால் வேடிக்கையாகவேயிருக்கிறது. இந்த வரலாற்றின் ஆபாசத்தையுணர்ந்த பண்டித நடேச சாஸ்திரியார் தமது மொழிபெயர்ப்பில் இதனை மொழிபெயர்க்காது விட்டுவிட்டு விருப்பமுடையோர் மூலத்தில் பார்த்து தெரிந்துகொள்ளட்டும் என்று எழுதுகிறார். இது முன்னுக்குப்பின் முரணான வரலாறாகஇருக்கிறது. மற்றும் வேண்டுமென்றே குறும்புக்காக எழுதியதுபோலவும் தோன்றுகிறது. முருகன் வரலாற்றைக் கூறுவதான கந்தபுராணம் இதுபற்றி யாது கூறுவதெனப் பார்ப்போம்.

சிவபெருமான் மலைமகளை மணந்தபின் யோகு செய்திருந்தார். அப்போது சூரனாதியாராலே துன்புறுத்தப்பெற்ற வானவர் அவரையடைந்து தமது பகையைவெல்ல ஓர் திருமகனைத் தரவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவர் ஆறு முகங்களோடும் விளங்கினார். ஒவ்வொரு முகத்திலிருந்து ஒவ்வொரு பொறியாக ஆறு தீப்பொறிகள் தோன்றின. அவருடைய ஆணைப்படி அக்கினி தேவனும் வாயுவும் அவைகளைச் சுமந்து கங்கையில் விட்டனர். கங்கை சரவணப்பொய்கையில் அவைகளைச் சேர்க்க, அவை ஆறும் ஆறு முகங்களோடும் கூடிய ஒரு பிள்ளையாக ஆயின. அப்பிள்ளையைக் கார்த்திகைப் பெண்கள் அறுவரும் வளர்த்தனர். இதுவே அவ்வரலாறு. இதில் வால்மீகி முனிவர் வரலாற்றைப்போல ஆபாசமான செய்தியென்றும் காணப்படவில்லை. இவ்வரலாற்றையே வால்மீகி மாற்றி ஆபாசமாகக் காட்டியிருக்கிறார்.

மேலும் வால்மீகி முப்பத்தியேழாம் சருக்கத்திலே அக்கினி தேவனும் ஏனைய தேவரும் பிரமனிடம் சென்று வேண்டவும் அவன், அக்கினி தேவன் அந்நியமாதாகிய கங்கையோடு கூடி ஓர் பிள்ளையைத் தருவான் என்று கூறியதாகவும் அதுகேட்ட தேவர்கள் கயிலாயமலையை அடைந்து அக்கினியை வேண்ட அவன் கங்கையையடைந்து தன்னோடு சேரவேண்டியதாகவும் அவளும் இசைந்து பெண்ணுருவோடு வந்ததாகவும் எழுதுகிறார். இது முன்னுக்குப்பின் மாறாக இருக்கிறது. தன் முன் நிற்கும் அக்கினியை விட்டுவிட்டு தேவர்களிடம் தீ பிள்ளையைப் பெறுவான் என்று நான்முகன் கூறியதாகவும் தங்கள் முன் நின்ற தீயை விட்டுவிட்டு தேவர்கள் கைலாயமடைந்து அங்கு அக்கினியை வேண்டியதாகவும் கூறும் கதை அறிவுடையரால் ஒப்புக்கொள்ளும் தன்மையதா? இதை அறிஞரே தீர்மானித்தல் வேண்டும். இக்கதையைப் பார்த்தால் ஒன்று, அக்கினியும் நான்முகனையடைந்தான் என்ற வாக்கியம் பொய்யாகவேண்டும்; அல்லது நான்முகனையடைந்த அக்கினி வேறு, கைலாயத்திலிருந்து அக்கினி வேறாக இருத்தல்வேண்டும். இதனால் ஆரியர் தம் தெய்வத்தைப்

பற்றிக் கூறும் வரலாறுகளெல்லாம் அறிவுடைய மக்களால் அருவருத்துத் தள்ளத்தக்கனவாகவே இருக்கின்றன. இவ்வாறு அருவருப்புகளைத் தரும் வரலாறுகளையெல்லாம் உண்மைத் தமிழ் மகனாம் கம்பர் விட்டுவிட்டு முருகபிரான் பிறப்பைப் பற்றி ஒரே பாடல் கூறுகிறார்.

அது வருமாறு:—

> "ஆயதிவ்விட மவ்விடம் அவிர்மதி யணிந்த
> தூயவன் றனக்கரிவையிற் றோன்றிய தொல்லை
> வாயுவும் புனற்கங்கையும் பொறுக்கலா வலத்த
> சேய்வளர்ந்தருள் சரவண மென்பதும் தெரித்தான்"

(இதன் பொருள்) "மதியணிந்த பரிசுத்தமானவனாகிய சிவபெருமானுக்கு பார்வதியிடம் தோன்றியவரும், வாயுவாலும், கங்கையாலும் பொறுக்கமுடியாத பலத்தையுடையவருமாகிய முருகக் கடவுள் வளர்ந்தருள் சரவணம் அவ்விடம் என்பதையும் கூறினான்" என்பது. இதனால் இவர் அக்கினியைப்பற்றிய பேச்சே கூறாதவராவர். மேலும் வாயு தூக்கி வந்துபோட அதனைக் கங்கை சுமக்கமாட்டாதவளானாள் என்பதாகிய கந்தபுராண வரலாற்றையே இவர் ஒப்புக்கொண்டவராவர். தீக்கடவுள் கங்கையைக் கூடிய ஆபாச வரலாறுகளையெல்லாம் கம்பர் மறைத்துவிட்டனர். இதுபோலவே அஸ்வமேத ஆபாசங்களையெல்லாம் கூறாது மறைத்துவிட்டமை முன்னரே தெளிவாகப் பார்த்தோம். கங்கை வரலாறு கூறவந்த வால்மீகி கங்கையில் ஆறுமுகக்கடவுள் தோன்றினார் என்று கூறவந்தவர் இவ்வெறுப்பைத்தரும் வரலாற்றைக் கூறினார். இனி மேற் செல்லுதும். ஆறுமுகக்கடவுள் தோற்ற வரலாற்றைக் கங்கைக் கரையிற் கூறியதாக வால்மீகி கூறுகிறார். கம்பரோ சோனை நதிக்கரையிலுள்ள சோலையில் வைத்துக்கூறியதாகக் கூறுகிறார்.

விஸ்வாமித்திரன் பின்னரும் சொல்லத் தொடங்கினான்.

"அயோத்தியில் அரசாண்ட சகர மன்னனுக்கு கேசினி வயிற்றில் அசமஞ்சன் என்றொரு பிள்ளை பிறந்தான். சுமதி

ஒரு கருப்பிண்டத்தைப் பெற அது வெடித்து அதிலிருந்து அறுபதினாயிரம் கருக்கள் வெளியாயின. அந்தக் கருக்கள் நெய்க் குடங்களில் இட்டு வளர்க்கப்பெற்றன. வெகுகாலஞ் சென்றபின் அந்தக் கருக்கள் அறுபதினாயிரம் குழந்தைகளாயின. அசமஞ்சனுக்கு அஞ்சுமான் என்று ஒரு மகன் பிறந்தான். அசமஞ்சன் தீயவனானதால் ஊரிலிருந்து துரத்தப்பட்டான். ஓர்கால் சகரன் அசுமேத யாகஞ் செய்யத்தொடங்கினான். யாகக் குதிரையைக் கெட்ட எண்ணங்கொண்டவனாகிய இந்திரன் ஓர் நாள் இராக்கத உருவங்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் திருடிக்கொண்டு போய்விட்டான். அதைத் தேடத்தொடங்கிய அறுபதினாயிரவரும் கண்டவர்களையெல்லாம் திருடரென நினைத்து அடித்துத் தொந்திரவு செய்தார்கள். அதுகண்ட தேவர்களும், அசுரர்களும் மிகவும் பயங்கொண்டு நான்முகனைப் பார்த்து 'பூமி முழுவதும் சகர புத்திரரால் பிளக்கப்படுகிறது. யாவரும் துன்புறுகின்றனர்' என்றனர். நான்முகன் 'அஞ்சாதீர்! அவர்கள் கபில முனியால் சாம்பராக்கப்படுவர்.' என்றனுப்பினன். அறுபதினாயிரவரும் பூமியைத் தோண்டிக் கீழ் பூமிக்குப்போய் அங்கே கபில முனிவருகே குதிரையைக் கண்டு அவரைத் துன்புறுத்த அவரது சினத்தீயால் சகரர்கள் சாம்பராயினர். அதனையறிந்த அஞ்சுமான் கபிலரை வணங்கி குதிரையைக் கொண்டுவரவும் யாகம் நிறைவேறிற்று. தனது பிள்ளைகள் இறந்த வருத்தத்தால் வாடி அவர்களை உய்விக்கும் வழியைத் தேடி சகரன் முப்பதினாயிரம் ஆண்டுகள் ஆண்டபின் இறந்தான். கருடனால் தனது சிறிய தந்தையரை உய்விக்க வழி கங்கையைக் கொண்டுவருவதே என அறிந்த அஞ்சுமான் சில காலம் அரசாண்டு தனது மகன் திலீபனுக்குப் பட்டங்கட்டி முப்பத்திராயிரமாண்டு தவம்புரிந்தும் கங்கையைக் கொணராமலே இறந்தான். திலீபன் முப்பதினாயிரமாண்டுகள் ஆண்டான். அவனாலும் கங்கையைக் கொண்டுவர முடியவில்லை. அவன் மகன் பகீரதன்பட்டத்துக்கு வந்தான். அவன் நான்முகனை நோக்கி ஆயிரமாண்டுகள் தவம் புரிந்தான். நான்முகன்

பகீரதன்முன் தோன்றி 'இதோ கங்கை உன் எண்ணப்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறாள். கங்கையைத் தரிப்பதற்குச் சிவபிரான் ஒருவரே வல்லவர். ஆதலின் அதுபற்றி அவரைக் கேட்டுக்கொள்' என்று கூறி கங்கையையும் பகீரதன் விருப்பப்படி நடக்கச் சொல்லிவிட்டு மறைந்தான். உடனே பகீரதன் சிவபிரானை நோக்கி ஓராண்டு தவம்புரிந்தான். அவரும் மகிழ்ந்து தோன்றியருளினார். கங்கை சிவபிரானது சடையில் மறைந்தனள். பின் பகீரதன் வேண்டுதலால் ஒரு சிறிது விடப்பட்ட கங்கை ஏழு நதிகளானாள். அவைகளில் மூன்று கிழக்கு முகமாகவும், மூன்று மேற்கு முகமாகவும் ஓடின. ஏழாவதாகிய கங்கை பகீரதன் பின் சென்று சகர புத்திரர் அறுபதினாயிரவரையும் நற்கதிக்கேற்றினள்'' இவ்வாறு கோசிகன் கூறக்கேட்டு மகிழ்ந்து இராமனும் இலக்குவனும் தூங்கினர். விடிந்தவுடன் அவர்கள் கங்கையைக் கடந்து வடகரையடைந்து விசாலையென்ற நகரைக் கண்டனர்.

மேலே கண்ட வரலாற்றை ஆராயுமிடத்து சுமதி என்ற பெண் வயிற்றிலிருந்து வெடித்த அறுபதினாயிரம் கருக்களும் நெய்க்குடத்தில் போடப்பெற்று வளர்க்கப் பெற அவை அறுபதினாயிரம் குழந்தைகளாயின என்ற வரலாறு மிகவும் வியப்பாகவும் இயற்கைக்கு மாறாகவும் இருக்கிறது. அறிஞர் மேலே காட்டப்பெற்றவிந்தையைச் சிந்திப்பாராக. அறிஞராகிய கம்பரோ இவ்வியற்கைக்கு மாறான வரலாற்றைக் குறிக்காது அறுபதினாயிரம் குழந்தைகள் பிறந்தனர் என்று மட்டும் குறித்தனர். இக்கதையில் இந்திரன் இவ்வாறு சகரன்மீது பொறாமை கொண்டு அதன் பயனாக மிக்க இழிந்த செயலாகிய திருட்டினை வேற்றுருக்கொண்டு செய்வானானால் அவனுடைய குடிகளான தேவர்கள் எவ்வளவு கள்ளத்தனமுடையவர்களாக இருக்கவேண்டும்? இவர்களை ஒறுக்காது தெய்வம் அருளிற்றென்றால் அத்தெய்வத்தின் பெருமையை என்னென்பது? பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகிய கொலையை இந்திரன் செய்ததை முன்னர் கண்டோம், இப்போது மற்றொன்றாகிய களவு செய்ததைப் பார்த்தோம். இனி இவன் என்னென்ன

செய்கிறானோ மேலே காண்போம். இந்திரன் செய்த இக்களவு அறுபதினாயிரம் பேர்களின் அழிவில் முடிகிறது. அறுபதினாயிரவரும் கண்ட கண்ட பேர்களையெல்லாம் துன்புறுத்தினர். அதுகண்டு களவில் கைதேர்ந்த தேவர்களும் இந்திரனும் அஞ்சி நான்முகனையடைந்து காக்கவேண்டுகின்றனர். இத்தேவர்களின் வீரந்தானென்னே? இத்தீயோர்களுக்கு நான்முகன் தேர்தல் கூறுகின்றானாம்! இதனால் இந்த நான்முகனைப்பற்றித்தான் யாது கூறுவது?

வால்மீகி முனிவர் சகரன் முப்பதினாயிரம் ஆண்டுகள் ஆண்டானென்றும் அஞ்சுமான் சில காலம் ஆண்டு பின் 32,000-ஆண்டு தவம் புரிந்தானென்றும் திலீபன் 30,000-ஆண்டுகள் ஆண்டனனென்றும் கூறுகின்றனர். இவை நம்ப முடியாதவைகளாயுள. யோகிகளாயிருப்போர் யோக மகிமையால் நெடுங்காலம் வாழலாம். போகிகளாகிய இம்மன்னர் இவ்வளவு காலம் எவ்வாறு வாழ்ந்தனரோ? இவ்வாறு இவர்கள் நெடுங்காலம் ஆண்ட வரலாற்றைக் கம்பர் கூறாது அஞ்சுமானுக்குப்பின் அவன் வழியில் பகீரதன் தோன்றினன் என்கின்றனர்.

பகீரதனைப்பற்றி கம்பர் கூறும் வரலாறு வால்மீகியோடு மாறுபடுகிறது. பகீரதன் 1000-ஆண்டுகள் நான்முகனைக் குறித்துத் தவம் செய்தான். நான்முகன் கங்கைக்கு உத்திரவு தந்தபின் பகீரதன் ஓராண்டு சிவபெருமானை நோக்கி தவம் புரிந்தனன் என்றார் வால்மீகி. கம்பரோ அவன் நான்முகனை நோக்கி 10,000-ஆண்டுகளும், சிவபெருமானை நோக்கி 10,000-ஆண்டுகளும் கங்கையை நோக்கி 5000-ஆண்டுகளும் திரும்பவும் சிவபெருமானை நோக்கி 2000ஆண்டுகளும் மறுபடியும் கங்கையை நோக்கி 2000-ஆண்டுகளும் ஆக 3,0000-ஆண்டுகள் தவம் புரிந்தானென்கிறார். வால்மீகி 1001-ஆண்டுகளென்றதை இவர் 30,000-மாகப் பெருக்கினார். ஒன்றை 1000-ம் 10,000-மாகப் பெருக்கிக் கூறுவது கம்பர்போன்ற கவிகளின் திறமை போலும்! நான்முகனை நோக்கி 1000-ஆண்டு தவம் செய்தானென்று வால்மீகி கூறியதைப் பதினாயிரமாண்டென்றும் சிவபெருமானை

நோக்கி ஓராண்டு தவம் செய்தானென்பதை இரண்டு தடவையாக பனிரண்டரையாயிரமாண்டென்றும் கம்பர் கூறுகிறார்.

மேலும் கங்கையை நோக்கித் தவம் செய்ததாகவே வால்மீகி கூறவில்லை. அப்படியிருக்க, கம்பர் அவளை நோக்கி முதன் முறை 5000-ஆண்டுகளும் பின் 2000-ஆண்டுகளும் தவம் செய்தான் பகிரதனெனக் கூறுகிறார். மேலும் கங்கையிலேயே சகர புத்திரருக்கு உய்வென கருடன் அஞ்சுமானிடங்கூற அவன் அறிந்தனனென வால்மீகி கூறுகிறார். இதற்கு மாறாக கம்பர் அஞ்சுமானுடைய பேரனாகிய பகிரதன் தனது குருவாகிய வசிட்டனுடைய சொல்லின்படி நான்முகனை நோக்கி தவம் செய்ய நான்முகன் தோன்றியவனிடம் கங்கையாலேயே சகர புத்திரர் உய்யவேண்டுமெனக் கூறினானெனப் புதுக் கதை கட்டினார். கங்கை பாதாளஞ் சென்று அறுபதினாயிரம் பேர் நற்கதி அடையச் செய்தவுடன் நான்முகன் தோன்றி பகிரதனைப் பாராட்டி அவனூருக்குப்போகும்படி கூறுகிறான் என்று வால்மீகி முனிவர் கூறுகிற கதையைக் கம்பர் கூறவில்லை. சிவபெருமான் கங்கையில் ஒருபகுதியைஜடையிலிருந்து கீழே விட்டவுடனே அது ஏழு நதிகளாக ஆயிற்று. அவைகளில் ஒன்றே கங்கையென்று வால்மீகி கூறுகிறார். கம்பரோ கங்கை ஒன்றை சடையிலிருந்து வந்ததென்றார். இனி மேற் செல்லுவோம். இதுவரை கூறிய சகர வரலாறும் வால்மீகி முனிவருடைய பாலகாண்டம் 38, 39, 40, 41, 42, 43, 44 ஆகிய ஏழு சருக்கங்களில் கூறப்பெறுவது. இனி 45, 46, 47-ம் சருக்கங்களின் கதையைக் கவனிப்போம். அது வருமாறு:—

விசாலை நகரத்தை விஸ்வாமித்திர முனிவன் அரசகுமாரருடனடைந்ததும் இராமன் அவ்வூரின் வரலாற்றைக் கூற வேண்டினன். உடனே முனிவன் அவ்வரலாற்றைக் கூறினான்

"இந்திரன் சம்பந்தமாக நடந்த கதையைச் சொல்லுகிறேன் கேள். இராம! முன்பு கிருதயுகத்தில் திதி என்பவளுக்கு அசுரர்களும், அதிதி என்பவளுக்கு தேவர்களும் பிறந்தார்கள். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் என்ன செய்தால் சாவில்லாமலும் கிழத்தனமில்லாமலும் இருக்கலாமென்ற எண்ணமுண்டாயிற்று. அவர்கள் ஒன்றுகூடி அவ்வாறு எண்ணி பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து வரும் அமுதத்தை உண்டால் அவ்வெண்ணம் முற்றுப்பெறுமெனத் தீர்மானித்து கடையத் தொடங்கினர். கடலிலிருந்து முதலில் தன்வந்திரியும் பின் அறுபது கோடி அப்சரப் பெண்களும் தோன்றினர். அவர்களை ஒருவரும் கைப்பற்றவில்லை. பின் வாருணி என்ற பெண் 'என்னை யாராவது கைப்பற்றுங்கள்' என்று கூவித் தோன்றினாள் அவளைத் தேவர்கள் கைப்பற்றினர். அவளைக் கைப்பற்றினதால் அவர்கள் மயிர்க்கூச்சடைந்து மிக மகிழ்ச்சியுடையவர்களாயினர்.

பிறகு ஒரு குதிரையும் கௌத்துபம் என்னும் மணியும் தோன்றியபின் அமுதமும் தோன்றிற்று. அவ்வமுதத்தை எடுத்துக்கொள்வதைப் பற்றி தேவர்களும் அசுரர்களும் சண்டை தொடங்கினர். அசுரர்கள் பலர் கொல்லப்பட்டனர். திருமால் மோகினி உருவெடுத்து அமுதத்தைக்கொண்டுபோய் விட்டார். இந்திரன் அவரைப்பணிந்து அமுதத்தை வாங்கிக் கொண்டு அசுரர்களையும் கொன்று அரசு செலுத்தினான். பிள்ளைகளை இழந்த திதி வருந்தி தனது கணவனாகிய காசிபனையடைந்து தன் வருத்தங்களைக் கூறி இந்திரனைக் கொல்ல ஓர் மகனைத் தரவேண்டினள். அம்முனி அவளைத் தொட்டு தேறுதல் கூறி "நீ ஆயிரமாண்டு நல்லொழுக்கத்தோடு தவம் செய்தால் இவ்வேண்டுதல் நிறைவேறும்" என்றலும் மகிழ்ந்து தவம் செய்தாள். அவள் தவம் செய்கையில் இந்திரன் அவளுக்குத் தக்க பணிவிடை செய்தான்.

அவன் அவளுக்கு வேண்டிய தீ, பழம், தருப்பை முதலியவைகளைத் தந்தான். அவன் அவளுக்குச் சிரமத்தைப்

போக்கும்படியான உடம்பு பிடித்தல் முதலியபணிவிடையாவும் எக்காலத்திலும் செய்துகொண்டிருந்தான். அவள் தவமுடிப் பத்து ஆண்டுகளிருக்கும்போது 'உனக்குத் தம்பியுண்டா கப் பத்து ஆண்டுகளே உள. அவன் உன்னை வெல்வதிலேயே எண்ணமுள்ளவனாயினும் உன்னோடு ஒற்றுமையாயிருக்கும் படி சொல்வேன். அவனோடு நீ நீடுவாழ்க' என்றனள். ஓர்நாள் அவள் நடுப்பகலில் தலைமாட்டில் காலை வைத்துத்தூங்கி னாள். அவள் தலைமாட்டில் காலும், கால்மாட்டில் தலையுமாக படுத்து தூங்கினதால் ஒழுக்கந்தவறியவளாயினள். அதுகண்ட இந்திரன் அவளுடைய கருவை அழிக்க நல்ல தருணமாயிற் றென மகிழ்ந்தான். அவன் அவளுடைய பெண்குறி வழியாக உள்ளே புகுந்து கருப்பத்திலிருந்த குழந்தையை ஏழு துண்டு களாக அறுக்கத் தொடங்கினான். அக்குழந்தை அழத்தொ டங்கிற்று. அதனால் திதி விழித்துக்கொண்டாள். இந்தி ரன் அழவேண்டாம் அழவேண்டாம் என்று சொல்லி கொஞ் சமும் மனமிரங்காமல் மிகக் களிப்போடும் அதைத் துண்டித் துவிட்டான். பின் இந்திரன் பெண் குறி வழியாக வெளியே வந்துவிட்டான். அந்த ஏழு துண்டுகளும் ஏழு மருத்துக் களாயின. இதுதான் திதியின் கருவை இந்திரன் அழித்த இடம். வெகு காலத்தின் பின் விசாலன் என்ற ஓர் அரசன் இவ்விடத்தில் விசாலை என்று ஒரு நகரையுண்டாக்கினான். அந்நகரே இது. இதில் அம்மன்னவனின் வழியில் வந்த சுமதி என்ற மன்னன் அரசாள்கிறான்.'' இவ்விதமாகக் கோசிக முனிவன் கூறினான். இவர்கள் வந்திருப்பதைக் கேள்வியுற்று சுமதி எதிர்கொண்டு உபரித்தான். அவ்விசால நகரத்தில் அன்றிரவைக் கழித்துவிட்டு மறுநாள் விஸ்வாமித் திர முனிவனும் அரச குமாரர்களும் மிதிலை நகருக்கரு கேயுள்ள ஓர் பூஞ்சோலையை அடைந்தார்கள். மேலேகண்ட வரலாற்றை பின்னர் ஆராய்வோம்.

கடலைக் கடைவதற்குக் காரணம் தேவர்களும் அசுரர் களும் ஒன்றுகூடி தாம் சாவாமலிருக்கும்பொருட்டு அமுதம் பெற எண்ணிய எண்ணமேயாம். இவ்வால்மீகி கூற்றுக்கு மாறாகக் கம்பர் புதியதோர் கதை கட்டினர். அதாவது ஓர்

வித்தியாதரப் பெண் வைகுந்தமடைந்து திருமகளைப் புகழ, அவள் மகிழ்ந்து கொடுத்த மாலையை வாங்கிவந்து துர்வாச முனியிடம் கொடுக்க, அம்முனி உவந்து இந்திரனிடம் கொடுக்க, அவன் யானைத் தலையில் வைக்க, அது கையாலெடுத்து காலால் நசுக்க, அதைக் கண்ட முனி சினந்து 'உனது செல்வமெல்லாம் கடலில் விழ நீ துயருறுக' எனச் சபிக்க, அவ்வாறே இந்திரன் வளங்குன்றி வருந்தக் கண்ட தேவர்களும், சிவபெருமானும், நான்முகனும் திருமாலைய டைந்துவேண்ட, அவருத்திரவுப்படி இழந்த செல்வங்களைய டைய கடலைக்கடைந்தனர் என்பதாம். இப்புனை கதைக்கு ஆதாரம் வால்மீகி ராமாயணத்தில் ஓரிடத்திலும் கிடையாது. இதனால் கம்பர் கூறுவனவற்றில் ஒரு சிலவே வால்மீகி போக்குடன் ஒத்திருப்பதும் மிகப் பல மாறுபட்டிருப்பதும் புலனாகும். இதனால் கம்பர் தமது மனம்போலெல்லாம் கதையைக் கொண்டுபோகிறாரே ஒழிய வால்மீகியைப் பின்பற்றுகின்றிலர். இப்புனை கதையைப் படிப்பதால் தமக்குப் பிள்ளைப்பேறு முதலியன கிடைக்குமென மயங்கிப் படிப்போரது அறிவுதானென்னே! கம்பருடைய கவிகளும் மிகவும் அருமையானவைகளாயிருந்தாலும் அவை முழுவதும் பொய்ப் புனை கதைகளாகவே உள. ஆதலின் அவை முழுவதும் பயனில் சொற்களே ஆகும். அதனால் இராமாயணத்தைப் படித்துப் பாராட்டுவதெல்லாம் பயனில்சொற்பாராட்டுதலே யாம் என்று துணிக.

கடலைக் கடைந்ததற்குக் காரணம் அதனுள்ளே புகுந்திருந்த இந்திரனுடைய செல்வங்களைத் திரும்பவும் அடைவதேயென்றால், அசுரரும் ஓர்புறம் கடைந்தனரென்றல் அறிவிலாரும் ஒப்புமாறில்லை. ஏனெனில் அசுரர் தேவர்களுக்குப் பிறவிப் பகைவர். ஆதலின் வால்மீகி முனிவர் கூறும் காரணமே அறிவுடையார் ஒப்புமாறுளது. தேவாசுரர்கள் கடலைக் கடைந்தபோது அவர்களுக்குச் சிவபெரு

மானாவது, திருமாலாவது, நான்முகனாவது உடனிருந்துஉத வியவரல்லர்.

வால்மீகியார் கதைப்படி முதலில் ஓராயிரமாண்டுகள் கடைந்தும் ஒன்றும் எழவில்லை. அப்போது வாசுகிப் பாம்பு நஞ்சைக் கக்கிற்று. அந்த ஆலகாலமென்ற நஞ்சால் யாவரும் வருந்தி அலறிச் சிவபெருமானிடம் அடைந்தனர். அப் போது திருமாலும் அங்கே வந்து சிவபெருமானை நோக்கி "சுவாமி! தேவரீர் தேவர்களிலெல்லாம் தலைசிறந்தவர். ஆத லின் முதல் மரியாதை தமக்காம். எனவே தயவு செய்து நஞ் சையுண்டு காத்தருளும்" என்று வேண்டிப்போயினர். சிவ னாரும் நஞ்சையுண்டு உலகத்தாரைக் காத்தார். இவ்வரலாற் றைக் கூறாது நஞ்சும் பிறையும் கடலில் தோன்றின. அவை களைத் திருமால் மங்கைபங்கனுக்களித்தார் என்று கம்பர் கூறுகிறார். இவை உண்மையை மறைக்கும் தன்மைகளாம். இவர் வைணவ ஆரியரிடம் தயவு பெற வேண்டினமையின் இவ்வாறு மறைத்தனர் போலும். இவரைப்போலவே வால் மீகி மொழிபெயர்ப்பாளராகிய வைணவ பண்டித அநந்தாச் சாரியர் இவ்வரலாற்றை மூலத்தைமட்டும் பதித்து மொழிபெ யர்க்காது விட்டிருக்கிறார். இதுவே கம்பர் போக்குக்கும் ஓர் தகுந்த எடுத்துக்காட்டாம். ஆனால் பண்டித நடேச சாஸ் திரியாரும் மன்மதநாததத்தரும் தங்கள் மொழிபெயர்ப்பில் நன்றாக இவ்வரலாற்றை மொழிபெயர்த்துள்ளார்கள்.

கடலிலிருந்தெழுந்த பெண்களில் வாருணி என்பவளைத் தேவர்கள் கைப்பற்றி மயிர்க்கூச்சடைந்து தழுவினர் என்றும் அசுரர் அப்பெண்ணை ஏறெடுத்தும் பார்த்திலர் என்றும் வர லாறு கூறுவதால் தேவர்கள் காமிகளென்பது புலனாகிறது. அசுரர் காமத்தில் ஈடுபடாதவர்போலும். சுராபானம் செய்ப வர் அதாவது கள்ளைக் (சுரா—கள்) குடிப்பவர்கள் சுரரென் றும் சுராபானம் செய்யாதவர்கள் அசுரரென்றும் பெயர் பெற் றதற்கொப்ப இங்கே சுரர் காமிகளாயிருந்ததையும் காண்கின் றோம்.

அமுதமெழுந்தபோது சுராசுரர் அதுபற்றி போரிட்டனர். அதுதான் நல்ல சமயமென்று திருமால் மோகினியுருவெடுத்து அதைத் தூக்கிச்சென்றனர். இந்திரன் அசுரரையெல்லாம் கொன்று திருமாலைப் பணிந்து அமுதம் பெற்று வாழ்வடைந் தான். இதனால் திருமால் செய்த வஞ்சகம் புலனாகிறது. முன்னரும் திருமால் இந்திரனுக்காகச் செய்த தீச்செயல்களை யும் கண்டோம். இவ்வாறு வஞ்சகச் செயலை திருமாலின் மேல் ஆரியர் ஏற்றினர்.

தனது மக்களாகிய அசுரர் மடிந்தமை கண்டு வருந்தி இந் திரனைக் கொல்லத்தகுந்த பிள்ளையை அடையத் திதி தவம் புரிகின்றனள். அதைத் தெரிந்த இந்திரன் அவளையடைந்து அவளுக்கு பணிவிடை செய்து அவளை ஏமாற்றி அவளோடு உடன்வாழ்கின்றனன். தவம் செய்பவளாகிய திதிக்கு உடம்பு பிடித்தல் முதலிய பணிவிடைகளையும் அவன் செய்தனனாம். திதியும் அதற்கு இணங்கியிருந்தனளாம். அவள் செய்த தவத் தின் மேன்மைதானென்னே! முழுமகனாம் இந்திரனைத் தன் உடம்பு பிடித்தல் முதலிய பணிவிடை செய்யத் திதி இடங்கொடுத்தனளே. இவளுடைய பெண் தன்மைதானென் னே! இவள் தன் சக்களத்தி மகன் என்பது பற்றிப்போ லும் இத்தகாத செயல்களுக்கு அவள் இடங்கொடுத்தனள். காமியும் வஞ்சகனுமாகிய இந்திரன் கருப்பமுற்றிருக்கும் தனது பெரிய தாயாகிய திதியின் உடல் பிடித்தல் முதலிய பணிவிடை செய்திருக்கும்போது ஒருநாள் அவள் தலைமாடு கால்மாடு, கால்மாடு தலைமாடாக மாறிப்படுத்தனளாம். அத னால் அவள் தன் ஒழுக்கங்கெட்டதாம். என்னே இவ்வாரி யர்தம் ஒழுக்கத்தைப்பற்றிய கோட்பாடு! இதனை ஒருபெரிய ஒழுக்கக்கேடாகக் கொள்கின்றனரே!

உடனே இந்திரன் தனது பெரிய தாயாராகிய திதியின் பெண்குறிக்குள்ளே நுழைகிறான். என்னே இப்பாதகனின் இழி செயல்! தன் பெரிய தாயாரின் குறிக்குள்ளே நுழைந்து கருப்பப்பையையடைகிறான். அங்கிருந்த சிசுவை இரக்க மில்லாமல் அது அழ அழ ஏழு துண்டுகளாக வெட்டுகிறான்.

இவ்வாறு சிசுக்கொலை, கருவழித்தல் முதலிய மனத்தினாலும் நினைக்கமுடியாத பெரும் பாதகங்களை இந்திரன் செய்கின்றான். தலைமாறிப் படுத்ததைப் பெரியக் குற்றமாகக் கருதும் ஆரியர் இந்திரனுடைய இவ்விழி செயல்களைக் குற்றமாகக் கருதாது இந்திரனைப் பாராட்டுகின்றனர். இவ்விந்திரனுக்காக நான்முகனும், திருமாலும் பலவுதவிகளைச் செய்கின்றனர் என்றும் கதைகளெழுதுகின்றனர். தனது தந்தைக்கு முதல் மனைவியாகிய திதியின் பெண்குறியை அவள் தூங்கும்போது பார்த்து அதன்வழியாகக் கருப்பையில் நுழைய இப்பாவி இந்திரனின் மனம் எவ்வாறு துணிந்ததோ? இவ்வளவு ஆபாசமான கதைகளையெல்லாம் கம்பர் எவ்வாறு தமது பாடலில் எழுதுவார்? அவர் தமிழ் மகனாதலின் இவைகளையெல்லாம் ஒழித்து சுருக்கமாக ஒரே பாடலில் திதி தவம் செய்வதை உணர்ந்த இந்திரன் அவளையடைந்து பணிந்திருந்து அவள் வயிற்றிலிருந்த குழந்தையை ஏழு கூறுகளாக வெட்டினன் என்று கூறிவிடுகிறார். அப்பாடல் வருமாறு:—

“கேட்டவாசவன் அன்னவட் கடிமையிற் கிடைத்து
வாட்டமாதவத் துணர்ந்தவள் வயிற்றுறு மகவை
வீட்டியே யெழு கூறுசெய்திடுதலும் விம்மி
நாட்டநீர்தர மருத்தெனு நாமமு நவின்றான்.”

இப்பாற்கடல் கடைந்ததும், திதி தவம் செய்ததும், இந்திரன் கருவழித்ததுமாகிய வரலாறெல்லாம் கங்கை வரலாறு கூறுமுன் சோனை நதிக்கரையிலுள்ள ஓர் சோலையில் நடந்ததாகக் கூறுகிறார். இது பெரிய பிழை. முதல் நூலாசிரியராகிய வால்மீகிமுனிவரோ இக்கதை விசாலையென்னும் நகரம் உண்டாவதற்குமுன் அங்கிருந்த சோலையில் நடந்ததாகக் கூறுகிறார். இது ஒரு முக்கியமான மாறுபாடே. விசாலா நகரத்திற்கு கங்கையைக் கடந்து கோசிகமுனிவரும் வந்தனர். அவ்வூர் மன்னன் உபசரிக்க அங்கு அன்று தங்கி மறுநாள் மிதிலை கண்டனர் அம்மூவரும் என்றும் கம்பர் கூறுகிறார். விசாலையைப்பற்றி விசாரித்ததும் அதன் பழைய வர

லாறு கூறியதுமாகிய ஒன்றும் அவர் குறித்திலர். இவ்வாறு கம்பர் வால்மீகி கூறுவதை மாற்றி மாற்றியும், மறைத்து மறைத்தும், புதுவது புதுவது புனைந்தும் கம்பர் தமது பாடல்களைப் பாடிப்போகின்றனர். இனி, மேற் செல்லுதும்.

ஏழாம் அத்தியாயம்.

மிதிலா நகரத்தின் பக்கத்திலிருந்த அந்தப் பூங்காவனத்தில் பழக்கமற்றுப் பாழாய்க்கிடந்த ஒரு அழகான ஆச்சிரமத்தைக் கண்டு இராமன் அதன் வரலாற்றை வினவ விஸ்வாமித்திரன் கூறுவானாயினன். "இந்த இடம் கௌதம முனிவருடையது; அம்முனிவன் தனதுமனைவியாகிய அகலிகையோடு கூடித் தவம் செய்துகொண்டிருந்தனன். ஓர் நாள் இந்திரன் அந்த கௌதமனில்லாத தருணம் தெரிந்துகொண்டு கௌதம வேடம்பூண்டு அகலிகையிடம் வந்து "மிக்க அழகுடையவளே! உன்னோடு நான் புணர்ச்சி செய்யக் கருத்துக் கொண்டிருக்கிறேன். அதைக் கோரி வருகிறவர்கள் ருது காலத்தை எதிர்பார்க்கமாட்டார்கள்; ஆதலால் இப்போதே புணர்ச்சி செய்யவேண்டும்'' என மொழிந்தான். அப்பெண் முனி வேடத்தோடு வந்திருப்பவன் இந்திரன் என அறிந்து தனக்கு தேவேந்திரன் கிடைத்தானென்று மிக மகிழ்ந்து அறிவு கெட்டவளாகி அவனிடத்தில் விருப்பங் கொண்டாள். புணர்ச்சி முடிந்தவுடன் மிகவும் திருப்தியடைந்தவளாகி அவள் இந்திரனைப் பார்த்து "பிரபு! எனது கருத்து கைகூடிவிட்டது. ஒருவருக்குந் தெரியாமல் இவ்விடத்தினின்று சீக்கிரமாகப் போய்விடும். எல்லாவிதத்தாலும் உம்மையும் காப்பாற்றிக் கொண்டு என்னையும் காப்பாற்றும்'' என்று சொன்னாள். இந்திரன் புன்னகையோடு அகலிகையைப் பார்த்து "கட்டழகியே! நான் உன்னைக் கூடி மிகுந்த களிப்பெய்தினேன். வந்தபடியே போய்வருகிறேன்'' என்றனன். இவ்வாறு இந்திரன்

அகலிகையைப் புணர்ந்துவிட்டு கௌதமனிடம் பயந்து பரபரத்து வெளியிற் புறப்பட்டான். அப்போது அம்முனிவன் அவனைக் கண்டுகொண்டான். இந்திரன் அஞ்சி வாடிய முகமுடையவனாயினான். உடனே முனிவன் ''அறிவு கெட்டவனே! என்னைப்போல உருவந்தரித்துச் செய்யத்தகாத இச்செயலைச் செய்தாய். ஆதலால் நீ விருஷணமற்றவனாய் விடுக'' என்று கடுஞ்சொல்லுரைத்தான். அச்சொல்லை அவன் சொன்னவுடனே இந்திரனுடைய விருஷணங்கள் (பீசங்கள்—விதைகள்) இரண்டும் அப்பொழுதே பூமியில் விழுந்துவிட்டன. பின் அம்முனிவன் அகலிகையைப்பார்த்து ''நீ நெடுங்காலம் உணவில்லாமல் காற்றைமட்டும் குடித்து சாம்பலில் விழுந்து தவித்து ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் இங்கே இருப்பாய். இராமன் இவ்வனத்திற்கு வரும்போது இச்சாபம் நீங்கும். அப்போது என்னோடு சேர்ந்து களிப்பாய்'' என்று சபித்தான். பின் அம்முனி இமையமலையின் சிகரத்தில் தவம் செய்துகொண்டிருந்தான். இந்திரன் விதைகளற்றவனானவுடனே மிக வருந்தி தேவர்களைப் பார்த்து ''உங்களெல்லாரையும் அதிகாரத்தினின்று தள்ளுவதற்காக மகாத்மாவாகிய கௌதமமுனிவன் செய்த தவத்திற்கு நான் இடையூறு செய்து கோபத்தையுண்டாக்கி உங்களுக்கு நன்மையைச்செய்தேன். அம்முனிவன் கோபங் கொண்டதினால் நான் விருஷணமற்றவனாய்விட்டேன். அவ்வகலிகையும் சாபம் பெற்றவளாய்விட்டாள். எங்களிருவருக்கும் அம்முனியைப் பெரிய சாபங் கொடுக்கும்படி நான் செய்து அம்முனியின் தவத்தையழித்தேன். ஆதலால் நீங்கள் என்னை விருஷணமுடையவனாகச் செய்யுங்களென்றான். அதுகேட்ட தேவர்கள் பிதிர் தேவதைகளிடம் வந்து ''இப்போது உங்களுக்கு யாகத்தில் கொடுக்கப்படுகிற ஆட்டுக்கடா விருஷணத்தோடு (விதைகளோடு) கூடியிருக்கிறது. இந்திரனோ விருஷணமில்லாதவனாக இருக்கிறான். ஆதலால் ஆட்டுக்கடாக்களின் விதைகளைச் சீக்கிரமாகக் கொண்டுவந்து இந்திரனுக்குக் கொடுங்கள். விதையடிக்கப்பெற்ற ஆட்டின் மாமிசம் மிக்க களிப்பையுண்டாக்கும். இனிமேல் மனிதரும் காயடித்த

ஆட்டின் மாமிசத்தையே உங்களுக்குக் கொடுப்பார்கள்'' என்று வேண்டினர். உடனே பிதிர் தேவதைகள் ஒன்று கூடி கடாவின் விருஷணங்களை எடுத்து இந்திரனுக்கு உபயோகப்படுத்தினார்கள். அதுமுதல் பிதிர் தேவதைகள் விருஷணமற்ற ஆட்டுக்கடாக்களைப் புசிக்கிறார்கள். இந்திரனும் ஆட்டின் விருஷணத்தையுடையவனாய்விட்டான். இராமா! நீ இந்த ஆச்சிரமத்துள்ளே போய் அகலிகையைப் பழையபடி எல்லோருடைய கண்ணுக்கும் புலப்படுபவளாக்கவேண்டும்'' என்று விஸ்வாமித்திர முனிவன் கூறினன்.

இராமனைக் கண்டதும் முனிவன் சொல்லின்படி அகலிகை எல்லோருடைய கண்ணுக்கும் புலனாயினாள். உடனே இராம இலக்குவர் அவளுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டார்கள். அவளும் இவர்களை வணங்கினாள். பின் அவள் கௌதம முனிவனை அடைந்தாள். அம்முனிவனால் உபசரிக்கப்பெற்ற விசுவாமித்திர முனிவன் அப்பிள்ளைகளை அழைத்துக்கொண்டு மிதிலையை அடைந்து அங்குள்ள சனக மன்னவனுடைய வேள்விச்சாலையை அணுகினான். இவ்வரலாற்றை ஆராய்வோம். மேலே கண்ட வரலாறு வால்மீகி பாலகாண்டம் 49, 50-ம் சருக்கங்கள்.

இவ்வரலாறு மிகவும் வெறுக்கத்தகுந்ததாக உள்ளது. இது பெண் கொலைபாதகனும் திருடனும் வஞ்சகனுமாகிய இந்திரன், வீட்டுக்கு விலக்கமாக இருந்த ஒரு பெண்ணைப் புணர்ந்ததையே மேலே குறித்தது. தீண்டத்தகாத ஒரு பெண்ணை அவன் கணவனில்லாத சமயம் பார்த்து அவள் கணவனைப்போல மாறுவேடம் பூண்டு இந்திரன் அகலிகையையடைந்து தன்னைச் சேரவேண்டுகின்றனன். அவள் விலக்கமாக இருந்ததைக் கூற ''அது பரவாயில்லை; அவசரத்திற்குக் குற்றமில்லை; சும்மா 'கூடலாம்'' என்கிறான் இந்திரன். இவ்விழிமகனுடைய இழிந்த அறிவுதானென்னே! அவளோ தேவேந்திரனோடு தனக்குப் புணர்ச்சி கிடைத்ததே என மிக மகிழ்ந்து தன்னைக்கூடுமாறு அவனை வேண்டுகிறாள். உடனே இருவரும் கூடுகின்றனர். இந்த வரலாற்றை கம்பர் சற்று

மாற்றிக்கூறுகிறார். அதாவது இந்திரன் அகலிகையைக் கூடி இன்புறுகிறான். அப்புணர்ச்சி மத்தியிலேயே அவள் அவனை இன்னானென அறிகிறாள். அறிந்தபின்னும் அச்செய்கை தக்கதன்றென உணராளாய் அவனோடு இன்பம் நுகருகிறாள் என்று கம்பர் கூறுகிறார். அச்செய்யுள் வருமாறு:—

"புக்கவளோடும் காமப் புதுமண மதுவின்தேறல்
ஒக்கவுண்டிருத்தலோடு முணர்ந்தனள் உணர்ந்தபின்னும்
தக்கதன்றென்ன ஓராள் தாழ்ந்தன ளிருப்ப"

அவள் அப்போது விலக்கமாயிருந்த செய்தியைக் கம்பர் மறைத்தார். கௌதம முனிவன் இந்திரனைக் கண்டபோது அவனொரு பூனையைப்போல உருவந் தாங்கிச் சென்றானெனக்கம்பர் ஓர் புதுக்கதை புனைந்தார். இது வால்மீகி கூறாதது. இந்திரன் முனியுருவுடனிருக்கும்போதே அம்முனி அவனைக் கண்டதாக வால்மீகி கூறுகிறார்.

அகலிகையைக் கல்லாகப் போகும்படி கௌதமன் சபித்தனனென்றும், அவள் அவனை வேண்ட இராமனுடைய கால் பட்டவுடன் கல்லுரு நீங்கி முன்னைய பொன்னுரு வருமென அம்முனி சாப விடை தந்தனனென்றும் கம்பர் கூறுகிறார். அதன்படியே இராமனுடைய கால் பட்டவுடன் கருங்கல்லாக இருந்த அகலிகை பெண்ணுருவடைகிறாளென்றும் கம்பர் கூறுகிறார். இவ்வரலாறு வால்மீகிக்கு முற்றிலும் மாறுபட்டது. வால்மீகியோ அகலிகையை ஒருவர் கண்ணிலும் படாமலிருக்குமாறு முனிவன் சபித்தானென்று கூறுகிறார். இராமன் அந்த ஆசிரமத்துள்ளே போனவுடன் அவனைக் கண்டபோது அகலிகை பிறர் கண்ணிற்படும் தன்மையளாகிறாள்.

வால்மீகி கூறுகிறபடி இந்திரன் விருஷணமற்றவனாகிறான். இதன் கருத்து என்னவென்றால் ஆண் தன்மை இழந்தவனாகிறான். அதாவது ஆண் தன்மைக்கு முக்கிய காரணமாகவிருக்கிற விருஷணமற்ற காளைகள் (காயடித்த காளைகளை) எவ்வாறு ஆண் தன்மையற்றுப் போகின்றனவோ,

அவ்வாறே ஆண் தன்மையற்றுப் போகிறான். இந்தச்சாபம் மிகவும் கொடுமையானது. அகலிகையென்ற பெண்ணின் சம்மதம் பெற்று அவளும் மிகுந்த விருப்பத்தோடு தழுவக் கூடிய இந்திரனுக்கு நினைக்கவும் கொடுமையான சாபத்தைக் கௌதமன் தந்தானென்றால் அவன் இழி தன்மைதானென்னே! என் வீட்டுப் பசு பொல்லாதது; உன் வீட்டுக் காளையை அடக்கிக்கொள் என்று ஓர் அறிவீனன் கூறியதுபோலன்றோ உள்ளது இச்செயல். அவன் தன்னுடைய மனைவியைக் கண்டித்திருக்கவேண்டியது அவசியமே. இல்லையாயினும் ஔவையார் உபதேசிக்குமாறு சற்றேனும் ஏறுமாறாக இருப்பளேயாமாகில் கூறாமற் சந்நியாசங் கொண்டிருக்கவேண்டும். இந்திரனுக்கு இவ்வித கடுமையான சாபம் கொடுத்த கௌதமன் தன்னுடைய மனைவிக்குச் சாதாரணமான சாபமே தருகிறான். அதாவது அவள் ஒருவர் கண்ணிலும் படாமலிருக்க வேண்டுமென்பது. இதனால் அவன் அவளைச் சிறிதுகாலம் தள்ளிவைத்திருந்தான் போலக் காணப்படுகிறது. கடைசியாக இந்திரனால் கற்பழிக்கப்பட்ட அகலிகையைச் சேர்த்துக் கொள்ளவும் செய்கிறான் அம்முனிவன். இவ்வாரியர்களுடைய கற்பு நிலைதானென்னே? தன்னிடத்தில் பிரியமில்லாமலிருக்கிற இம்மங்கையை இவன் ஏன் மணந்தான்? அதனாலன்றோ அவள் இந்திரனை விரும்புகின்றாள். இக்கௌதமன் தன் மனைவியிடத்திலிருந்த அபிமானத்தினாலேதான் அவளுக்குக் குறைந்த சாபத்தைக் கொடுத்து பின் தன்னோடு சேர்த்துக்கொண்டான்போலிருக்கிறது. இவ்வாறு தன் மனைவியிடத்தில் தான் வைத்திருந்த அபிமானத்தால் அவள் விபசாரியானமையை நேரிலே கண்டு அவளைத் திரும்பவும் சேர்த்துக்கொண்ட முனிவன் என்ன தவம் செய்துகொண்டிருந்தானோ? இவனும் ஒரு முனிவனாம்! இவன் தேவர்களையெல்லாம் அவர்கள் பதவியிலிருந்து விலக்குவதற்காகத்தான் தவம் செய்தானாம்! இச்செய்தியை இந்திரன் தேவர்களிடம் கூறிய மொழிகளால் அறிந்துகொள்ளலாம். தேவர்களைப் பாதுகாப்பதற்காகவே இந்திரன் கௌதமன் மனைவியைப் புணர்ந்து அவனுக்குச் சினமூட்டினனாம். ஒருவனுக்குச்

சினமூட்டவேண்டுமென்றால் அவன் மனைவியைக் கற்பழிப்பதுதான் அதற்கு வழிபோலும்! என்னே இப்பாதகனுடைய இழி செயல்! இவனுக்காக நான்முகன், திருமால் முதலிய தேவர்கள் இரங்கி இவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தனரென்றால் அவர்களுடைய தெய்வத் தன்மைதானென்னே! இவ்விவரமெல்லாம் முன்னரே கண்டோம்.

எட்டாம் அத்தியாயம்.

விருஷணமற்ற இந்திரனுக்கு பிதிர் தேவதைகள் தாங்கள் தின்னும் ஆட்டுக்கடாக்களின் விருஷணங்களை ஒட்ட வைக்கின்றனர். அதுமுதல் அவர்கள் விருஷணமற்றுக் கொழுத்திருக்கும் ஆட்டுக் கடாக்களை உண்பவராயினராம். இவ்வாபாசமான கதையை என்னவென்பது? இவைகளையெல்லாம் எழுத நேர்ந்தது எமது பாவமே எனினும் உண்மை உணராது சாதாரண மக்களெல்லோரும் இவைகளை உத்தமமான கதைகளென நம்பி பயபக்தியோடு படிக்கின்றனரே என்னும் பரிதாபமே இவைகளை விவரமாக எழுமாறு எம்மைத் தூண்டிற்று. இவ்வரலாற்றைக் காய்தல், உவத்தல் இல்லாது சமமான மன நிலையோடு சீர்தூக்கிப் பார்க்கும்படி அறிஞரை வேண்டுகின்றோம்.

இதனைப்படிக்கும் தமிழ் மக்கள் அனைவரும் இவ்வாபாச வரலாறு தம்முடையதன்று என்றும் ஆரிய மக்களுடையதென்றும் எப்போதும் மறவாமல் மனதிற் கொள்ளவேண்டுகின்றோம். மேலே கண்ட வரலாற்றில் பிதிர் தேவதைகளுடைய வரலாறும் வருகிறது. இவ்விழிவான மாமிச உணவினரைப் பிதிருக்களென்று ஆரியர் கூறுகின்றனர். இவர்களைத் தமிழர் தம்முடைய பிதிர்தேவதைகளென்று மயங்கிக் கொள்கின்றனரே! பரிதாபம்!!பரிதாபம்!!! இனியாவது தமிழ் மக்கள் உண்மையுணர்வார்களாக. இத்தேவர்கள் முனிவர்

களுடைய வரலாறுகளை இராவணேஸ்வரனைப்பற்றி ஆராயு மிடத்து விவரமாக ஆராய்வோம்.

கௌதம முனிவன் இந்திரனுக்குக் கொடுத்ததாக வால்மீகி கூறும் சாப வரலாறு சான்றோர் செய்யத்தகாததாகவும் மிகவும் கொடுமையாகவும் இருக்கிறது. இவ்வரலாற்றைக் கம்பர் மிகவும் ஆபாசமானதாக ஆக்கினார். இந்திரன் பூனை யுருவெடுத்து ஓடினதாகவும் அவனைக் கண்ட கௌதமன் அவனுடைய உடம்பில் ஆயிரம் பெண் குறிகள் உண்டாகவெனச் சபித்தனரென்றும் கம்பர் கூறுகிறார்.

> ''ஆயிர மாதர்க்குள்ள அறிகுறி நினக்குண்டாகென்
> றேயினன் அவையெல்லாம் வந்திைந்தன இமைப்பின்
> [முன்னம்''

தசரதன் செய்த அஸ்வமேத யாகம் போன்ற ஆபாசமான வரலாறுகளையெல்லாம் மறைத்தோ மாற்றியோ எழுதிய கவியரசு கம்பருடைய உயர்ந்த அறிவில் இவ்வாபாசக் கதையையும் பாடவேண்டுமென்னும் தோற்றம் எவ்வாறு எழுந்ததோ? அவர் வாய் எவ்வாறு இவ்விழி வரலாற்றைக் கூறத்துணிந்ததோ? அவர் கரந்தான் எவ்வாறு எழுதிற்றோ? என்னென்பது? ஆயிரம் பெண் குறிகள் ஒருவனுடைய உடலிலே பொருந்துமாறு ஒரு முனிவன் சபித்தானென்று எழுதினாரே கவி வல்லார் கம்பர்! அல்லது கம்பர் எழுதினதாகப் பிறர் இடைச்செருகலாக வந்ததோ இது? என்னென்பது! கம்ப இராமாயணத்தில் வந்துள்ளபடி தேவர்கள் நான்முகனை முன்னிட்டுக்கொண்டு கௌதம முனிவனையடைந்து வேண்டிக்கொள்ள கௌதமன் அவைகளை ஆயிரம் கண்களாகுமாறு சாப விடை தந்தனனாம். உடனே ஆயிரம் யோனிகளும் ஆயிரம் கண்களாயினவாம். இரண்டு கண்களோடு இந்திரன் இவ்விதமான கெட்ட நடைகள் புரிவானாயின் ஆயிரம் கண்களோடு என்னென்ன கேடு புரிவானோ என்று கௌதமன் ஓர்ந்துபார்த்தானில்லைபோலும்! அதிலிருந்து ஒன்று ஊகிக்கற்பாலது என்னவெனில் தீ

பொழுக்கமுடையவனாகிய இந்திரன் தன் நடைக்கேட்டால் உடம்பெல்லாம் வெட்டை என்று சொல்லப்படுகிற கணக்கில்லாத புண் நோயையடைந்தான்போலும். அதனால் அவன் உடம்பெல்லாம் கணக்கிறந்த புண்களாயினபோலும். அதனையே கவி இவ்வாறு கூறுவராயினர் என்பதே அவ்வூகம்.

கம்பர் கூறும் இவ்வரலாறு வால்மீகியோடு பொருந்துமாறில்லை. ஏனெனில் அவர் இவ்வரலாறு கூறும்போது இந்திரனைப்பற்றிக் கூறுமிடங்களில் ஆயிரங் கண்ணனென்கிறார். ஆதலின் இவன் அகலிகையைக் கூடும் முன்னரே இவனுக்கு ஆயிரங் கண்கள் இருந்திருக்கவேண்டுமென்பதாகிறது. எனவே அவ்வாறு ஆயிரங்கண்கள் இந்திரன் பெறுவதற்கு வேறு காரணம் இருந்திருக்கவேண்டும். இவ்விடத்தில் இந்திரனுக்கு வடமொழியில் சகஸ்ரயோனி என ஒரு பெயர் இருப்பது சிந்திக்கற்பாலது. இனி இவ்வெறுக்கத் தகுந்த வரலாற்றை இவ்வளவோடு விடுத்து மேற்செல்லுதும்.

அறிஞர்களாகிய தமிழ் மக்களுக்கோர் வேண்டுகோள். நாம் இதை எச்சமயத்திலேனும் அல்லது எத்தெய்வத்திடத்தேனும் வெறுப்பினால் எழுதுகின்றனமென நினைத்தல் கூடாது. தமிழ் மக்கள் தமது தெய்வங்களுள் ஒன்றாக எண்ணி வணங்கும் திருமால் வேறு; இவ்வாரியர் தெய்வம் வேறு. தமிழ் மக்கள் வணங்கும் திருமாலைப்பற்றி சமயம் வாய்க்கும்போது விவரமாக எழுதுவோம். இவ்வாராய்ச்சியிலும், இராமாயணத்திலும் வரும் திருமால், நான்முகன் முதலியோர் ஆரியருடைய தெய்வங்கள். அவ்வாரியன் தேவதைகளின் தன்மைகளை ஆரியர் கூறுமாறு எடுத்துக் காட்டி அவர்களைத் தம் தெய்வமென வணங்கும் தமிழ் மக்களுக்கு அவற்றின் உண்மையை விளக்கிக் காட்டவே ஈதெழுதுகிறோம்.

விஸ்வாமித்திர முனிவன் வந்திருப்பதை அறிந்த சனக மன்னன் தனது புரோகிதனான சதானந்தனை அழைத்துக் கொண்டு எதிர்கொண்டுவந்து இன்சொற் கூறிவரவேற்றான்.

சதானந்தன் அகலிகையினுடைய மகன். அவளைக் கௌதமன் ஏற்றுக்கொண்டமை தெரிந்து அவன் மகிழ்ச்சியடைந்தான். விஸ்வாமித்திரனுடைய வரலாற்றை சதானந்தன் இராமனுக்குக் கூறினான். அது வருமாறு:—

காதி என்பவனுடைய மகன் விஸ்வாமித்திரன். அவன் அநேக ஆயிரமாண்டு ஆண்டனன். விஸ்வாமித்திரன் ஓர் சமயம் தன் சேனைகள் புடைசூழ பல தலங்களையும் பார்த்து வருபவன் வசிட்ட முனிவனுடைய ஆசிரமத்தையடைந்தான். விஸ்வாமித்திரனுடைய தகப்பன் காதி. அவன் தந்தை குசநாபன். அவன் தந்தை குசன். அவன் தந்தை நான்முகன். ஆதலின் நான்முகனின் பேரனுக்குப் பேரன் விஸ்வாமித்திரன். வசிட்டனோ நான்முகனுடைய மகன். தனது ஆசிரமத்தையடைந்த விஸ்வாமித்திரனுக்கு வசிட்டன் தனது பசுவாகிய காமதேனுவின் உதவியால் விருந்து செய்தான். காமதேனு விஸ்வாமித்திரனுடைய சேனையில் எல்லோருக்கும் அவரவர்கள் விரும்பிய பொருளையெல்லாம் தந்தது. விஸ்வாமித்திரன் ஆசைகொண்டு அப்பசுவைத் தனக்குக் கொடுத்துவிடும்படி கேட்க வசிட்டன் மறுத்தான். உடனே அரசன் அப்பசுவை இழுத்துக்கொண்டுபோனான். அது வசிட்டனிடம் ஓடிவந்து முறையிட்டது. வசிட்டன் காமதேனுவை நோக்கி "நான் பலமில்லாதவன். அரசனோ மிக வலியுடையான். அவனோ எனது விருந்ினனாக இருப்பதோடு பூமிக்குச் சொந்தக்காரனாகவுமிருக்கிறான். சேனாபலமும் அவனுக்குஇருக்கிறது" என்று கூறினான். பசுவோ "பிராமணராகிய நீர் க்ஷத்திரியராகிய விஸ்வாமித்திரரைவிட பல வகையிலும் பலமுடையீர். எனக்கு ஆணை தந்தால் நானே அவனை அழிக்கிறேன்" என்றது. வசிட்டனாணையால் பசு ஒரு முக்கலிட்டது. அதிலிருந்து பல வீரர் தோன்றினர். அவர்களையெல்லாம் அரசன் அழித்தான். பின்னும் அது ஒரு முக்கலிட்டது. அதன் மடியிலிருந்து பப்பலவர்களும் காம்போசர்களும் தோன்றினர். அதன் யோனியிலிருந்து யவநர்களும், குதத்திலிருந்து சகர்களும், மயிர்க்கால்களிலிருந்து மிலேச்சர் முதலிய வீரர்களும் உண்டாயினர். அவர்கள்

அரசன் சேனையை அழித்தனர். அதுகண்ட அரசன் மக்கள் நூற்றுவரும் வசிட்டனோடு எதிர்த்தனர். முனிவன் அவர்களை ஒரு முகூர்த்த காலத்தில் சாம்பலாக்கினான். அது கண்ட விஸ்வாமித்திரன் வருந்தி சாகாமல் மீந்த ஒரு மகனை அழைத்து அரசை அவனிடம் ஒப்புவித்து இமயமலையையடைந்து தவம் புரிந்தான். அவனுக்குச் சிவபெருமான் தோன்றி பல அம்புகளையும் அருளினார். அதனால் அகந்தைகொண்ட விஸ்வாமித்திரன் வசிட்டனோடு கடும்போர் தொடங்கினன்.

அதுகண்ட வசிட்டன் "உனது க்ஷத்திரிய பலமெங்கே, என் பிராமண பலமெங்கே" என்று கூறி ஒரு தடியோடு போர் செய்தான். அத்தடியின் முன் அரசன் அம்புகளெல்லாம் நாசமாயின. அதனால் அரசன் தோற்றனன். அத்தோல்வியால் மனமிக வருந்தி தனக்கு வசிட்டனோடு ஏற்பட்ட வீணான சண்டையை நினைந்துபெருமூச்சுவிட்டுதனது மனைவியை அழைத்துக்கொண்டு "நான் இனி பிராமணத் தன்மையை அடையப்பெருந்தவம் செய்வேன்" என்று கூறித் தென் திசையையடைந்தான். இவ்வளவில் இவ்வரலாற்றை ஆராய்வோம்.

நான்முகனுடைய மக்களில் ஒருவனாகிய வசிட்டன் பிராமணனாகவும் மற்றொருவனும் அவன் வழிப்பிள்ளைகளும் அரசனாகிய க்ஷத்திரியராகவும் இருந்தமை காண்கிறோம். இதனால் ஒருவனுடைய மக்களில் சிலர் பிராமணராகவும், சிலர் க்ஷத்திரியராகவும், மற்றும் சிலர் மற்றைய குலத்தினராகவும் இருக்கலாமெனத் தெரிகிறது. வசிட்டனும் அவன்உடன் பிறந்தவனாகிய குசன் வழித்தோன்றலுக்கும்நிகழ்ந்தசண்டையே இது. இதனால் க்ஷத்திரியர் முதலிய பல வருணத்தாரினும் பிராமணரே வலியுடையவர் என்பதை விளக்குவதற்காக இக்கதை குறிக்கப்பெறுவது என அறியலாம். ஆனால் சாதாரணமாக இருந்த பிராமணரெல்லாம் இவ்வலியுடையரென இக்கதை விளக்கவில்லை. வசிட்டனைப்போன்ற முனிவரே பிராமணர், அவர்களே வலியுடையோர் என்பதுதான் இக்

கதையால் நிலைநாட்டப் பெறுவது. வசிட்டனோ பெண்டாட்டி பிள்ளைகளோடு வாழ்ந்தான். இவனுடைய செயல்களையும் இவன் போன்ற முனிவர்களுடைய செயல்களையும் பிராமணப் பெருமையையும் அடுத்த கட்டுரையில் ஆராய்வோம். பெண்டாட்டி பிள்ளைகளோடு காட்டிலிருந்த வசிட்டன் ஓர் தடியால் அரசனாகிய விஸ்வாமித்திரனை வென்றானென்பது விந்தையாகவே உள்ளது. இவன் காமதேனுவிடம் கூறிய மொழிகளைக் கவனித்தால் மிகவும் பயங்காளியென்பது தெரிகிறது. இவன் விஸ்வாமித்திரனையும் அவன் சேனைகளையும் வென்றதோடு விஸ்வாமித்திரனது மக்கள் நூற்றுவரையும் எரித்துவிட்டானாம்.

ஒன்பதாம் அத்தியாயம்.

விஸ்வாமித்திரன் பல தலங்களையும் சுற்றி வருபவன் வசிட்ட முனிவன் இடத்தையும் அடைந்தானென வால்மீகி கூறுகிறார். கம்பரோ அவன் வேட்டையாடச் சென்றவன் வசிட்ட முனிவனையடைந்தானெனக் கூறுகிறார். வசிட்டன் அயோத்தியையடுத்த வனத்திலேயே இருந்தவனாவன். அது அந்நிய நாட்டுக்காடாதலால் அங்கே வேட்டையைக் குறித்து விஸ்வாமித்திரன் சென்றானென்பது பொருந்தாததாகும். வால்மீகி கூறும் வரலாறே பொருந்துவதாக உள்ளது.

விஸ்வாமித்திரன் தனது நூறு பிள்ளைகளும் மாண்டவுடன் மீந்த ஒரு மகனுக்குப் பட்டங்கட்டிச் சிவபெருமானை நோக்கி தவம் செய்து பின் வசிட்டனோடு சண்டையிட்டுத் தோற்றான் என்று வால்மீகி கூறுகிறார். கம்பரோ இதற்கு மாறுபடக்கூறுகிறார். விஸ்வாமித்திரன் தன் மகனொருவனுக்கு பட்டங் கட்டியதைக் கூற அவர் முற்றும் மறந்துவிட்டனர். மேலும் தனது பிள்ளைகள் நூறுபேரும் இறந்தவுடன் விஸ்வாமித்திரன் வசிட்டனோடு சண்டையிட்டான்

என அவர் கூறுகிறார். அச்சண்டை மத்தியில் விஸ்வாமித்திரன் சிவபெருமானை நோக்கி வணங்கி வழுத்தவே அவர் தோன்றி ஓர் படை தந்ததாகக் கம்பர் கூறுகிறார். வால்மீகி முனிவர் இவ்வாறு கூறாது தன் பிள்ளைகள் இறந்தவுடன் விஸ்வாமித்திரன் இமயமலையையடைந்து தவம்புரிந்து சிவனருளால் எண்ணிறந்த படைகள் பெற்றுப் பின்னரே வந்து போர்தொடங்கினானென்பர். தோற்றவுடன் விஸ்வாமித்திரன் தவம் புரியத் தென்திசையையடைந்தான் என்று வால்மீகி கூறுகிறார். ஆனால் கம்பரோ அவன் கிழக்குத்திசையை அடைந்ததாகக் கூறுகிறார். ஆதலின் கம்பர் முதற்கண்,

> ''தேவ பாடையின் இக்கதை செய்தவர்
> மூவரானவர் தம்முளு முந்திய
> நாவினாருரை யின்படி நான் தமிழ்ப்
> பாவினா லிதுணர்த்திய பண்பரோ''

எனத்தாம் வாமீகி கூறுகிறபடி இராம கதையைப்பாடுகிறேன் என உணர்த்தியதற்கு மாறாகவே இராமாயணம் பாடுகிறாரெனத் தெரியவருகிறது. கம்பருடைய கணக்கற்ற மாற்றங்களை அங்கங்கே குறித்து விளக்கி வந்திருப்பதை இவ்வாராய்ச்சி யுரையைத் தொடர்ந்து படித்து வரும் அன்பர்கள் நன்றாகக் கவனித்திருப்பார்கள். இனி காமதேனுவின் செயல்களை ஆராய்வோம்.

காமதேனு என்ற ஒரு பசு எண்ணிறந்த சேனைகளுக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் தந்துதவியதென்பது ஆச்சரியமாக இருக்கிறது. இப்பசுவை விஸ்வாமித்திரன் கேட்ட போது வசிஷ்டன் கொடுக்க மறுத்துவிடுகிறான். ஆனால் கம்பரோ இங்கு மாறுபடுகிறார். அவர் கூறுவது:—

> ''வற்கலையுடையன் யானோ வழங்கலென் வருவதாகிற்
> கொற்கள் வேலுழவநீயே கொண்டகல்கென்று கூற''

என்பது. அதாவது ''நான் கொடுப்பதென்ன? அதுவருவதானால் நீயே கொண்டுபோ'' என்று முனிவன் கூறினான் என்பர்.

காமதேனு அரசனிடமிருந்து தப்பி ஓடிவந்து முனிவனையடைந்து வினவ அவன் அஞ்சியவன் போலக்கூறுகிறான். உடனே பசு, முனிவனுடைய விடைபெற்று பல வீரரை உண்டாக்கிற்று என்பது வால்மீகி வரலாறு. கம்பரோ முனிவனாணைபெறாமலே பசு சண்டை தொடங்கிற்றென்கிறார். பசு முக்கலிட்டது, உடனே அதன் மடியிலிருந்து சிலரும், யோனியிலிருந்து சிலரும், குதத்திலிருந்து சிலரும், மயிர்க்கால்களிலிருந்து சிலரும் தோன்றினர் என்று வால்மீகி கூறுகிறார். இது நான்முகன் முகத்திலிருந்து பிராமணரும் நெஞ்சிலிருந்து க்ஷத்திரியரும், இடையிலிருந்து வைசியரும், காலிலிருந்து சூத்திரரும் தோன்றினரென்று கூறும் வரலாறுபோலவே மிகவும் ஆபாசமாக இருக்கிறது. ஆண்மகனாகிய நான்முகன் பிள்ளை பெற்றான் என்பதே இயல்புக்கு மாறு. அதில் முகத்திலிருந்து சிலரையும் தோற்றுவித்தானென்பது அறிவுக்கு அடாததாகும். கௌதம முனிவன் சாபத்தால் இந்திரனுக்கு உடலெங்கும் பெண் குறிகள் அமைந்தன என்று கம்பர் கூறுகிறாரென முந்திய கட்டுரையில் ஆராய்ந்தோம். இந்நான்முகனுக்கு யார் சாபத்தால் இவ்வாறு நெற்றியிலும், மார்பிலும், இடுப்பிலும், காலிலும் பெறும் பெண் குறிகள் அமைந்தனவோ தெரியவில்லை. கரு எவ்விடம் தங்கிற்றோ? வெவ்வேறு விதமான கருக்களை உண்டுபண்ணினவர்கள் தான் யாவரோ? இவ்வளவு ஆபாசமான கதையைக்கட்டிவிட்டுள்ளனர் ஆரியப் பார்ப்பனர்கள். இச்சாதி வரலாற்றை வேறோர் சமயம் விரிவாகஆராய்வோம். இவ்விழிந்த வரலாறு போலவே உளது இக்காமதேனுவின் மடி, யோனி முதலிய உறுப்புகளிலிருந்து வெவ்வேறு வகையினர் தோன்றினரென்பது. மடியிலிருந்து சிலரும், யோனியிலிருந்து சிலரும், குதத் (மலவாயில்) திலிருந்து சிலரும் தோன்றினரென மொழிபெயர்ப்பாளரான அநந்தாச்சாரியாரும் மன்மதநாததத்தரும் தெளிவாக எழுதினும், நடேச சாஸ்திரியார் யோனி, குதம் முதலிய உறுப்புகளை ஆபாசமானவையென மறைத்து மடியிலிருந்து சிலரும், அதன் உடம்பிலிருந்து சிலரும் தோன்றினரெனப் பொதுப்படக் கூறி

னர். கம்பரோ உறுப்புக்கள் இன்னின்னவைகளிலிருந்து இன்னின்னார் தோன்றினாரென்னாமல் பொதுவாகப் பசுவினிடம் இன்னின்னார் தோன்றினரென்பர். அது வருமாறு:—

"பப்பரரெவனர் சீனர் சோனகர் முதல பல்லோர்
கைப்படை யதனினோடும் கபிலை மாட்டுதித்து"

பப்பரர் முதலிய கூட்டத்தினர் கையிலே ஆயுதங்களோடும் தோன்றினரென வால்மீகியார் கூறவில்லை. இனி தவம் செய்யச் சென்ற விஸ்வாமித்திரர் வரலாற்றை ஆராய்வோம்.

விஸ்வாமித்திரன் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு தென் திசையையடைந்து பயங்கரமான தவத்தைச் செய்தான். அப்போது அவனுக்கு ஹவிஸ்யந்தர், மதுஷ்யந்தர், திருடநேத்ரர், மகாரதர் என்ற பெயரையுடைய பிள்ளைகள் உண்டானார்கள். இவ்வாறு தவம் செய்வதில் ஆயிரமாண்டுகள் கழிந்தபின் நான்முகன் தோன்றி அவனுக்கு "ராஜரிஷி" என்ற பட்டம் தந்தான். அதனால் விஸ்வாமித்திரன் கோபமடைந்து வெட்கத்தால் தலைகுனிந்து மறுபடியும் தவம் புரிந்துகொண்டிருந்தான்.

அக்காலத்தில் அயோத்தியில் திரிசங்கு என்னும் மன்னன் ஆண்டிருந்தனன். அவன் ஐம்பொறிகளையும் வென்று நல்லவனாக இருந்தான். அவன் உடலோடு சுவர்க்கம் (தேவருலகம்) போக எண்ணினான். அதற்காக அவனொரு யாகம் செய்ய விரும்பி குல குருவான வசிட்டனை வரவழைத்துச் சொன்னான். வசிட்டன் "அந்தச் சங்கதி முடியா"தென்று கூறிவிட்டான். மன்னன் பின் வசிட்டனுடைய பிள்ளைகளிடம் போனான். வசிட்ட முனிவனுடைய நூறு பிள்ளைகளும் சினமடைந்து "எங்கள் தந்தையாலேயே முடியாத இச்செயலை நாங்கள் எவ்வாறு செய்வோம்?" என்றனர். திரிசங்கு அப்படியாயின் என் கருத்து நிறைவேற நான் வேறு யாரிடமேனும் செல்கிறேன் என்றனன். அதைக்கேட்ட அவர்கள் மிகச்சினந்து "நீ சண்டாளனாகப் போக" எனச் சபித்தனர். மன்னன் சண்டாளத் தன்மையை அடைந்து கருத்துங்

கடின உருவமுடையவனாகி தலை மயிர் குறைந்து, கருத்த உடையையும், சுடுகாட்டு எலும்புமாலையையும், சாம்பலையும் இரும்பு நகையையும் அணிந்தவனாக ஆகிவிட்டான். மந்திரி முதலியோர் அனைவிட்டு ஓடிவிட்டார்கள். சண்டாள உருவடைந்த திரிசங்குவை விஸ்வாமித்திர முனி கண்டான். மனமிரங்கி தேர்தல் கூறி அவ்வாறானமைக்குக் காரணம் வின வினன். மன்னவன் "சுவாமி! ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நான் இதுவரை ஒரு பொய்யும் கூறினதில்லை; இனியும் கூறேன். பல யாகங்கள் செய்தேன். அறநெறி தவறாது அரசாள்வதோடு குருவுக்கும் மிகப்பணிவுடன் நடந்துவருகி றேன்" என்று கூறி நடந்த வரலாற்றையும் புகன்றனன். அதுகேட்ட முனிவன் "நான் அந்த யாகத்தை முடித்து உன் னை உடலோடு தேவருலகத்துக்கு அனுப்புவேன்" என்று கூறி தனது பிள்ளைகளை அழைத்து யாகத்திற்கு வேண்டி யவைகளைத் தயாரிக்கக் கட்டளையிட்டான்.

பல முனிவர்களும் வந்து கூடினர். வசிட்ட முனிவனு டைய பிள்ளைகளும் மகோதயனென்ற முனிவனும் மட்டும் "சண்டாளனுக்குக்ஷத்திரியன் செய்துவைக்கும் யாகத்தின் அவிசை எப்படி தேவர்களும் முனிவர்களும் உண்பார்கள்" என்று சொல்லி வராமலிருந்துவிட்டனர். அதனையறிந்த கோசிகன் "என்னை இகழ்ந்த அந்த நூறுபேரும் சாம்பலாகிவிடவேண்டும். இப்போதே அவர்கள் எம வாத னை அடைந்து எழுநூறு பிறப்பில் பிணத்தைத் தின்னவேண் டும். அருளற்று என்றும் நாயிறைச்சியுண்டு இழிகுலத்தோ ராய் விகாரமான பேச்சும் செய்கையும் உருவுமுடைவர்களாய்த் திரியவேண்டும். மகோதயன் என்பவன் என்னை இகழ்ந்த தால் வேடனாகிப்பலகாலம் நரகத்திலழுந்தவேண்டும்" என்று கடுங்கோபத்தோடு கூறினான்.

யாகம் வெகு காலம் நடைபெற்றது. அதன்முடிவில் தே வர்கள் அவிர்ப்பாகத்தை வாங்க வரவில்லை. அதனால் அகப் பையை உயரத் தூக்கிக்கொண்டு கடுஞ்சினத்தோடு விஸ்வா மித்திரன் தனது தவ மகிமையால் சுவர்க்கம்போக மன்னனை

ஏவினான். உடனே திரிசங்கு சுவர்க்கம் நோக்கிச்சென்றான். அதுகண்ட இந்திரன் முதலிய தேவர்கள் அவனைச் சண்டாளனானதால் கீழே போகும்படி சொன்னார்கள். அதனால் திரிசங்கு கீழே நோக்கித் தலைகீழாக விழுந்தான். அதுகண்ட முனிவன் அவனை உயரவே நிற்கும்படி ஏவி அங்கேயே ஓர் சுவர்க்கத்தை சிருஷ்டித்தான். அது கண்டு பயந்து தேவர்கள் முனிவனையழைத்து அந்த திரிசங்கு சுவர்க்கத்தையும் ஒப்புக்கொண்டார்கள். பின் யாகமும் முடிந்தது. இவ்வாறு தன்னுடைய தவத்திற்கு இடையூறு வந்ததாலே கோசிக முனிவன் அவ்விடத்தைவிட்டு மேற்குத்திசையை அடைந்தான். இவ்வரலாறு 57, 58, 59, 60-ம் சருக்கங்கள். இதனை ஆராய்வோம்.

பத்தாம் அத்தியாயம்,

விஸ்வாமித்திரன் தென் திசையில் தன் மனைவியோடு போய் தவமியற்றினான். அவனுக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தனர். அதனோடு ராஜரிஷி பட்டமும் கிடைத்தது. ஒருவன் மனைவியோடு காட்டில் தனியே இருந்து பிள்ளை குட்டிகளைப் பெற்றுக்கொண்டு செய்யும் தவம்தானென்னே! அதுகண்டு வியந்து நான்முகன்தோன்றி பட்டங்கொடுத்ததும் மிக அழகிதே. இவ்வாறு வசிட்ட முனிவனும் தன் மனைவியோடு கூடித் தவம் செய்பவன் நூறு பிள்ளைகளைப் பெற்றிருக்கிறானென்றறிகின்றோம். கௌதம முனிவனும் அகலிகையிடம் சதானந்தனைப் பெற்றான். அவனே இவ்வரலாற்றை இராமனிடம் கூறுகிறான். கீழ்த்திசையையே விஸ்வாமித்ரன் முதன் முதல் அடைந்தானென்றும் அங்கே திலோத்தமையை இந்திரன் ஏவ அவள் மயலில் முனிவன் அகப்பட்டானென்றும் அதனால் அவன் தவம் குலைந்ததென்றும் கம்பர் கூறுகிறார். திலோத்தமை என்ற தாசிப்பெண்ணைக் கூடுவதால் கெட்ட தவம் தன் மனைவியைக் கூடி பல பிள்ளைகளைப்

பெறுவதால் கெடாதுபோலும். தவத்தைப்பற்றிய இவர்கள் அறிவு மிக நன்றே! கோசிகனுக்கு ராஜரிஷிப் பட்டம் கிடைத்ததைக் கம்பர் திரிசங்கு சுவர்க்கத்தின் பின் கூறுகிறார்.

திரிசங்கு குருவாகிய வசிட்ட முனிவனைத் தன்னிடம் வரவழைத்ததாக வால்மீகி கூறுகிறார். கம்பரோ அவனே முனிவன் இருந்த இடத்திற்குச் சென்றதாகக் கூறுகிறார். வால்மீகி, கம்பர் இவர்களின் குருசீடமுறை கவனிக்கற்பாலது. குரு இருக்குமிடத்திற்கு மாணவன் செல்லவேண்டியதேமுறை. ஆதலின் கம்பர் மாற்றிக் கூறினர்போலும். வசிட்டன் தன்னால் முடியாதென்று கூறினான் என்று வால்மீகி கூற, அதை கம்பர் "சுவர்க்கத்துக்கு மாண்டுபோதி" என்று கூறினதாகக் கூறுகிறார்.

திரிசங்கு வசிட்ட முனிவனுடைய பிள்ளைகளிடத்துப் போனதையும் அவர்கள் சபித்ததையும் கம்பர்கூறவேயில்லை. வசிட்டனே சபித்தனனென்ன அவர் கூறுகிறார். இது வால்மீகி கூறும் கதைக்கு மாறுபட்டது. இனி கம்பர் கூறுகிறபடி வசிட்டனோ அல்லது வால்மீகி கூறுமாறு அவன் மக்களோ திரிசங்கைச் சபித்தது சரியா என்பதை ஆராய்ந்தால் அது ஆச்சரியமாகவே இருக்கிறது. இவனை விடுத்து வேறொருவனைக் குருவாக அடைய ஒருவன் விரும்பினானானால் அதற்காக அவனைச் "சண்டாளனாதி" என்று குரு சபித்தனனேல் அக்குருவின் அறிவும் பெருந்தன்மையும் இருந்தவாறென்னே! இவர்கள் பெரிய முனிவர்களாம்! இவர்களுக்குக் கடவுள் தோன்றி அருளினாராம்.!!

திரிசங்கு சண்டாளனானவுடன் அவன் மந்திரிகள் அவனை விட்டுவிட்டு ஓடிவிட்டனராம். அதன்மேல் அவன் விஸ்வாமித்திரனை அடைகிறானாம். கம்பர் இவ்வரலாற்றை இன்னும் இழிவாகக் கூறுகிறார். அதாவது மன்னன் சண்டாளனாகி ஊரையடைந்ததாகவும் அவனைக் கண்டவரெல்லாம் சீ!சீ!! என்றிகழ்ந்தனரென்பதும் அதனால் அவன் திரும்பவும் காட்டையடைந்து கோசிகனைச் சந்திக்கிறானென்பது

மாம். வால்மீகமுனிவர் வரலாறு, கோசிகன் மன்னனை இன்னானெனவறிந்துகொண்டு நடந்தவரலாற்றைக்கேட்கிறானென்பது. இதற்கு மாறாகக் கம்பர் கூறுவது, "சண்டாளா நீயார்? உன் வரலாறென்ன?" என்று கேட்டனனென்பது.

கோசிகன் செய்த யாகத்திற்கு வசிட்டன் மக்கள் வாராதது பற்றிச் சினந்த அம்முனிவன் அவர்களை, சாம்பலாகி எமனுலகடைந்து எழுநூறு பிறப்பெடுத்து பிணத்தையும், நாயையும் தின்னவேண்டுமென்று சபிக்கிறான். இம்முனிவர்களுடைய பெருங்குணந்தானென்னே! கம்பரோ இதற்கு மாறாக அக்குமாரர் வேடர்களாகச் சபித்தனரெனவும் கூறுகிறார். மகோதய முனிவனடைந்த சாபத்தைக் கம்பர் கூறுகின்றிலர்.

கோசிகன் திரிசங்குக்காகப் படைத்த சுவர்க்கத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள் அந்தச் சுவர்க்கத்தை ஏற்றுக்கொண்டு முனிவனைச் சாந்தப்படுத்தினரென வால்மீகி கூறுகிறார். கம்பரோ இந்திரனும், நான்முகனும், சிவபெருமானும் ஏனையோரும் முனிவனையடைந்து சாந்தப்படுத்தியதோடு ராஜரிஷி என்ற பட்டத்தையும் தந்தனர் என்று கூறுகிறார். இதனால் அவர் (கம்பர்) ஆரிய வைணவரைத்திருப்தி செய்ய நினைந்தனர்போலும். இனி மேற் செல்லுதும்.

மேலும் இராமனிடம் சதானந்தன் கூறுகிறான்:— விஸ்வாமித்திரன் மேற்குத்திசையில் தவம் செய்துகொண்டு இருக்கும்போது அயோத்தியில் அம்பரீஷன் என்றொரு மன்னனிருந்தான். அவன் ஓர்கால் ஓர் யாகம் செய்ய, அந்த யாகப் பசுவை இந்திரன் திருடிக்கொண்டு போய்விட்டான். அதனால் ருத்விக்குகள் அந்தப் பசுவைக் கொண்டுவரவில்லையானால் அனேக கொடிய பாவம் வருமென்றும் இல்லையானால் ஒரு நரப் பசுவைக் கொண்டுவரவேண்டுமென்றும் கூறிவிட்டனர். அதனால் அம்பரீஷன் பலவிடங்களிலும் திரிந்து கடைசியாக குசீகன் என்ற முனிவனையடைந்து அவன் பிள்ளைகளில் ஒருவனை வேண்டினன். அம்முனிவனுக்கு மூன்று பிள்ளைகள். அம்முனிவன் மூத்தமகனை விலைக்குத்தரமாட்

டேனென்றனன். அவன் மனைவி இளைய பிள்ளையைத்தாரேன் என்ன, நடுமகன் தானேவருவதாக ஒப்புக்கொண்டான். உடனே அரசன் முதியவனுக்கு அநேக ஆயிரம் பசுக்களைக் கொடுத்து அப்பிள்ளையை விலைக்கு வாங்கிக்கொண்டு வந்தான். அந்தப் பையன் பெயர் சுநச்சேபன். வழியில் சுநச்சேபன் விஸ்வாமித்திரனைப்பார்த்து தன்னைக்காக்கவேண்டினன். விஸ்வாமித்திரன் இவனுக்கு மாமன். முனிவன் தன்னுடைய பிள்ளைகளை அழைத்து அவர்களில் யாராவது ஒருவன் சுநச்சேபனுக்குப் பதிலாகப் போகவேண்டினன். உடனே அவர்கள் தகப்பனைப் பார்த்து அகங்காரங் கொண்டு "நீர் தன் பிள்ளையைக் கொன்று அயலான் பிள்ளையைக் காக்க விரும்பினீர். இது நாயின் மாமிசத்தைத் தின்பது போல தகாத செயலாம்" என்றனர். உடனே முனிவன் சினந்து "நீங்கள் வசிட்டனுடைய பிள்ளைகளைப்போலாகி ஆயிரமாண்டு நாய் இறைச்சியைத் தின்று திரிக" என்று சபித்தான். பின் சுநச்சேபனுக்கு இரண்டு மந்திரங்களைக் கூறியனுப்பினான். மன்னவன் அப்பிள்ளைக்கு சிவப்பு ஆடையுடுத்தி யூபஸ்தம்பத்தில் கட்டி யாகத்தை நடத்தினான். முடிவில் அந்த மந்திரங்களை அப்பையன் சொல்ல இந்திரன் தோன்றி அப்பையனைக் காப்பாற்றி யாகத்தை ஒப்புக்கொண்டான்.

பின் விஸ்வாமித்திரன் அங்கேயே ஆயிரமாண்டு தவம் செய்ய நான்முகன் தோன்றி "ரிஷி" என்ற பட்டந் தந்தான். நெடு நாட் கழித்து அந்த மேற்குத் திசைக்கு மேனகையென்ற பெண் வந்தாள். அவள் ஓர் குளத்தில் நீராடும்போது முனிவன் அவளைக் கண்டு மயங்கி வேண்ட அவளும் அவனோடு கூடத் தங்கினாள். கௌசிகன் அவளோடு பத்தாண்டு கூடியிருந்தான். பின் அவனுக்குத் தான் காம விகாரத்தில் ஈடுபட்டிருப்பது பிழையென்பது தோன்றிற்று. அதனால் அவன் மனம் வருந்தி அது தேவர்களுடைய கேடு என்று நினைந்து அச்சத்தால் நடுங்கிக்கொண்டிருந்த அந்த மேனகையைச் சபியாமல் இனிய சொற்கூறி அனுப்பிவிட்டான். பின் அம்முனிவன் அவ்விடத்தை விட்டு நீங்கி இமய மலையையடைந்து

அங்கே கௌசிகி நதிக்கரையில் தவம் செய்தான். ஆயிர மாண்டுகள் கழிந்தபின் நான்முகன் தோன்றி ''மகரிஷி'' என்ற பட்டம் தந்தான். அதிலும் திருப்தியடையாமல் விஸ்வாமித்திரன் திரும்பவும் கடுந்தவம் செய்தான். அதனால் தேவர்களுக்கும் இந்திரனுக்கும் பெரிய பயமுண்டாய்விட்டது இந்திரன் தேவர்களோடு அரம்பையைப் பார்த்து விஸ்வாமித்திரனிடம் போய் அவனை மயக்கும்படி கூறினான். அதற்கு அரம்பை அஞ்சி ''முனிவன் கொடிய சாபந்தருவான், ஆதலால் என்னை அனுப்பவேண்டாம்'' என்று வேண்டினள். அவ்வாறு கூறி நடுங்கி நிற்கும் அரம்பையைத் தேற்றி தானும் மன்மதனும் குயிலாக வந்து அவளுக்குத் துணைபுரிவதாகக் கூறினன் இந்திரன். அவ்வாறே அரம்பை போய் முனிவனை மயக்க முயன்றாள். இந்திரன் குயிலாகக் கூவினான். அதுகண்ட விஸ்வாமித்திரன் சந்தேகித்து உண்மையையுணர்ந்து அரம்பையை நோக்கி ''நீ பதினாயிரமாண்டு கல்லாகக் கடவாய்; உன்னை ஓர் அந்தணன் விடுவிப்பான்'' என்று சபித்தான். உடனே அவள் கல்லாய்விட்டாள். அதைக் கண்ட இந்திரனும் அவன் கூடவந்த மன்மதனும் பயந்து ஓடிவிட்டனர்.

பின்னர் கோசிக முனிவன் வடதிசைவிட்டு கீழ்த்திசை சென்று தவமியற்றினான். இந்திரன் பல கேடுகள் புரிந்தும் முனிவன் சினங்கொள்ளாமல் தவம் புரிந்தான். ஓர் நாள் இந்திரன் ஓர் பிராமணனைப்போல உருக்கொண்டு முனிவன் உண்ணும்போது அவ்வுணவை இரந்தான். முனிவன் தடையின்றி அதைக்கொடுத்துவிட்டுப் பட்டினியிருந்தான். இவ்வாறு கடுந்தவம் செய்த விஸ்வாமித்திரனிடம் தேவர்களுடைய வேண்டுகோளால் நான்முகன் தோன்றி பிரம்ம ரிஷிப் பட்டம் தந்து வசிட்டனையும் அதை ஒப்புக்கொள்ளச் செய்தான்.

இவ்வாறு சதானந்தன் விசுவாமித்திரன் வரலாற்றையெல்லாம் சொல்லிமுடித்தான். அப்போது மாலைக்காலமாய் விட்டபடியால் சனக மன்னன் முனிவனிடம் விடைபெற்றுச்

சென்றான். விஸ்வாமித்திரனும் இராம இலக்குவருடன் தாம் தங்குமிடம் சென்றான். இதுவரை வரலாற்றை ஆராய் வோம்.

பதினொன்றாம் அத்தியாயம்.

கௌசிகன் மேற்குத்திசையையடைந்ததும் அம்பரீஷன் என்ற மன்னன் ஓர்யாகம் செய்ய சகரனுடைய யாகப் பசுவை திருடிய பழைய திருடனாகிய கீழ் மகன் இந்திரன், இந்த யா கப்பசுவைத் திருடிப்போய்விட்டான். அதனைத் தேடிக் கா ணாத மன்னன் ஓர் நரப்பசுவைத் தேடினான். இதனால் நர மேதமென்பது அக்காலத்தில் சர்வ சாதாரணமென்பது தெரிய வருகிறது. நரமேதமானது மனிதனைக் கொன்று செய்யி லிட்டுப் பொறித்து தின்னும் யாகம். கம்பரோ அம்பரீஷன்யா கப்பசுவை இந்திரன் திருடியதைக் கூறாமல் முதலிலேயே அவன் நரமேதம் செய்யத் தொடங்கினான் என்று கூறுகிறார் இது தவறுதான். கம்பர் பாட்டு வருமாறு:—

"குதைவரிசிலை வாட்டானைக் கோமகன் அம்பரீடன்
சுதைதருமொழியன் வையத் துயிர்க்குயிராய தோன்றல்
வதைபுரி புருடமேதம் வகுப்பவோர் மைந்தற்
[கொள்வான்,
சிதைவிலன் கனகந்தேர்கொண் டடவிக டுருவிச்
[சென்றான்"

இப்பாடலில் அம்பரீட மன்னன் உலகில் உயிருக்குயிர் போல மிக நல்லவனென்றும் கொலை வேள்வியாய புருடமே தம் செய்யத் துணிந்து ஒரு மைந்தனை விலைக்கு வாங்கப் பொன்னோடு போனான் என்று கூறப்பட்டுள்ளது. உயிருக்குயிரான மன்னன் கொலை வேள்வியிலும் மிகக் கொடியதாய புருடமேதத்தை எவ்வாறு செய்யத் துணிந்தனனோ தெரியவில்லை. கம்பர் மன்னனை

முதலில் நல்லவனென்று கூறிவிட்டுப் பின் அதற்கு மாறாகக் கொலையிற் கொடியான் என்றார். இது எவ்வாறு பொருந்துவதோ? மனிதனைக் கொன்று அவ்வுடலைத் தின்பதாய இக்கொடிய வேள்வியைச் செய்தோர் இழிதகைமைதானென்னே! இவ்விழிதகைய கதைகளை மிக நல்லனவென்று பாராட்டிப்படிப்போரை அறிவிலர் என்று கூறவோ, அன்றி இழிகுணரென்று புகலவோ அறிகிலம். அறியாமையென்றே கூறி அமைவோம்.

மன்னன் நரவேள்விக்காக ஓர் மனிதனை விலைக்கு வாங்கினான். ஆடுமாடுகள் விலைக்கு வாங்குவதுபோல மனிதர்களையும் விலைக்கு வாங்குவது அக்காலத்து ஆரியர் பழக்கம் போலும்! அரசாங்கத்தார் தடை செய்யாதிருப்பரேல் இக்காலத்திலும் மனிதர்களை விலைக்கு வாங்கவும், நரவேள்வி நடத்தவும் செய்வார்போலும்!

மன்னன் விலைக்கு வாங்கிவந்த பையன் விஸ்வாமித்திரனைத் தஞ்சமடைந்தான். முனிவன் தன் மக்கள் நால்வரில் ஒருவனை அவனுக்குப் பதிலாக அனுப்ப முயல்கிறான். அவர்களோ தம் தந்தை செயலை இகழ்ந்து, அது நாயிறைச்சியைத் தின்னலினும் கேடுகெட்டதென்கின்றனர். உடனே முனிவர் தன் மக்களை நாயிறைச்சியைத்தின்று பலகால மலையச் சபிக்கிறான். முனிவனுடைய மக்கள் கூறிய கூற்றுகளைக் கம்பர் கூறாது மறைத்து "அவர்கள் மறுத்துப்போயினர்; தந்தை சபித்தான்" என்று மட்டும் கூறுகின்றனர். கோசிகன் முன்னரும் வசிட்டன் மக்களை நோக்கி "நாயிறைச்சியைத் தின்று திரிக" எனச் சபித்தமை கண்டோம். இது இம்முனிவனுக்கு நாயிறைச்சி தின்ற வாசனையாலெழும் சொற்கள்போலும்! அதுவும் நாய் வாலைத் திருடி இவ்விஸ்வாமித்திரன் உண்டவனாவான்.

"நாய்வாற் களவினால் ஞாலமிகழப்பட்டான்
தூயனாம் காதிமகன்"

என்கிறது சோமேசர் முதுமொழி வெண்பா.

அம்பரீஷனது யாகத்தின் பின்னரும் கௌசிகன் மேற்குத் திசையில் தவம் செய்துகொண்டிருந்தான். அப்போது மேனகையுடைய மையலிற் பட்டான். பின் உண்மையறிவுற அவளைச் சபியாது இனிய சொற் கூறியனுப்பினான். இதற்கு மாறாகக் கம்பர் கூறுகிறார். இச்செய்தி கிழக்குத் திசையில் நடந்ததாகக் கூறுவதோடு அவளை முனிவர் மண்ணில் மனிதப் பிறப்பெடுக்கச் சபித்தனரென்றும் கூறுகிறார். அதோடு வால்மீகி மேனகை என்று கூற, கம்பர் திலோத்தமையென்று அப்பெண்ணை மாற்றிக் குறித்தார். மிகவும் பொறுமையுடையராகிய, வால்மீகி கூறும் விஸ்வாமித்திரனைக் கம்பர் கொடிய கோபக்காரனாகக் காட்டியது வியப்பே.

முனிவன் வடதிசையை யடைந்தபோது திருட்டுக் காமியான இந்திரன் அரம்பையை ஏவி முனிவனை மயக்கத் தூண்டுகிறான். பின் அரம்பை தண்டனையடையக்கண்டு பயந்து ஓடுகிறான். இத்தீயோனை நம்பி அரம்பை சென்றது மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கியதுபோலாயிற்று. இக்கதையை கம்பர் முற்றிலும் கூறாது விட்டுவிட்டார்.

தன்னுடைய தவத்தைக் கெடுத்த மேனகையைச் சபித்துவிடுத்த முனிவன் தன்முன் வந்து நின்ற அரம்பையைக் கல்லாய்க்கிடக்கச் சபிக்கிறான். இக்கதையைத்தான் கண்டு மயங்கிக் கம்பர், அகலிகையை முனிவன் கல்லாகக் கிடக்கச் சபிக்கின்றனரென்று கூறினர் போலும். வடதிசையில் மேல் கண்ட நிகழ்ச்சிகள் நடந்திருக்க இவைகளையெல்லாங்கூறாது இத்திசையில் முனிவன் பிரமரிஷிப் பட்டம் பெற்றான் என்கிறார் கம்பர். வால்மீகியோ அவன் கீழ்த்திசை சென்று கடுந் தவம் புரிந்து அப்பட்டம் பெற்றானென்கிறார்.

கீழ்த் திசையில் இந்திரன் உணவிரந்தது முதலிய செயல்களைச் செய்தமையைக் கம்பர் விடுத்தார். நான்முகன் பிரமரிஷிப்பட்டம் தந்தபின் கோசிகன் அவனை நோக்கி வசிட்டன் அதனை ஒப்புரைத்தல் வேண்டுமென்று கூற, அவ்வாறே அவ் வசிட்டன் கோசிகன் முன் வந்து ஒப்புகின்றனன். இவ்வரலாற்

றையும் கம்பர் கூறாது விடுத்தனர். இவ்வாறு இவ்வரலாற்றிலும் கம்பர் பல மாறுபாடுகள் செய்தமை புலனாகின்றது. இனி மேற் செல்லுதும்.

மறுநாள் காலையில் விஸ்வாமித்திரன் சனக மன்னனை நோக்கி இராமனும் இலக்குவனும் சனகனிடமிருந்த வில்லைப் பார்க்க விரும்புவதாகக் கூறினன். உடனே சனகன் "முன்னொருகாலத்தில் தக்கன் என்பவன் ஓர் யாகம் செய்தான். அந்த யாகத்துக்கு எல்லாத்தேவர்களும் வந்திருந்தார்கள். சர்வேஸ்வரனாகிய சிவபெருமான் அந்த யாகத்துக்கு அழைக்கப்பெறவில்லை. அதனால் அவர் கடுங் கோபங்கொண்டு வில்லை வளைத்து நாணேற்றி ஏனைய தேவர்களுடைய தலைகளை அறுத்துத் தள்ளிவிடுவதாகக் கூறினார். அப்போது எல்லாத் தேவர்களும் அஞ்சி அம்மகா தேவரைச் சரணமடைந்து துதித்தனர். அதனால் சிவபெருமான் சினந்தணிந்து அவர்களிடத்தில் அன்பு கொண்டு அவ்வில்லைக் கொடுத்துவிட்டார். அவர்கள் அதை என்னுடைய முன்னோருள் ஒருவனாகிய தேவராதனிடம் வைத்து வைக்கும்படி கொடுத்தனர். அவ்வில்லே இது. பிறகு நான் ஒருகால் யாகம் செய்யும்போது கண்டெடுத்த சீதை என்ற பெண்ணை, இவ்வில்லை வளைத்து நாணேற்றுபவனுக்குக் கலியாணம் செய்துகொடுப்பதாகக் கூறினேன்.

பல மன்னர் இதை வளைக்க முயன்று அவமானமடைந்து என்னோடு போரிட்டனர். நான் தோல்வியுற்றுப் பின் தேவர்களுடைய உதவியாலே பெற்ற சேனைகளால் அவர்களை வென்றேன் அதுமுதல் இவ்வில் வளைக்கப்பெறாமலிருக்கிறது. இவர்கள் இதை வளைத்தால் இவர்களுக்குச் சீதையைக் கொடுப்பேன்" என்று கூறினன். அவ்வில் வைத்திருந்த இரும்புப் பெட்டிக்கு எட்டுச் சக்கரங்கள் உண்டு. அதை ஐயாயிரம் பேர்கள் இழுத்துவந்தனர். தேவர்களாலும், அசுரர்களாலும், ராக்ஷஸர்களாலும் ஏனையோராலும் எடுக்கமுடியாத அவ்வில்லை இராமன் ஓர் கரத்தால் தூக்கி நிறுத்தி வளைத்தான். வில்லும் ஒடிந்தது. அவ்வொலி கேட்டு பூமி

நடுங்கிற்று. எல்லோரும் மூர்ச்சையடைந்தனர். சனகன் மிக மகிழ்ந்து தனது மகளை அவனுக்குத் திருமணம் முடிக்கத் தீர்மானித்து முனிவனுடைய சம்மதி பெற்று தசரதனை அழைத்து வர அயோத்திக்கு மந்திரிகளை அனுப்பினான்.

அந்த தூதர்கள் நான்காம் நாள் அயோத்தியையடைந்து தசரதனைக் கண்டு பல அரசர்களாலும் வளைக்கமுடியாத வில்லை இராமன் வளைத்துச் சீதையை மணக்க உரியவனான செய்தியைக் கூறி மிதிலைக்கு அழைத்தனர். மறுநாள் தசரதன் அயோத்தியை விட்டுப் புறப்பட்டு ஐந்தாம் நாள் மிதிலையையடைந்தான். சனகன் அவனுக்கு முகமன் கூறி உபசரித்தான். தசரதன் தன் மக்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான்.

பின் சனகன் தனது தம்பியாகிய குசத்துவசனையழைத்து வரத் தூதரையனுப்பினான். அவர்கள் இந்திரனது கட்டளைப்படி திருமாலை அழைத்துவரச் செல்லும் தேவர்களைப்போலச் சென்று அவனை அழைத்துவந்தனர். சனகனும் குசத்துவசனும் தசரதனை அழைத்துவரச்சொல்ல அம்மன்னனும் தனது புரோகிதனுடன் வந்து சேர்ந்தனன். தசரதனுடைய வேண்டுதலினாலே வசிட்ட முனிவன் தசரதனுடைய குலக்கிரமத்தைக் கூறினான்.

தசரதன் குலமுறை பின்வருமாறு:— பிரமன், மரீசி, காசியபன், சூரியன், மநு, இக்ஷ்வாகு, குட்சி, விகுட்சி, பாணன் அநரண்யன், பிருது, திரிசங்கு, துந்துமாரன், மாந்தாதா, சுசந்தி, துருவசந்தி, பரதன் அசிதன், அசமஞ்சன், அஞ்சுமான், திலீபன், பகீரதன், ககுத்தன், ரகு, பிரவிருத்தன் (இவன் வசிட்டனால் சபிக்கப்பெற்று ராக்ஷஸனானவன்), சங்கணன், சுதர்சனன், அக்கினிவர்ணன், சீக்கிரகன், மரு, பிரசுச்ருகன், அம்பரீடன், நகுடன், யயாதி, நாபாகன், அசன், தசரதன்.

இக்கொடி வழியைக் கேட்ட சனகன் தனது கொடி வழியையும் கூறினான். அது வருமாறு:— நிமி, மிதி, உதாவசு

நந்திவர்த்தனன், சுகேது, தேவராதன், பிருகத்ரதன், மகாவீரன், சுத்ருதி, திருட்டகேது, ஹர்யச்வன், மரு, பிரதிந்தகன், கிர்த்திரதன், தேவமீடன், விபுதன், மகிதரகன், மகாரோமன், சுவர்னரோமன், ஹிரஸ்வரோமன், சனகன். இவ்வாறு கலியாணத்தின் முன் கொடிவழி கூறுவது மரபு.

இக்கொடிவழியைக்கூறி சனகன் "என் மகள் சீதையைக் கேட்டு நிர்ப்பந்தித்த சாங்காச்ய நகர மன்னனைக் கொன்று எனது தம்பி குசத்துவசனை அவ்வூருக்கு அரசனாக்கினேன். எனது முதல் மகளாகிய சீதையை இராமனுக்கும், இளையவள் ஊர்மிளையை இலக்குவனுக்கும் தருகிறேன். இதுவே நிச்சிதார்த்தம்" என்று புகன்றனன். அதுகேட்ட விஸ்வாமித்திரன் "மிக நன்று. உனது தம்பி பெண்களை பரதனுக்கும் சத்துருக்கனுக்கும் கொடுக்கவேண்டும்" என்று சொன்னான். சனகனும் அதற்கு இணங்கினான். பின் தசரதன் தான் இறங்கியிருக்கிற இடத்திற்குப்போய் கோதானம் முதலியன செய்திருந்தான். மேலே கண்ட வரலாற்றை ஆராய்வோம்.

முதலில் சனகன் வில் வரலாறு கூறுகிறான். அதாவது தக்கன் வேள்வியைத் தகர்த்தற்காக இவ்வில்லைச் சிவபெருமான் வளைத்ததாகவும் தேவர் பணியச் சீற்றம் தணிந்து அவ்வில்லை வானவரிடம் தந்ததாகவும் வானவர் அதை சனகன் முன்னோனான தேவராதனிடம் தந்ததாகவுமாம். வால்மீகி தக்கன் வேள்வி தகர்த்தற்குக் காரணம் சிவபெருமானுக்கு அவிர்ப்பாகம் தராததேதன்பர். கம்பரோ,

"இமையவில் வாங்கிய வீசன் பங்குறை
உமையினை யிகழ்ந்தன னென்ன ஓங்கிய
கமையறு சினத்தனிக் கார்முகங் கொளாச்
சமையுறு தக்கனார் வேள்வி சாரவே"

என்று உமையைத் தக்கன் இகழ்ந்ததே காரணம் என்பர். தேவர்கள் யாதொரு இடையூறுமடையாமல் பணிந்தவுடன் சிவ

பெருமான் சீற்றம் தனிந்தனர் என்பர் வால்மீகி. கம்பரோ, ''தேவர்களுடைய பல்லும் கரங்களும் உடைந்தன; அதனால் அவர்கள் புகாத இடங்களிலெல்லாம் ஓடி ஒளிந்தனர்; தக்கன் வேள்வி சிதைந்தவுடன் சிவபெருமான் முனிவு மாறிற்று'' என்று கூறுவர். வால்மீகி அவ்வில்லை ஈசன் தேவர்களிடம் தர அவர்கள் தேவராதனிடம் தந்தனரென்பர். கம்பரோ ஈசனே நேரில் தேவராதனிடம் தந்ததாகக் கூறுகிறார்.

இவ்வில் வரலாறு வால்மீகி பாலகாண்டம் அறுபத்தாறாவது சருக்கத்தில் கூறப்பெறுவது. இவ்வரலாற்றுக்கு முற்றிலும் மாறுபட்ட வரலாறு எழுபத்தைந்தாவது சருக்கத்தில் கூறப்படுகிறது. அதாவது இராமன் முன் தோன்றிய பரசுராமன் அவனை நோக்கி ''விஸ்வகர்மா இரண்டு விற்களைச் செய்தான். அவைகளில் ஒன்றைச் சிவபெருமானும் மற்றொன்றைத் திருமாலும் கொண்டனர். தேவர்கள் சிவ விஷ்ணுக்களின் பலாபலத்தை அறிய எண்ணி நான்முகனைக் கொண்டு அவ்விருவருக்கும் போர் மூட்டிவிட்டனர். அதன்படியே இருவரும் சண்டை செய்ய சிவபெருமான் வில் முறிந்து திருமால் ஓர் சத்தமிட அதைக்கேட்டுச் சிவன் அடங்கி நின்றுவிட்டார். அப்போது தேவர்கள் வேண்டுதலாலே சண்டை நின்றது. தமது முறிந்த வில்லைச் சிவபெருமான் தேவராதனிடம் தந்தனர். திருமால் தமது வில்லை எனது பாட்டனாராகிய ருசிகனிடம் தந்தனர். அம்முனி தனது மகனான எனது தந்தை சமதக்கினியிடம் தந்தனன்'' என்று கூறினதாக வருகிறது. இவ்விரண்டு வரலாறுகளும் தம்முள் மாறுபடுகின்றன. இப்பின்னைய வரலாற்றையும் கம்பர் பரசுராம படலத்தில் கூறுகின்றார். அதிலும் சில மாறுபாடுகள் காணப்பெறுவன. நான்முகனிடம் தேவர்கள் அவ்விரு விற்களில் வலியதெதுவென வினவ, அவ்விற்களைக் காரணமாக ஏற்றி ஈசனுக்கும் திருமாலுக்கும் சண்டை மூட்டிவிட்டானெனக் கம்பர் கூறுகிறார். தமது வில் முறிந்தபின் திருமாலுடைய சத்தத்தைக் கேட்டு சிவன் அடங்கி நின்றார் என்ற வால்மீகி கூற்றுக்கு மாறாகக் கம்பர், திரும்பவும் சிவனார் சண்டை தொடங்கினரெனக் கூறுகிறார். மேலும் கம்பரோ

சிவனார் தமது வில்லைத் தேவேந்திரன் கையிற் கொடுத்தன ரெனக் கூறுகின்றார். இவ்வாறு பல வகையிலும் கம்பர் மாறுகின்றார். நிற்க.

தக்கன் வேள்வியைத் தகர்த்தவுடன் சிவனார் தமது வில்லை தேவர்களிடம் கொடுத்தனரென்பது உண்மையா? மேலும் தேவராதனிடம் தேவர்கள் வில்லைக்கொடுத்தனரென்பது உண்மையா? பின்னருள்ள கதை வைணப்பற்று மிகவுடையோரால் கட்டப்பட்டது போலக் காணப்படுகிறது. சீதையின் பிறப்பைப்பற்றிப் பின்னர் ஆராய்வோம்.

சீதை பிறந்து பெண்ணாகி அவளுடைய அழகில் பல மன்னர் ஈடுபட்டு அவளை மணக்க வந்து அவமானப்பட்டு சனகனுடன் சண்டையிட்டு முதலில் வென்று பின் பல காலம் ஒருவரும் வராமல் சனகன் தன் மகளுக்கு மணாளன் வாய்ப்பானோ என ஏங்கியிருக்கிறகாலம் இராமன் பதினாறு வயது வாலிபனாகி வில்லை வளைத்த காலம். ஆதலின் எவ்வாற்றானும், இராமன் சீதைக்கு இளையவனாகவே காணப்படுகிறான்.ஆகையினாலே இராமன் தனக்குச் சில ஆண்டுகளேனும் ஏன், பலஆண்டுகள் வயதில் மூத்தவளாகிய சீதையையே மணந்துகொள்ளுகிறான். சீதையைமணக்க இராமனுக்கு முன்னர் பல தேவர், அசுரர் முதலியோரும் முயன்றிருப்பதாகத் தெரியவருகிறது.

கம்பர் கூறும் எழுச்சிப்படலம், வரைக்காட்சிப் படலம், பூக்கொய் படலம், நீர் விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம், எதிர்கோட் படலம் முதலியன அவருடைய கற்பனைகளே. வால்மீகியார் சுருக்கமாக 5-ம் நாள் தசரதன் மிதிலையை அடைந்தானென்பதையே கம்பர் பல நூறு கவிகளால் கற்பித்துப் பாடுகின்றார்.

தசரதனை சனகனும் இராமன் முதலியோரும் எதிர்கொண்டனரெனக் கம்பர் கூறுவது வால்மீகி கூற்றுக்கு மாறுபட்டது. உலாவியற் படலமும் கம்பர் கற்பனையே. தசரதனே

தன் மக்களிருக்குமிடம் சென்று அவர்களைக் கண்டு மகிழ்கின்றான் என்பர் வால்மீகி.

தசரதன் வேண்டுதலினானே குலமுறையை வசிட்ட முனிவன் கிளத்துகின்றனனென அதன் விபரமெல்லாம் வசிட்டன் வாயாலேயே வால்மீகி கூறுகிறார். திருமணத்தின்முன் இவ்வாறு குலமுறை கிளத்துவது மரபு என்றும் அவர் வரைந்துளர். இதற்கு மாறாக, வில்லை இராமன் முறிப்பதன் முன்னரே குலமுறை கிளத்து படலமென்றொரு படலத்திலே இராமனுடைய குல வரலாற்றை விஸ்வாமித்திரன் கூறியதாகக் கம்பர் கூறுகிறார். அவ்வரலாற்றில் சில மன்னரே கூறப்பெறுவர். ஆனால் அவர்கள் செய்த செயல்களை (வால்மீகி ஒன்றும் கூறாதிருக்க) கம்பர் கூறுகிறார். சனகன் கூறிய குலமுறையைக் கம்பர் கூறவேயில்லை.

குலமுறை கிளத்து படலத்தில் கம்பர் இராமன் பிறந்த வரலாற்றை விரித்துக்கூறுகிறார். அது இவ்விடத்துக்கு வேண்டாததே. அவ்வாறு கூறுமிடத்துக் கம்பர் பின்வரும் பாடலொன்று கூறுகிறார்.

"சிலைக்கோட்டு நுதற் குதலைச் செங்கனிவாய்க் [கருநெடுங்கண்
விலைக்கோட்டும் பேரல்குன் மின்னுடங்கு மிடையாரை
முலைக்கோட்டு விலங்கென்றங் குடனணுகி முன்னின்ற
கலைக்கோட்டுப் பெயர்முனியாற் றுயர்நீங்கக் கருதினான்"

இப்பாடலில் தாசிப்பெண்களைக் கலைக் கோட்டு முனிவன் தனங்களாகிய இரண்டு கொம்புகளுடைய மிருகங்களென்று நினைத்தானெனக் கூறுகிறார். இதனால் கலைக் கோட்டு முனிவனுடைய கல்வியும் அறிவும் எவ்வளவு சிறந்தனவென அறியலாம். இனி மேற் செல்லுதும்.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்த சமயத்தில் கேகய மன்னன் மகனும் பரதனுக்குத் தாய்மாமனுமான யுதாசித்தென்பான் வந்து சேர்ந்தனன். அவன் பரதனை அழைத்துப்போக அயோத்தி வந்து திருமணச் செய்தியறிந்து மிதிலைக்கு வந்ததாகக் கூறினான்.

எல்லோரும் கலியாண மண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர். சனகன் தனது பெண்களை உரியவர்களுக்குக் கை பிடித்துத்தந்து தாரைவார்த்துக்கொடுத்தான். மாப்பிள்ளைகள் நால்வரும் தங்கள் தங்கள் மனைவியரைக் கைப்பற்றிக் கொண்டு மூன்று முறை தீயை வலம் வந்தனர். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

சீதையும் இராமனும் திருமண மண்டபத்திலேதான் முதன் முறை சந்தித்ததாக வாவ்மீகி கூறுகிறார். வில்லை எவன் வளைப்பானோ அவனுக்கே தன் மகளை மணமுடிப்பதாகச் சனகன் கூறியுளன். அதன்படி வில்லை வளைத்த இராமனைச் சீதை மணக்கிறாள். இவ்வாறு நடக்கும் திருமணத்தில் மாப்பிள்ளை பதினாறு வயதுடையவனாகவும், பெண் முப்பது வயதுடையவளாகவும் அமையலாம். அன்றி மாப்பிள்ளை எழுபது வயதுடையவனாகவும் பெண் பதினாறு வயதுடையவளாகவும் அமையவும் கூடும். 60,000 வயதின் மேலவனான தசரதன் வளைத்திருந்தால் அந்தச் சிறு பெண் அவனுக்கே மனைவியாக நேருமன்றோ. இக்கதை இவ்வாறுளதென்றால் வயதில் மூத்தவளாகிய சீதை இளையவனான இராமனுக்கு மனைவியாக வாய்க்கிறாள் என்றே உளது. இவ்வாறு மணவினையுள் அன்பு எவ்வாறு நிகழும்? இவ்வாறுள்ளது வால்மீகி கூறும் மணவினை நிகழ்ச்சி. கம்பர் இக்கதையை எவ்வாறு கூறுகிறாரெனப் பார்ப்போம்.

கம்பர் கூறுவது வால்மீகி வரலாற்றுக்கு முற்றிலும் மாறுபட்டதே. அவர் இராமனும் சீதையும் முதன் முதல் இரா

மன் மிதிலையில் நுழையும்போதே சந்தித்தனர் என்று கூறு கிறார். அவர்கள் சந்தித்தபோது அவர்கள் ஒருவர்மீதொருவர் மெய்க்காதல் கொள்கின்றனரென்றார். அப்பாடல் வருமாறு:-

"எண்ணரு நலத்தினா ளினைய நின்றுழி
கண்ணொடு கண்ணினை கௌவி யொன்றையொன்
றுண்ணவும் நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ண லு நோக்கினானவளு நோக்கினாள்"

"வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதய மெய்தினர்."

இவ்வாறு கூறிய கம்பர் மேலும் இவ்வன்பின் செயல் களை விரிக்கின்றார். இராமன் பிரிந்தவுடன் சீதை அவனை நினைந்து வருந்துவதும் அந்தி மாலையும் சந்திரோபாலம்பன மும் கம்பர் கூறுகிறார். இராமனும் தனியிடமடைந்து சீதை யை நினைந்து நினைந்து ஏங்குவதாகவும் கூறுகிறார்.

பின்னர் இராமன் வில்லை முறிக்கின்றனன். அச்செய் தியை ஓர் தோழி கூறக் கேட்டுச் சீதை அவ்வாறு வில்லை முறித்தவன் இராமனாகத்தான் இருக்கவேண்டுமென்று குறிப்பில் உணர்ந்தனளேனும் சற்று ஐயமும் கொண்டாள். அதனால் தன் உள்ளம் கவர்ந்த காதலன் அல்லாமல் வேறொரு வன் வில்லை வளைத்திருந்தால் அவனை மணக்காது உயிர் விடுவதெனத் தீர்மானிக்கிறாள்.

"சொல்லிய குறியி னத் தோன்றலேயவன்
அல்லனே லிறப்பனென்றகத்து ளுன்னுவாள்"
[இது கம்பர் கூற்று.]

இனி கம்பர் இத்தோடு அமையாது திருமணத்தின் முக் கிய நாளில் இராஜ சபையிலே இராமனும் சீதையும் சந்திக்கு மாறு முனிவன் செய்தனனென்றும் ஒருவரையொருவர் மறு முறை காண்கின்றனரென்றும் கூறுகிறார். இராமன் சீதையைக் கண்டு மகிழ்கிறான். சீதையும் தன் கை வளை

யைத் திருத்துபவள் போலக் கடைக் கண்ணால் இராமனை நோக்கித் தன் மனத்திலிருந்த ஐயம் நீங்கி மகிழ்ச்சியடைகிறாள். பின் மறு நாள் திருமணம் நடைபெறுகிறது.

இவ்வரலாறெல்லாம் கம்பர் கதையை மாற்றி இம்மண நிகழ்ச்சியைத் தமிழ் நாட்டு மணமாகக் காட்டுகிறார். இது பாராட்டத் தகுந்ததேனும் அந்நிய நாட்டுக் கதையை மாற்றி மயக்கிவிடுதலாலே கம்பர் செயல் வெறுக்கத் தகுந்ததே. ஏனெனில் இவ்வாறெல்லாம் இவர் மாற்றி மயக்காதிருப்பரேல் தமிழ் மக்கள் தம் தமிழ் நாட்டுக் கதைகளையே பாராட்டிப் பார்த்து மகிழ்வார். இவ்வுண்மைத் தன்மையையும் உணர்ந்து இராமாயணத்தின் உண்மைத் தன்மையையுமுணர்ந்து அதைப் பாராட்டாதிருப்பார். இதனால் விளைந்துள்ள தீமைகள் தமிழ் மக்களுக்குப் பல. இனியேனும் அறிஞர் தவறாதிருக்குமாறே இம்மெய் ஆராய்ச்சி வெளி வருகிறது. இனி மேற் செல்லுதும்.

திருமணம் முடிந்த மறுநாள் விஸ்வாமித்திரன் விடை பெற்றுக்கொண்டு இமயமலையை யடைந்தான். தசரதன் அயோத்தியை நோக்கிப் புறப்பட்டான். சனகன் தனது குழந்தைகளுக்கு பல பொருள்கள் தந்து வழியனுப்பச் சிறிது தூரம் சென்று திருப்பினான். சிறிது தூரம் சென்றவுடன் தசரதனுக்கு முன்னால் விண்ணில் பறவைகள் பேரிரைச்சலிட்டன. மண்ணில் மிருகங்கள் வலம் சுற்றிப்போயின. மன்னன் அது கண்டு திகைத்து நின்று வசிட்டனிடம் அதன் பலனை வினவினன். வசிட்டன் அவனை நோக்கி ''பறவைகள் கூச்சலிடுவதால் நமக்கு ஓர் ஆபத்து விளையுமென்றும், மிருகங்கள் வலம் வருவதால் அது நீங்கிவிடுமென்றும் அறியலாம்'' என்று கூறினன். அப்போது மிகவும் கடுமையான தோற்றத்துடன் பரசுராமன் அங்கே தோன்றினான். முனிவர்கள் எல்லோரும் அவனைக் கண்டு அவன் முன்னரே அரசரைக் கொன்று சினம் தணிந்தபடியால் இப்போது கேடு செய்யான் என்று பேசிக்கொண்டு அவனை வரவேற்று இன்சொற் கூறினர். பரசுராமனும் அவர்கள் பூசையை ஏற்று தசரதனு

டைய மகனான இராமனைப் பார்த்து "இராமா! நீ வில்லை முறித்த செய்திகேட்டு உன் வலுவில் ஐயங்கொண்டு இங்கே வந்தேன். உனக்கு உண்மையான பலமிருந்தால் நான் கொண்டுவந்திருக்கும் இந்த வில்லை வளைத்து நாணேற்று; நாணேற்றிவிட்டாயாயின் நான் உன்னோடு கைச்சண்டை செய்கிறேன்" என்று கூறினான்.

அப்போது தசரதன் மிக அஞ்சி "ஆயுதத்தைக் கையிலெடுப்பதில்லையென்று இந்திரனிடம் வாக்குரைத்துப் பிராமணராயிருந்த நீர் இராமனைக் கொல்வீராகில் நாங்களெல்லோரும் இறந்துவிடுவோம்; காத்தருளவேண்டும்" என வேண்டி நின்றனன். பரசுராமனோ அச்சொல்லை செவிக்கொள்ளாமலே இராமனை நோக்கி மேலும் சிவன் வில், திருமால் விற்களின் வரலாறு கூறி "நான் வைத்திருக்கும் இத்திருமால் வில்லை வளைத்து இந்த அம்பைத்தொடு; உன் வல்லமையை அறிந்து நான் உன்னோடு கைச்சண்டையிடுகிறேன்" என்று சொன்னான். இராமன் அவனை நோக்கி "உன் தந்தையைக் கார்த்தவீரியார்ச்சுனனென்னும் ஒருவன் கொல்ல அதற்காக நீ அரசர்களையெல்லாம் கருவறுத்தது நன்று. தந்தைக்குக் கேடு செய்தோரை வேரோடு அழித்தல் பிள்ளைகளின் கடமையே. ஆனால் நீ என்னை இப்போது மிகவும் அவமரியாதையாகப் பேசினாய். அதனால் என்னுடைய வல்லமையைக் காட்டுகிறேன் பார்" என்று அவ்வில்லை வாங்கி வளைத்து அம்பைத் தொடுத்து கோபத்துடன் பின்னரும் "இந்த அம்பு உன் உயிரை வாங்கவல்லதாயிருந்தாலும் நீ பிராமணனாகவும் விஸ்வாமித்திரனுக்கு வேண்டியவனாகவும் இருந்ததினாலேயே உன்னை விட்டேன்; ஆனால் இந்த அம்பு வீண் போகாது. அதனால் நீ நடப்பதற்கு ஏதுவான உன் காலிலுள்ள சக்தியையாவது அல்லது உன் தவ வலியையாவது அடிக்கப்போகிறேன்; உனக்கெது சம்மதம்?" என்று கேட்டான். பரசுராமனோ திருமால் சம்பந்தமான தன் வலிமையை இழந்து திகைத்துத் தன் காலை விடுத்துத் தவ வலியை அழிக்கச் சொன்னான். இராமனும் அவ்வாறே செய்தான். பரசுராமன் மகேந்திர மலையை அடைந்

தான். தசரதன் தானும் தன் பிள்ளைகளும் பிழைத்தது மறு பிறப்பென்று எண்ணிக்கொண்டு எல்லோருடனும் அயோத்தியையடைந்தான். சில நாள் கழிந்தபின் தசரதன் பரதனை அழைத்து "உன் மாமனான யுதாசித்து உன்னை அழைத்துபோக இங்கே வந்திருக்கிறான் என்று கூறினான். அதுகேட்ட பரதன் தன்னோடு சத்துருக்கனை அழைத்துக்கொண்டு கேகய தேசத்தையடைந்தான். பின்னர் இராமன் குடிகளுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து கொண்டு அவர்களுக்கு மிகவும் வேண்டியவனாக நடந்து அவர்களுடைய பிரீதியைத் தேடிக்கொண்டிருந்தான். குடிகளும் இராமனிடம் மிகவும் பிரியத்தைப் பூண்டார்கள். இவ் வரலாற்றை ஆராய்வோம்.

மேலே கண்ட வரலாற்றில் சனகன் தசரதனுக்குப் பின் வந்து வழியனுப்பிய செய்தியைக் கம்பர் கூறவில்லை. பின் அரசன் கண்ட சகுனத்தைப் பற்றி வால்மீகி கூறுகிறார். அவைகளில் பறவைகள் சத்தமிட்டது கேட்டினையும், மிருகங்கள் சுற்றினபோது நன்மையையும் தருவனவாம். இவ்வுண்மைக்கு மாறாகக் கம்பர் கூறுகிறார். அச்செய்யுள் வருமாறு:-

"ஏகும்மள வையின் வந்தன வலமும் மயிலிடமும்
காகம் முதலிய முந்திய தடை செய்வன கண்டான்
நாகம்மன னிடையுங்குள திடையூறென நடவான்
மாகம்மணி யணிதேரொடு நின்றான் நெறி வந்தான்"

இதனால் மயில் வலமும் காகம் முதலிய பறவைகள் இடமும் சென்று தடை செய்தன; அதனால் இடையூறு வருமென தசரதன் உணர்ந்தான் என்பதே அறியலாம். ஆகையினாலே வருமிடையூறு விலகுவதையுணர்த்தும் நற்சகுனமாக மிருகங்கள் வலம் சுற்றிப்போனதை கம்பர் கூறாது விடுத்தார். இடையூறு வருமென உணர்ந்தான் தசரதன் என்று கூறிய கம்பர் அடுத்த பாட்டாக,

"நின்றே நெறியுணர்வானொருநினைவாளனை யழையா
நன்றோ பழுதுளதோ நடுவுரை நீ நயமென்னக்

குன்றே புரைதோளானெதிர் புள்ளின்குறி கொள்வான்
இன்றே வருமிடையூறது நன்றாய் விடு மென்றான்''

''இன்றேவரு மிடையூறது நன்றாய் விடுமென்றான்'' என்று கூறியிருக்கிறார். தான் கண்ட சகுனமாகிய மயிலின் வலப் போக்கும் காகத்தின் இடப்போக்கும் தடைகளே. அவை வரும் இடையூற்றை உணர்த்துவன என்று தீர்மானமாக உணர்ந்த தசரதன் புட்குறியாளனை அழைத்து தான் செய்த தீர்மானம் சரியா, பிழையாஎன உணர்ந்துகொள்ளும்படி உள்ளதைக் கூறுமாறு கேட்கின்றனன். இதற்கு மறுமொழியாக அப்புட்குறியாளன் ''இடையூறு வரும்; ஆனால் அது நீங்கிவிடும்'' என்று புகன்றனன். இதில் கம்பர் முதற் பாட்டில் கூறியபடி மயில் வலமானதும்,காகம் இடமானதும் தடையாய் இருக்க வரும் இடையூறு நீங்கிவிடும் என்பதை புட்குறியாளன் எக்குறி கொண்டியம்பினனோ தெரியவில்லை. ஆதலின் ''அது நன்றாய்விடும்'' என்று கூறுவதற்கு ஆதாரமில்லை. இதனால் வால்மீகி கூறுவதை நன்றாக உணராமலே கம்பர் கூறியவராவார்.

பதின்மூன்றாம் அத்தியாயம்.

வால்மீகியோ பறவைகள் விண்ணில் கூச்சலிட்டன என்று கூறுகிறார். அதையே கம்பர் 'மயில் வலமும், காகம் இடமும் சென்று தடை செய்தன' என்று கூறுகிறார். இவை இரண்டும் தீய சகுனங்களே என்பது தடை செய்வன என்றதனாலும் இங்கு இடையூறுளது என்றதனாலும் தெளிவாக அறியலாம். ஆதலின் இவைகளின் நீக்கமாக நன்மைக்கறிகுறியான சகுனமொன்றும் கம்பர் கூறாது விடுத்தமை தெளிவாம். மேலும் சகுனப் பலனைக் கூறியது வசிட்ட முனிவனென்று வால்மீகி கூற கம்பரோ புட்குறியாளனை அழைத்து வினாவ அவன் கூறினனென்று கூறுகிறார். பரசுராமன் வந்

தவுடனே அவனை முனிவர்கள் வரவேற்றதைக் கூறாது விடுத்ததோடு அவர்கள் நினைந்தவைகளைத் தசரதன் வாயிலாய் உணர்த்துகிறார். கம்பர் மேலும் பரசுராமன் இராமனிடம் வில் வலியைத் தன் வில் வளைத்தலாலே சோதித்துப் பின் அவனோடு கைச்சண்டையிடுவதாகக் கூறுவதைக் கம்பர் கூறாது விடுத்தார்.

கார்த்தவீரியார்ச்சுனனென்ற மன்னன் பரசுராமருடைய தந்தையைக் கொன்றான். அதற்காகப் பரசுராமன் இருபத்தொரு தலைமுறையாக அரசர்களைக் கருவறுத்தான். இது மிகவும் தீயதொரு செய்கை. இத்தீய செய்கையை அறிவும் ஒழுக்கமுமுடையோர் ஒவ்வொருவரும் வெறுப்பார் என்பது திண்ணம். இஃதிவ்வாறாக, இராமன் அச்செயல் தந்தையின் பொருட்டுக் கடமையாகச் செய்தமையின் அது மிக நன்றென்று உடன்பட்டதாக வால்மீகி கூறுகிறார். ஆனால் கம்பரோ அச்செயலில் இராமன் வெறுப்புக்காட்டியதாகவே கூறுகிறார். அச் செய்யுள் வருமாறு:—

''பூதலத் தரசையெல்லாம் பொன்றுவித்
[தனையென்றாலும்
வேதவித் தாயமேலோன் மைந்த நீ விரதம் பூண்டாய்
ஆதலிற் கொல்லலாகா தம்பிது பிழைப்ப தன்றால்
யாதிதற் கிலக்கமாவ தியம்புதி விரைவினென்றான்''

இதன் கருத்து ''நீ கொலைபாதகனாயினும் நான் உன்னைக் கொல்லப்போவதில்லை'' யென்பது. பரசுராமனைக் கொல்லாதிருப்பதற்கு இராமன் கூறியதாகக் கம்பர் கூறும் காரணத்தில் ''வேத வித்தாய மேலோன் மைந்தன் நீ'' என்பது பொருந்தாது. விஸ்வாமித்திரனுக்கு நெருங்கிய உறவினன் பரசுராமன். ஆதலின் விஸ்வாமித்திரனுக்காகஉன்னைக் கொல்லாது விடுகிறேனென்று இராமன் கூறியதாக வால்மீகி கூறியதே பொருத்தமானதாம். ஏனெனில் விஸ்வாமித்திரனுடைய மாணவனாம் இராமன்.

"இந்த அம்புக்கு இலக்கமாவதியாது கூறு" என்று மட்டும் இராமன் கேட்டதாகவும் அதற்கு மறுமொழியாக பரசுராமன் "என் தவ வலியைக் கெடு" என்று புகன்றதாகவும் கம்பர் கூறுகிறார். இதனால் இராமனுடைய தீய குணம் புலனாகவில்லை. வால்மீகியே இராமனைத் தீயவனாகக் காட்டுகிறார். எப்படியெனில் இராமன் பரசுராமனை நோக்கி "உன் காலை முறித்து உன்னை நொண்டியாக்கவா? அல்லது உன் தவ வலியைக் கெடுக்கவா? என்று கேட்டனனாம். இதனால் இராமன் எவ்வளவு தீய மனதுடையவன் என்பது புலனாகிறது. இவனைத் தெய்வம் போல் கூறி மயக்குமாறு இவனுடைய தீய செயல்களையெல்லாம் கம்பர் மறைத்தார்.

பரதனுடைய தாய் மாமனான யுதாசித்து மிதிலையிலேயே வந்து சேர்ந்தமையை வால்மீகி கூறுகிறார். அதைக் கம்பர் கூறுகின்றிலர். மேலும் "உன் மாமா யுதாசித்து உன்னை அழைத்துபோக வந்திருக்கிறான்" என்று பரதனிடம் தசரதன் கூறியதாக வால்மீகி கூற இவ்விவரத்தைக்கம்பர் கூறாது "உன் பாட்டன் பார்க்க விரும்புகிறான்; அதனால் நீ கேகயம் போ" என்று தசரதன் கூறியதாகக் கூறுகிறார். கடைசியாக மட்டும் கம்பர் யுதாசித்தை பரதனுக்குத் துணைச் சென்ற ஓர் தானைத் தலைவனைப்போல் மயங்கிக் காட்டுகிறார். அச் செய்யுள் வருமாறு:—

"உளைவிரி புரவித்தேரு தாசித் தென்றெனும்
வளைமுரல் தானையான் மருங்கு போதப்போய்
இளையவன் றன்னொடு மேழு நாளிடை
நளிர்புனற் கேகய நாடு நண்ணினான்."

இவ்விடத்தில் கம்பர் யுதாசித்தைப்பற்றி விவரமறியாமல் மயங்கியிருக்கவேண்டும்; அல்லது வால்மீகத்தில் கூறியிருக்கும் விவகாரம் இடைச் செருகலாயிருக்கவேண்டும். ஆனால் இடைச்செருகல் என்பதற்குத் தகுந்த ஆதாரமில்லை. ஆதலின் கம்பர் மேலதே தவறு.

பரதன் தன்னுடன்சத்துருக்கனைமட்டும் அழைத்தேகியவனாவான். அவ்விருவரும்தம் மனைவியரை அயோத்தியிலேயே விட்டேகினர். இவ்வாறு பரதனை அயோத்தியை விட்டுப் போகச் சொல்வதற்குத் தசரதன் கூறியகாரணம் அவன் பாட்டன் அவனைப் பார்க்க விரும்புகிறானென்று அவன் மாமனான யுதாசித்து வந்து கூறியதே. கேகய மன்னன்பரதனைப் பார்க்க விரும்பியது அவனுடைய மணத்தின் முன். அவனுடைய மணச்சேதியறிந்தவுடன் அவன் பாட்டனுடைய கடமையாவது புதுப்பெண்ணையும் மாப்பிள்ளையையும் அயோத்தியில் வந்து பார்ப்பதேயாகும். அல்லது பெண்ணையும் மாப்பிள்ளையையுமாக அழைத்துப் போதல் வேண்டும். தசரதனுடைய கடமையும் மணச் செய்தியை யறிவித்துத் தன்னுடைய மாமனாரை அயோத்திக்கு வரவழைப்பதேயாகும். யுதாசித்து வந்து காத்திருந்தானேனும் அவன் காத்திருப்பதை ஓர் காரணமாகக் காட்டிப் பரதனைக் கேகய நாட்டிற்கு அனுப்பியது மிகக் கொடிய செயலே. அப்போதுதான் மணமுடிந்து புது மண இன்பம் நுகர்ந்திருந்த பரதனை வேறு நாட்டிற்கு அனுப்புவதற்குத்தகுந்த காரணம் வேண்டும். பரதன்பிரிந்து போனபின் அயோத்தியில் நடந்தநிகழ்ச்சிகளை வால்மீகிகூறுகிறார். கம்பரோ அவைகளை கூறாது விடுத்தார். அதாவது இராமன்குடிகளோடு நெருங்கிப் பழகி அவர்களுக்கு மிகவும் வேண்டியவனாக நடந்து அவர்களுடைய மனத்தை கவர்கிறான். இவ்வாறு பரனைப் பிரித்து இராமனைக் குடிகளோடு நெருங்கிப் பழகச்செய்வதே தசரதனுடைய நோக்கம் போலும். அதாவது இளவரசுப் பட்டம் பெறுவதற்குத் தகுந்தவனல்லாத இராமனிடத்தில் மிகுந்த அன்பு கொண்டிருந்த வஞ்சகனாகிய தசரதன் பட்டத்துக்குரியவனான பரதன் அயோத்தியிலிருக்கும்போது இராமனுக்கும் பட்டங்கட்ட முடியாதென நன்குணர்ந்து பரதனை நாடு கடத்தி, இராமனைக் குடிகளோடு பழகி அவர்களுக்கு மிகவும் நல்லவனாக நடக்குமாறு செய்து குடிகளுடைய அன்பைப்பெற்று இராமனுக்குப் பட்

டங்கட்டவே இவ்வாறு பரதனை வஞ்சித்தான். இவ்விவரமெல்லாம் அயோத்தியா காண்ட ஆராய்ச்சியில் பரக்க ஆராய்வோம். மக்களிலே பக்கவாதம் செய்யும் இவ்விழிதகைமையனான தசரதனுடைய வஞ்சக இழிகுணந்தானென்னே!

பதினான்காம் அத்தியாயம்.

முடிவுரை.

இத்துடன் பாலகாண்ட ஆராய்ச்சி முடிவடைகிறது. இதன் முதலாவது கட்டுரையில் திருமால் இராமனாகப் பிறப்பதற்கு முன் செய்த தீய செயல்களும், இரண்டாவது கட்டுரையில் கலைக்கோட்டு முனிவனுடைய சிற்றறிவும், ஒழுக்கக்கேடும், மூன்றாவது கட்டுரையில் அஸ்வமேத யாகத்தின் ஆபாசங்களும், நான்காவது கட்டுரையில் தசரதன் அறுபதினாயிரத்து மூன்று மனைவியரை மணந்து அவர்களுடைய நலத்தைக் கெடுத்த செய்தியும், ஐந்தாவது கட்டுரையில் தாடகை, மாரீசன் முதலிய தமிழ்ப் பெருமக்களைப் பற்றி ஆரியர் கூறும் இழிமொழிகளும், அவர்களைத் தீயவர்களைப் போலக் காட்டும் ஆரியர்களுடைய இழிகுணமும், தாடகையைக் இராமன் கொன்ற தீய செயலும், உத்தமனாகிய மகாபலிச்சக்கிரவர்த்தியைத்திருமால் கொன்ற கொலைபாதகமும் வாயு பகவான் குசநாபனுடைய பெண்களிடத்தில் நடந்துகொண்ட தீயவொழுக்கமும், ஆறாவது கட்டுரையில் முருகக் கடவுளைப்பற்றிய ஆரியரின் ஆபாசவரலாறும் அறிவின்மையும் அக்கினியின் இழிவானசெய்கையும் சகரன் குதிரையைத் திருடிய இந்திரனுடைய திருட்டுத் தனமும் தீய ஒழுக்கமும், தன்னுடைய பெரிய தாயாகிய திதியிடம் அவ்விந்திரன் நடந்துகொண்ட வெறுக்கத்தகுந்த நடத்தையும்கொலைபாதகமும் ஏழாவது கட்டுரையில் இந்திரன் அகலிகையென்ற முனிமனை

விபைக் கூடிச்செய்த கூடாவொழுக்கமும், எட்டாவது கட்டுரையில் கோசிக முனிவன் இந்திரனைச் சபித்ததும், அதன் பின் பிதுர் தேவதைகள் தாங்கள் உண்ணும் ஆட்டு விருஷணங்களை இந்திரனுக்குக் கொடுத்துத் தாம் விருஷணமற்ற ஆடுகளைத்தின்னும் புலச்செயலும், ஒன்பது, பத்து, பதினோராவது கட்டுரைகளில் விஸ்வாமித்திர முனிவனுடையவெறுக்கத்தகுந்த வரலாறுகளும், ஏனைய வசிட்டன் முதலிய முனிவர்களுடைய இழி குணங்களும், திருமால், சிவன் விற்களின் வரலாறுகளும், பன்னிரண்டாவது கட்டுரையில் சீதை திருமண மாற்றம் பற்றியும் பதின்மூன்றாவது கட்டுரையில்பரசுராமன் வரலாறும், தசரதனுடைய மக்களிற் பக்கவாதமும் நன்றாக ஆராய்ந்தோம். இனி இரண்டாவது காண்டமாகிய அயோத்தியாகாண்ட ஆராய்ச்சியைத் தொடங்குவோம்.

(இதுவரை செய்துவந்த இவ்வாராய்ச்சி சம்மந்தமான ஆக்ஷேபணைகளுக்குச் சமாதானம்.)

அதன்முன் இதைப்படிக்கும் அன்பர்களுக்குச்சில மொழிகள் கூற விரும்புகின்றோம். இதுவரை நமக்குத்தெரிந்தவரை நமது ஆராய்ச்சியைப் பற்றித் "தமிழ் நாடு" என்ற பத்திரிகையில் சென்ற பங்குனி மாதம் 22-ந்தேதி செவ்வாயன்று "நாயக்கர் பிரசாரம்" என்ற தலைப்பில் இலங்கை வை. வே. துரைசாமி பிள்ளை யென்பவரும், சித்திரை மாதம் 16-ந் தேதி சனிக்கிழமையன்று "நாயக்கரின் பிரசாரம்" என்ற தலைப்பில் சாமிநாதன் என்பவரும் சில அடாமொழிகள் வரைந்துளர். அவைகளைப்பற்றி நாம் மறுமொழி கூறத் தகுந்தவாறு அமையாது அவை மிகவும் அற்பமானவையாக இருந்தாலும் அவைகளை வாசிக்கும் சாதாரண மக்கள் மயங்காவண்ணம் சில கூறவேண்டுவது அவசியமாகின்றது.

முதலில் இலங்கை துரைசாமிப் பிள்ளை அவர்கள் கூற்றை ஆராய்வோம். இவர் ஆரியப் புரட்டை ஒப்புக்கொண்டு "கோசலை யாகம் செய்யவந்த ரிஷியுடன் சோரம்போய் ஸ்ரீராமரைப் பெற்றாளென்பதைப் போன்ற முழுப் புரட்டான

சுத்த ஆபாசமான, பொய்யான அசங்கித வார்த்தைகளை வரைவதால் மதப்பற்றுள்ள இந்துக்களின் இரத்தம் கொதிப்பேறும்'' என்று வரைகிறார்.

நமது பிள்ளையவர்கள் இவ்வாறு எழுதுவதைப் பார்த்தால் இரத்தக் கொதிப்போடு வரைவதாகவே தோன்றுகிறது. மதத்தில் பற்றில்லாதார் மனிதரே ஆகார். ஆனால் மதம் என்பது இது; அதன் உண்மைகளின்னின்னவை என்று நன்றாக ஆராய்ந்து பற்றுக்கொள்ள வேண்டுமேயொழிய ஆராய்ச்சியில்லாது கொள்ளும் பற்று தகுந்ததாகாது. அறிவுடைய மக்கள் ஆராய்ச்சியினாலேயே உண்மைப்பற்று உண்டாகுமென்பர். நமது பிள்ளையவர்கள் கொண்டுள்ள பற்று உண்மை ஆராய்ச்சியாலான பற்றாகாது. நாம் கூறிய கூற்றானது அவர் '' '' இவ்வடையாளமிட்டது; ஆனால் அது நாம் வரைந்துள்ளதின் சுருக்கமாம். அதில் இராமன் என்கிற ஒரு சாதாரண அரசனை, தமிழ் மக்களாகிய நம்மைக் கெடுத்த ஆரியனாகிய அவனை இராமனென்று அவர் தெய்வமெனக் கருதிப் பன்மைப்பட மரியாதையாகப் பிள்ளையவர்கள் வரைவது உண்மைத் தமிழ் மகன் ஒவ்வொருவனுக்கும் இரத்தக்கொதிப்பையே தருர் என்பது உண்மை. நமது பிள்ளையவர்களும் கொஞ்ச அமைதியோடு தயவு செய்து நமது ஆராய்ச்சியைப் படிப்பாரெனின் அவர்களும் இனி இவ்வாறு எழுத முன்வர மாட்டார்களென நம்புகிறோம்.

கோசலை சோரம்போய் இராமனைப் பெற்றாள் என்ற உண்மையைப் பல மேற்கோளுடன் நாம் நிலை நாட்டியிருக்க அதனைக் கொஞ்சமும் ஆராயாமல் அவர்கள் அவையெல்லாம் முழுப்புரட்டான மொழிகளென்கின்றனர். நம்முடைய சொந்த வசனம் ஒன்றும் கூறாது, வால்மீகி முனிவர், அவருடைய சொற்களை மொழி.பெயர்த்த பெரியோர் இவர்களுடைய கூற்றுக்களையே நாம் எடுத்தியம்பியது முழுப்புரட்டாயின் வால்மீகி முனிவரும் ஏனைய பெரியோரும் முழுப் புரட்டாகவேண்டும். ஆதலின் நமக்கோர்குற்றமுமின்றாம். ஆகையால் நமது பிள்ளையவர்களை மிகவும் அமைதியுடனும்,

பொறுமையுடனும் நன்றாக ஆராய்ந்து பார்த்து உண்மையை தெரிந்துகொள்ளவேண்டுகின்றோம். நண்பர் சாமிநாதனுடைய சொற்களின் ஆராய்ச்சி விரியுமாதலின் அதனை இக் கட்டுரையின் தொடர்ச்சியாக அடுத்த காண்டத்தில் விரித்தெழுதுவோம்.

இனி 'தமிழ் நாடு' என்றபத்திரிகையில் நாயக்கர் பிரசாரமென்ற பெருந்தலைப்பின் கீழுள்ள 'நாயக்கரின் கீமாயணம்' என்ற சிறுதலைப் பிட்டு திரு. சாமிநாதன் என்பவர் எழுதியுள்ளதை ஆராய்வோம்.

முதலில் அவர் "குடி அரசி"ல் இராமாயணக் கட்டுரைகளில் தாடகை என்பவள் சிறந்த பதிவிரதா சிரோமணி என்றும், இராவணன் உண்மையான கடவுள் பக்தி மிகுந்த அரசனென்றும், அகலிகை கௌதமனாக மாறுருக்கொண்ட இந்திரனுடன் மோசம்போய்ச் சேரவில்லையென்றும், இந்திரனைக் கண்டவுடன் அவனழகிலீடுபட்டுத் தெரிந்தே அவனுடன் கூடினாளென்றும், தசரதன் புத்திரகாமேஷ்டி யாகம் செய்து வைத்த ரிஷிகளிடம் தன்னுடைய பத்தினிமார்களை ஒப்படைத்தான் என்றும் இன்னும் அனேக விஷயங்களை இமயமுதல் குமரி வரையுள்ள இந்திய மகாஜனங்களால் நல்லவர்களாக எடுத்துக் காட்டிக் குறிப்பிடும் இராமாயண காவியத்தின் பாத்திரர்களைக் கெட்டவர்களாகவும், கெட்டவர்களாக வழக்கச் சொல்லிலேயே வழங்குபவர்களை நல்லவர்களாகவும் மாற்றி இதுவரை இந்திய நாட்டினவர்களுக்கு விளங்காத உண்மை வெளி வருகின்றது. இந்த உண்மையான விஷயங்கள் இவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தன?" என்று வினவியிருக்கிறார்.

இவரைப்போலும் கல்வி அறிவில்லாத மக்கள் பல மலிந்துள்ளமையாலேயே நமது நாடு பாழான நிலைமையிலுள்ளது. இந்தச் சாமிநாதன் கல்வி அறிவற்றவர் என்பதை நாம் அவர் எழுதிய கட்டுரையினாலேயே நன்கறியலாம். நாம் இக் "குடி அரசி"ல் இராமாயணத்தைப் பற்றி எழுதி வரும் செய்திகள் நமது சொந்தமல்ல; வால்மீகி முனிவர் வடமொழியில் எழுதி

யுள்ள இராமாயணத்தை பண்டித அனந்தாச்சாரியார், பண்டித நடேச சாஸ்திரியார், சி. ஆர். சீனிவாசய்யங்கார் பி. ஏ. முதலியவர்கள் தமிழிலும், பண்டித மன்மதநாததத்தர் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்திருக்கின்றனர். அவர்களுடைய கூற்றையே கூறிஆராய்வோம் என்று கூறிவருகிறோம். நமது சாமிநாதன் அம்மொழி பெயர்ப்புக்களில் ஒன்றையேனும் வாங்கிப்படித்தனரா? என்று கேட்கின்றோம். அவர் இக் "குடி அரசை"ப் படிக்குமுன் இந்நூல்களைப் படிக்காதவரேனும் இதனைப் படித்தபின்னராயினும் அநியாயமாகக் "குடி அரசி"ல் செய்திகள் வருகின்றனவே. இவைகள் உண்மைதானா என்று அவைகளைப் படித்துப்பார்த்தனரா? இவ்வாறு சுயபுத்தியுமின்றிச் சொற்புத்தியும் கேளாமல் அறிவு பெறவேண்டுமென்ற எண்ணமும் இல்லாமல் சுவாமிநாதன் என்ற பெயர் பத்திரிகையில் வரவேண்டும்; வாயில் வந்ததை உளறலாம். என்ற எண்ணம் மட்டும் கொண்டு கட்டுரை எழுதவந்த இந்தச் சாமிநாதனின் நிலை மிகவும் பரிதபிக்கத் தக்கதே! ஆசிரியர் திருவள்ளுவ நாயனார் தெய்வத் திருக்குறளில் "அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொளல்" எனத்திருவாய் மலர்ந்தருளிய இலக்கணத்துக்கு இவர் ஓர் நல்ல எடுத்துக்காட்டானார். அரங்கிடாமல் வட்டாடுவோரும் நூல் அறிவில்லாமல் பேசவும் எழுதவும் முன் வருவோரும் எக்காலத்தும் இருப்பதனாலேயே தெய்வப் புலவர் இவ்வாறு கட்டளையிட்டனர்போலும். இனியாவது இச்சாமிநாதன் நன்றாகப்படித்துவிட்டுப் பின்னர் எழுத முன் வருவாராக.

ஆரியப் பார்ப்பனர் மயக்கதில் எவ்வாறோ அகப்பட்டு மயங்குபவரோ? அன்றி அவ்வகுப்பினரில் ஒருவரோ இச்சாமிநாதன்? மேலே நாம் கூறியுள்ள மொழிபெயர்ப்பாளர் நால்வரில் அனந்தாச்சாரியாரும் சீனிவாசய்யங்காரும் வைணவ சமயத்தினர். மற்றிருவரும் ஆரியரே. இவர்களெல்லோரும் அகலிகை சோரம் போனமையையும் தசரதன் தனது பத்தினிமார்களை ரித்விக்குகளிடம் ஒப்படைத்ததையும் ஒப்புக்கொண்டு உண்மையை உள்ளவாறெழுதியிருக்க அவைகளைத்

தாமும் படியாமல் படித்த நமது கூற்றையும் கேளாமல் இவர் பிதற்றுரை பல வரைகின்றனரே? கொஞ்சம் எழுதப்படிக் கத் தெரிந்த அரைகுறை படிப்பாளியாகிய நம் சாமிநாதனே ஆரியப்புரளியில் இவ்வாறு ஏமாறிமயங்கி கிடந்தனரென்றால் கொஞ்சமும் படியாமலிருக்கும் சாதாரண மக்களின் நிலைமை கூறவும் வேண்டுமோ? தாடகா பிராட்டியாருடைய பெருமை களை இவர் தேவாரத்தைப் படித்து உணர்வாராக.

இனி அவர் தமக்கே பொருள் படாதெழுதும் வெற்று ரைகளை விடுத்து அவர் பின்னெழுதும் "இராமாயணத்தில் அனேக ஜனங்கள் வெகுவாய்த் தெரிந்துகொண்டிராத—ராம னுடைய குற்றமெனக் கருதிக்கொண்ட ஒரு பார்ப்பனக் குழந் தையின் மரணத்துக்காக ஒரு சூத்திரனைச்சிரச்சேதம் செய்த கதையை எடுத்துக் காட்டவந்த நாயக்கருக்கு, எல்லாராலும் ஸ்பஷ்டமாய் தெரிந்திருக்கும்படியான விஷயமாகிய குகனென் னும் படகோட்டி விஷயத்தில் ஜாதி வித்தியாசமின்றி அவ னை அன்போடாதரித்து அவனையும் சகோதரர்களில் ஒருவ னாகச் சேர்த்துக்கொண்ட உண்மை நெறியும், வானரர்களை வித்தியாசமின்றி அன்பினால் பிணித்துக்கொண்டு அவர்களு டன் ஒன்றாயிருந்து காலங் கடத்திய நீதிமுறையும், மானிட வகுப்பைச் சேராத சடாயு என்னும் பக்ஷியின்மேல் வைத்த அன்பினாலதன் மரணத்துக்காக கண்ணீர்விட்டு கதறியழுது அதைப் புள்ளினமெனக் கருதாது அதற்கும் மனிதர்களுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களைத் தானே செய்த நேர்மை யும், சபரியென்னும் ஒரு ஏழைப் பெண்ணாலளித்த உணவு களை உண்ட அன்பின் பெருக்கும், அரக்கர் குலத்தைச் சேர்ந்த விபீஷணரின் நேர்மையான நடத்தையைக் கருதி அவ ரை அரக்கனெனத்தள்ளாமல் தன்னுடன் சேர்த்துக்கொண்ட சமத்துவ நீதியும், நிராயுதபாணியாய் தன்னுடைய பாணத்தில் ஏற்படும் மரணத்தைத் தவிர வேறு கதியற்றவனாக நின்ற ராவணனை "இன்று போய் நாளை வா" என்று சொன்ன அரச நீதியும், வண்ணான்தானே என்று அலட்சியம் செய் யாமல் அவனை ஒரு பிரஜா உரிமையுடையவனெனக் கருதி அவன் சொல்லுக்கும் தான் கட்டுப்படவேண்டும் என்னும்

காரணத்தால் தன்னுடைய மனைவியாகிய நாட்டினரசியைக் காட்டிற்கனுப்பிய நன்னடத்தைகளும் இராமன்பால் இருக்க, சமத்துவ வேஷம்பூண்டநாயக்கருக்கு இவைகளெல்லாம்விளங் காமல் அந்தஒருவிஷயம் மட்டும் அடிக்கடி பல சமயங்களிலும் நிதர்சனமாய்க் கொண்டுவருகின்ற நேர்மைதானென்னே!" என்ற கூற்றினை ஆராய்வோம். மேலேகண்ட கூற்றுகளைப் படித்துப்பார்த்தால் அது ஓர் பார்ப்பனன் தமிழாகவே காணப்படுகிறது. ஆதலின் சாமிநாதன் என்பவர் ஓர் பார்ப்பனராதல்வேண்டும். அன்றி பார்ப்பனன் பெற்ற பிள்ளையை (கட்டுரையை) தாம்பெற்ற பிள்ளையாகக் கொண்ட ஓர் பார்ப்பனரல்லாதாராகவேண்டும். இவர் பார்ப்பனரல்லாதாரெனின் இவர் பிறருக்குப் பிறந்த பிள்ளைகளைத் தன்னவையெனக் கொண்ட தசரதன் செயலுக்குப் பரிந்து பேசுதற்கு ஒப்பமிட்டது வியப்பாகாது. அன்றி பார்ப்பனரேயெனின் இவ்வாறெழுதுவது அவரியல்பே. இத்தகைய கட்டுரையை வெளிப்படுத்தியவரின் பெருமைதானென்னே! இதனால் 'தமிழ்நாடு' ஆசிரியர் பெருமையும், கல்வியும், ஆராய்ச்சி வன்மையும் இனிது புலனாகும். குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்புகளும் உள. இனி மேலே குறித்துள்ள கூற்றுகளை ஆராய்வோம்.

இராமன் ஓர் பார்ப்பனனுக்காக ஓர் சூத்திரனுடைய தலையை வெட்டிய அநியாயத்துக்குச் சமாதானம் கூறுவதை விடுத்து நமது சாமிநாதன் வேறு பல விரித்தார். விரித்தமையும் மிக அழகிதே. இராமனைப்பற்றிய வேறு சில செய்திகளைக் குறித்தார். அவைகளை வரும்போது விவரமாக ஆராய்வோமேனும் ஈண்டு சுருங்கக் கூறுவோம். குகனுடைய உதவியில்லாமல் போனால் இராமன் கங்கையைக் கடத்தலரிது. ஆதலின் அவனுடைய உதவி பெறுதற்காக இராமன் அவனை அவ்வாறு பேசி மயக்குகிறான். இராமன் ஓர் ராஜ

தந்திர நிபுணனே. குரங்குகளோடு அவன் கூடி வாழ்ந்தது அவன் பெற்ற சாபப் பயனேனும் அவன் வாலியை மறைந்து கொன்று சகோதர துரோகியாகிய சுக்கிரீவனோடு நட்புக் கொண்டது, பரதனாகியதனது சகோதரனுக்குத் துரோகம் நினைத்த அவ்விராமனுக்கு இயல்பானதே. இதுபோலவே சகோதர துரோகியாகிய விபீஷணனிடம் இராமன் நட்புக் கொண்டதும் அவனுக்கு இயல்பும் இராஜ தந்திரமுமாம். இவ்வாறாகஇவ்விருவருடனும்நட்புக்கொண்டதை இராமனுக் கும் பெருமையானதென மயங்கினார் சாமிநாதன்.

பேராசைக்காரனும் சகோதரத் துரோகியுமாகிய விபீஷணனைத் தன் பக்கம் சேர்க்காதிருந்தால் இராமன் இராவணனைக் கொன்றிருத்தல் இயலாது. "இராவணனுடைய நெஞ்சில் அம்பெய்து கொல்" எனக்கூறி அருகே நின்றானே பாவி விபீஷணன்! அபிபாபம்!! அபிபாபம்!! இன்று போய் நாளை வாவென இராமன் கூறியதாகக் கூறுவது இராமன்பால் பற்றுடைய வால்மீகியும் கம்பரும் என்பதைச் சுவாமிநாதன் உணர்வாராக. இனத்துரோகமும் இனத்துரோகச் சேர்க்கையும்தான் சுவாமிநாதனுக்குச் சமத்துவமாகத் தோன்றுகின்றனபோலும். தனக்கு உதவி செய்த சடாயுவுக்கு மனமிரங்கியது உலக இயற்கையே. நல்லுணவு கிடையாது திண்டாடிய இராமனுக்கு சபரி நல்லுணவு தர அதை அவன் ஆவலுடன் வாங்கி உண்டதும் அவனுக்கு ஓர் பெருமையோ? நன்றாகச் சாப்பிட்டதை ஓர் பெருமையாகக் காட்டியதும் சுவாமிநாதனுக்கு ஓர் பெருமையே. இவைகளால் இராமனுடைய துரோகச் செயல்கள் இனிது புலனாகும். இராமன் சூத்திரனைக்கொன்றது அதிபாதகமே. அதனால் இராமன் சிறந்த அதர்மராஜனே என்பதும் விளங்குகிறது. இனி சீதையைப் பற்றி அவர் கூறுவதைக் கவனிப்போம்.

இராமன் சீதையின் கற்புடைமையில் ஐயுறுகின்றான். சீதையை இராவணன் பற்றி மடியில் வைத்துப் போனதும் அவனுடையவசமாக அவள் பத்துமாதம் வாழ்ந்ததுமே அவ்வையுறவுக்குக் காரணம். சீதையும் தன்னுடல் இராவணன் வசமிருந்ததை ஒப்புக்கொள்ளுகிறாள்.

இராமன் அரசாளும் நாளையிலே ஓர் வண்ணான் அந்நியனோடு வாழ்ந்த சீதையை இராமன் சேர்த்துக்கொண்ட இழிசெயலை மிக இழித்துப் பேசுகிறான். அதனால் மானம் பொறுக்கமாட்டாமல்இராமன் நிறைந்த கர்ப்பிணியாகஇருந்த சீதையைக்காட்டுக்கு வஞ்சகமாக அனுப்புகிறான். இவ்விழிந்த செயலைப் பாராட்டிச் சாமிநாதன் "வண்ணான்தானே என்று அலட்சியம் செய்யாமல் அவனும் ஒரு பிரஜா உரிமையுடையவனெனக்கருதி அவன் சொல்லுக்கும் தான் கட்டுப்படவேண்டுமென்னும் காரணத்தால் தன்னுடைய மனைவியாகிய நாட்டின் அரசியை காட்டிற்கனுப்பிய நன்னடத்தைகளும்" என்று எழுதினார். பிரஜா உரிமை பற்றியும் அரசாளுமுறை பற்றியும், நன்னடத்தைபற்றியும் இச்சாமிநாதனுக்குள்ள அறிவு மிக அழகியதே. இவ்விழிந்த ஆராய்ச்சியையும் 'தமிழ்நாடு' வெளிப்படுத்தியதே! அறிவாளர் நகையாடக்கூடிய இத்தகைய கட்டுரைகளை வெளிப்படுத்துவதினும் நல்ல கட்டுரைகள் கிடையாதுபோலும். வெள்ளைத் தாள்களை மடித்துச் சந்தாதாரர்களுக்கு அனுப்பின் மிக நலமாக இருக்குமே.

கேவலம் வண்ணான் ஒருவன் தன் மனைவியின் நடத்தையில் ஐயுற்றது காரணமாகத் தன் தன் மனைவியை அதிலும் பூரண கர்ப்பிணியை ஒருவன் காட்டுக்கு அனுப்பினானென்றால் அவனைப் போலும் அறிவில்லாத முழு மூடன் ஒருவன் இவ்வுலகத்தில் இதுகாறும் தோன்றியிருப்பானா என்பதைச் சாமிநாதன் சிந்திப்பாராக. இராமன் இதனால் மிகவும் முழு

மூடனாதல்வேண்டும். அன்றியும் இரக்கமற்ற பாவியுமாத
வேண்டும். தன்னுடைய மனைவியும் பூரண கர்ப்பிணியு
கிய சீதையென்ற ஒரு பெண்ணிடத்திலேயே இவ்வாறு ம
கத்திலும் கேடுகெட்ட மிருகம்போல நடந்துகொண்ட இ
மன் தவம் செய்துகொண்டிருந்த ஓர் சூத்திரனுடைய தல
யை வெட்டினானென்பது ஓர் ஆச்சரியமன்று. விவேகான
தர் கூறுகிறாரென நம்பும் இடைச்செருகலெனும் நம்பிக்கை
யைச் சாமிநாதன் விட்டொழிப்பாராக. மேலும் சீதை கற்பி
ழந்தவளாகாதிருந்தால் அவள் கணவனாகிய இராமன் ஐயுற்
றதோடு நில்லாமல் உறுதிகொண்டு அவளைக் காட்டுக்கு
அனுப்பியிரானன்றோ? அவரது பாரதக்கூற்றாராய்ச்சியை
வரும்போது எழுதுவோம். அதற்கு இடனன்றாம். ஆத
லின் மேற்செல்லுதும்.

பால காண்டம் ஆராய்ச்சி முற்றிற்று.

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வே. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம்	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...	,,	0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...	,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன?	,,	0 3 0
கடவுள்	,,	0 5 0
நான் சமுசயவாதியானதேன்?	,,	0 3 0
வால்ட்டேர்	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு	,,	0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மேக்கேபி எழுதியது.

மதப்புரட்சி	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்	0 6 0
ஷை	2-ம் பாகம்	0 5 0

அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்		0 4 0
ஷை	2-ம் பாகம்	0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும்	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ...	,,	0 5 0
ஷை காலிக்கோ பயிண்டு ...	,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.)		0 4 0

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ஈ. வெ. ரா. சீர்திருத்த மகாநாட்டு உபந்யாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பார்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ. ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23.	கத்தோலிக்கர் வீண் கூச்சல்	0	0	6
24.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
25.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
26.	மனுநீதி விளக்கம்	0	2	0
27.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
28.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
29.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
30	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
31.	கர்ப்ப ஆட்சி	0	6	0
32.	ராவணப் பெரியார்	0	5	0
33.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
34.	நரகம் எங்கே?	0	2	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.